உ

கணபதி துணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ. சிவஞானபாலைய தேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

சோணசைலமாலை.

சிவநாமமகிமை.

இவ்விரண்டும்

மேற்படி ஆதீனத்துச்

சிதம்பரம் - ஈசானியமடம்

ஸ்ரீ. இராமலிங்கசுவாமிகளவர்கள்

மாணாக்கருள் ஒருவராகிய

வ. திருவேங்கடநாயுடுவினால்

[illegible] எழுதிய உரையோடு,

சென்னை.

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

விகாரிஞு ஆனிமீ.

Registered Copy Right.

உ

கணபதி துணை.

சிறப்புப்பாயிரம்.

நேரிசை வெண்பா.

ஏறூருஞ் சோண சயிலனுக் கெஞ்ஞான்றும்
பூணார மாலை புனைந்தணிந்தான் - மாறாப்
பவப்புணரி நீந்தியிடப் பாரதிநூல் செய்த
சிவப்பிரகா சக்குரவ னோங்கு.

பாரதிநூ மரக்கலம்போலும் [illegible]

சென்னை புதுவண்ணாரப்பேட்டை: வித்தியாவிநோத
சென்னை முத்தியாலுப்பேட்
பூர்வகலாப் பிரசங்க நிகேதனசபை
ஆகிய இவற்றின் தலைவர்.

கடவுள் துணை.

முகவுரை.

வழிபடுத் தொடங்கிய மன்னுமெய்க் கருமமும்
பழிபடா தினிதருள் பரம்பர னடிகளுந்
தகைமிகுங் கலையுணா வெமக்குமே தருமருட்
டிகழிரா மலிங்க தேசிக னடிகளும்
மனமொழி மெய்களின் வணங்கியான் சால்புறு
மினமிகு மறிஞருக் கிசைக்குவின் னட்பம் —

சோணசைலமாலை யெனப்படும் இந்நூல் இற்றைக்கு உ௱ச வருடத்திற்கு முனிருந்த நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாசஸ்வாமிகள் திருவண்ணாமலைக்குத் தரிசனார்த்தமாக எழுந்தருளிக் கிரிப்பிரதக்ஷிணஞ் செய்துவரும்பொழுதே தெய்வத்திருவருள் கைவரக்கிடைத்தலின் அப்பிரதக்ஷிணமு[illegible]ள் ஆதியில் அருளிச்செய்யப்பட்டது. இது, முன்னீரடிகளில் நூலாசிரியர் முறைப்பாடும், பின்னீரடிகளில் அம்மலையைப்பற்றிய அதிவிசித்திர கற்பனாலங்காரங்களும் அடங்கியதாய்த் தமிழில் அபிவிருத்தி அடையக்கருதும் மாணாக்கர்களுக்குக் கல்வி அறிவு ஒழுக்கங்களை உண்டாக்கிச் சிவபத்தியை விளைக்கத்தக்கதாக உள்ளதென்பது, இதில் சில செய்யுட்களைக் கற்றதனையானே இனிது விளங்குமாகலின் யான் விசேஷித்தெழுதவேண்டுவதில்லை இதனிற்க.

இத்தகைய நூல்களுக்கு உரையெழுதப்புகுவோர் பற்பல நூல்களிற் பயின்றுபெற்ற நுண்ணறிவுடையராயிருந்தாலன்றி அவருரை சிறவாதென்பதை யறிந்திருந்தும், மிக்க அரிய நூல்களிற் பயிற்சியில்லாத சிறியேன் என்னுரையையேயிட்டால் திருக்கைலாச பரம்பரை தருமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் சாணியமடம் ஸ்ரீமத் - இராம லிங்கசுவாமிகளிடம் பாடங்கேட்டபொழுதும் [illegible] கருணாநிதிய [illegible] தசாரம் [illegible] காஞ்சி [illegible] உருவாறு ஒருரை எழுதி, [illegible] புதுவை [illegible] வித்தியாவிருத்தி [illegible] சபையைச் சார்ந்த [illegible] முதலியாரு [illegible] டையாவகலாப் பிரசங்க [illegible] ராமாகிய [illegible] புண்ணியாக [illegible] திரா [illegible] சிடப்பு முடிந்தனை.

இதனையறிய [illegible] சிவ [illegible] அதனை [illegible] [illegible] பரமபதி [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இரா [illegible] [illegible] ஆக்ஞையை [illegible] [illegible] ஆரிய [illegible] நூல்களிற் பயின்ற கல்விமான்களை [illegible] [illegible] இக்க [illegible] [illegible].

இங்ஙனம்

தாழ்மையுள்ள

க. வீ. திருவேங்கடன்.

போல அழுகிதன்னும் முத்திவீட்டை-த்தருதலால் சோணசை லத்தை அம்மந்தரமாகவுங் கூறினார். புரி நான்கும் வினைத்தொகை தாகைப்பொருளன. நலம் இது போலியாய்ப் புலன் எனவரும். துய்ரம் இதில் அம் சாரியை. தமியேன் இதில் தமி - தனிமை. நணுரவாளை - [illegible] ; பான் வினையெச்சவிகுதி. (கரு)

நீரினி லெழுமொக் குளியிழி யுடம்பு நிலையென
நினைக்குமா னந்த, வாரிதி படிய வறிந்திடா தழலு
மடமையே னுய்யுநா ளுளதோ, வேரியல் பதுமன்
றேடுமக் கேழ மின்றுணை யடிகளைத் திடம்போற், சா
ரலி னேனை பருட்புரூஉஞ் சோணசைலனே கைலைநா
யகனே.

(இ-ள்.) வா இயல் பதும் மூன் றேடும் அக்கேழல்-அருகமை ந்த தேவர் இருவுடையை முன் [illegible] அந்தத் திருமான இயவராகப், இவர் [illegible] கொ [illegible] டம்போல் - இ [illegible] தும் அ [illegible] இருவடிகளை [illegible] ழியினைக் கொண்டுதல் போல, சாரலின் [illegible] பருப்புரூஉம் சோணசைலனே கைலைநாயக னே, - பக்கங்களிற் படிந்த மேகங்கள் யானைகளாய் உருவுகொண்டு (?) டுதோன்றும் சோணசைலனே! கைலைநாயகனே!, நீரினில் எழும் மொக்குளின் அழி உடம்பு நிலையென - நீரினிடத்தே தோன் றுகின்ற குமிழியைப்போல (காலநியதியின்றி) அழியக்கூடிய உட லை, நிலையுடையதாக நினைந்து, நினைக்கும் ஆனந்த வாரிதி படிய அறிந்திடாது அழலும் மடமையேன் உய்யும் நாள் உள தோ - அழியாத் தன்மையை யுடைய பேரின்ப சமுத்திரத்தில் மூழ்குதற்கு அறியாது வெகுளாசனையிலழுழலும் அறியாமை யுடைய யான் உய்யுங்காலமும் உளதோ? (அறியேன்.) எ-று.

மொக்குள் இக்காலத்து அழியுமென்னும் நியதியின்றியழிதல் நிச்சயமுடையதாய் நிற்றல்போல நிற்றலால், உடலுக்கு அழியு டம்பென்று விசேடணங்கொடுக்கப்பட்டது. நிலையாதனை நிலை

யென்றுகருதி நிலையுடையதை விரும்பாதுழலுதலால், 'மடமையேன்,' என்றார். உளதோ உண்டோ என்பவற்றிற்கு அதத்கைய அனுபவங்களை உண்டாக்கவேண்டுமென்பது கருத்தாக வருமிடந்தோறுங் கொள்க. நாடிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம். அக்கேழல் அகரம் சிறப்புப் பொருளது. இன்றும் என்பதில் உம்மை இறந்தது தழீஇயது. (கச)

கருத்திடை நினது கருணைமா மேனி கண்டெழுத்
தைந்துநா வியம்பச், சிரத்தினி லமைத்த கரத்தொடு
நினையான் றினம்வலம் புரியுமா றருளாய், வரத்திரு
முடியின் மதிதிரு முடியின் வனைந்துகந் தரத்தினி
லிருள்கந், தரத்தினி லிருத்தி விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) வரம் திருமுடியின் மதி திருமுடியில் வனைந்து - மேன்மை தங்கிய திருமுடியின்கணிருந்த சந்திரனை (இம்மலை வடிவங்கொண்ட இப்போதும்) அழகிய உச்சியின்கண் சூடியும், கந்தரத்தினில் இருள் கந்தரத்தினில் இருத்தி - முன் கண்டத்திலமைத்த விஷக்கருமையாகும் இருளை இப்போது குகைகளிடமாக இருத்தியும், விளங்குறும் சோணசைலனே கைலைநாயகனே - பிரகாசிக்கின்ற சோணசைலரே! கைலைநாயகரே!, கருத்திடை நினது கருணை மாமேனி கண்டு - மனத்தின்கண் தேவரீருடைய கருணைமயமான சிறந்த திருமேனியைத் தியானித்துக் கொண்டு, ஐந்து எழுத்தும் நா இயம்ப - பஞ்சாக்கரங்களையும் நா உச்சரிக்க, சிரத்தினில் அமைத்த கரத்தொடும் - சிரத்தின்கண் குவித்த கைகளோடும், நினை யான் தினம் வலம் புரியும் ஆறு அருளாய் - தேவரீரை அடியேன் நாடோறும் பிரதக்ஷிணஞ்செய்து வாழும்படி அருள் புரிவீராக, எ - று.

தேவரீரை மனோவாக்குக்காயங்களால் வழிபடல் அருளல் வேண்டுமென்பார், 'கருத்திடைக்கண்டு எழுத்து நாவியம்ப சிர

க்கமைத்துக் கரத்தொழும் வலம்புரியுமாறு அருளாய், என்றனர். கண்டு புரியுமாறெனக் கூட்டுக. மதி இப்பொழுதும் வளைந்த மையத்துத் தவழப் பெறுதல். கந்தரம் - கண்டம், குகை. (கரு)

பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப் பயனென
வுணர்ந்துநா டொறுமா, ரூரனா ரவையி னிகழ்ந்த
சொற் றுதியி னுவக்குநின் பதந்தொழ வருளாய், பேரு
லர் மண்டச் சுவர்மதின் மிசைப்பா யிலங்குறு மண்ட
கோளகையாச், சாருமா லயத்தி லிலிங்கமாஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) ஏர் உலாம் அண்டம் சுவர் மதில் - அழகமைந்து விளங்கும் இவ்வண்டச் சுவரே ஆலயத்தின் மதிலாகவும், இலங்குறும் அண்டம் கோளகை மிசைப்பா ஆக - பிரகாசிக்கின்ற அண்டத்தின் மேலே ஆலயத்தின் மேற்பாலாகிய விமானமாகவும், சாரும் ஆலயத்தில் இலிங்கம் ஆம் சோணசைலனே கைலைநாயகனே - சார்ந்துள்ள இவ்வண்டமென்னும் ஆலயத்தில் இலிங்கவடிவமாக எழுந்தருளிய சோணசைலரே! கைலைநாயகரே!, பார் எலாம் இகழும் இகழ்ச்சியும் புகழ்ச்சி பயன் என உணர்ந்து - உலகமெலாம் இகழும் இகழ்ச்சிமொழியையும் புகழ்ச்சி பயனுடையனவாகத் தேவரீர் கொண்டருள்வீரெனத் தெளிந்து, ஆரூரன் ஆர் அவையில் இகழ்ந்த சொல் - திருநாவலூரர் தக்கவர் நிறைந்த சபையின்கண் இகழ்ந்த சொற்களை, நாள் தொறும் துதியின் உவக்கும் நின் பதம் தொழ அருளாய் - தினந்தோறும் துதிபோல விரும்பியருளும் தேவரீருடைய திருவடிகளை அடியேன் தொழத் திருவருள் பாலிப்பீராக, எ-று.

ஆரூரர் திருவெண்ணெய்நல்லூரில் மணப்பந்தரிலே பித்தனே பேயனே என்றிகழ்ந்தமையே யன்றித் திருவாரூரில் "வாழ்ந்து போதீரே" எனவும், ஓணகாந்தன்றளியில் "உங்

களுக்காட்செய்யமாட்டோம்" எனவும், திருவொற்றியூர் "மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய்." எனவும், இவ்வண்ணம் பற்பல தலங்களில் துதித்தமை குறிப்பிட்டார். 'ஆரூரனாகையினிகழ்ந்தசொல்,' என்றும், சிவபெருமான் மலைவடிவாதமையின் அவ்வடிவுக்கிசைந்த ஆலயம் இல்லையென்பதை 'மா 'அண்டச்சுவாமதில் மிசைப்பா வெண்கோணையைச் சார்பாலயம்,' என்றும், இகழ்ச்சியையும் பயிர்ச்சியாகக் கொள்ளுந தெய்வம் உம்மையல்லது கண்டிலோமாகையால் எமது திருவடிவழிபாடே வேண்டுமென்பார் 'நின் கந்தோய்' என்றும் கூறினார். மிசைப்பா-மேற்பாட்டு. மிசைப்பாவென்னும் பாடங்கொள்ளின் பெற்பகுதியென பொருளுரைக்க. கோணையார ஈறுகெட்ட வினையெச்சம். நின்றாங்கின் சுந்தோயுமென முடித்தலுமாம். (௪௮)

இந்தியங் கரண முடலமவை யுசகி யிருண்மலப் படலமுங் கீறிக், கந்தமு மலரு மெனநினை யென்னிற் காண்பறக் காணுமா றருளாயே, வந்தவொரு களிறு முழுவையுங் கொன்றவப் பலியை தவிர்ப்பவண்ணிந்த, தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோணசைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) வந்த ஒரு களிறும் உழுவையும் கொன்றபலியைத் தவிர்ப்ப - தாருகவனமுனிவர் ஏவ வந்த களிறொன்றும் புலியொன்றும் கொன்றுதருவிய மிக்கபகையினை நீக்கிக்கொள்வதற்கே, என்னுகந்த தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோணசைலனே கைலைநாயகனே - அளவிறந்த யானைகளையும் புலிகளையும் வளர்த்தருளுஞ் சோணசைலனே! கைலைநாயகனே!, இந்தியம் கரணம் உடலம் வேறாக்கி - பஞ்சேந்திரியம் அந்தக்கரணம் தேகம் இவற்றினை (யானல்லவென்று) வேறுபடுத்தி, இருண்மலம் படலமும் கீறி - இருண்ட ஆணவமல மறைப்

வினையுஞ் சேதித்து, வினை என்னில் செந்தாமரை மலரும் என காண் பு அற காணும் நாள் உளதோ - தேவரீரை என்னுள்ளே மணமு மலரும்போல ஒற்றுமைப்பட ஊனக்கண்ணாலன்றி ஞானக்கண் ணால் காணுங்காலமும் உண்டோ? (அறியேன்.) எ-று.

இந்திரியம் - மெய் வாய் கண் மூக்கு செவி. கரணம் - மனம் சித்தம் அகங்காரம். அறியாமையால் ஆன்மாவென அபி மானிக்கப்பட்டிருந்த இந்திரியாதிகளை வேறாக்கி, அவ்வபிமான த்திற்குச் சாதனமாயிருந்த இருவினைமலப் படலத்தையுங்கீறி, செந்தாமரை மலர் பதுமம் ஒன்றித்து நிற்றல்போல ஆன்மாவில் தேவரீர் அபேதமாக ஒன்றித்து நிற்றலைக் காணுமாறு அருளல் வேண்டுமென்பது கருத்து. வேறாக்கிக் கீறிக் காணும்நாள் என இயையும். வந்த ஒரு சிறு பொருள் இல் பெயரெச்சத்தொடர் மொழி. "பகல் இல்லிலோரச் இல்லை" என்புழிப் போல. (கஎ)

முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன் மொ ய்குழல் மகளிர்தம் மயலாற், புழுங்குமென் றனைநின் னடிவடி நிழலிற் புகவிடுத் தளிக்குநா ளுளதோ, வழங் குவெண் டிரையா றவிர்சடை கரப்ப மணிமுடி நின் றிழிந் திடல்போற், றழங்குவெள் ளருவி யிழிந்தொ ளிர் சோணசைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) அவிர்சடைகரப்ப - விளங்கும் சடைமாத்திரம் மறையாதிருக்க, வெண்டிரை வழங்கு ஆறு மணிமுடிநின்று இழி ந்திடல்போல் - வெள்ளிய அலைவீசிக்கொழிக்கும் கங்காநதி மறைவின்றி அழகிய முடியிலிருந்து ஒழுகுதல்போல, தழங்கு வெள்ளருவி இழிந்து ஒளிர் சோணசைலனே கைலைநாயகனே - சத்திக்கின்ற வெள்ளிய அருவிகள் இழிந்து திகழும் சோண சைலரே! கைலைநாயகரே!, முழங்கு வண்டு இனங்கள் விருந்து

உணும் அலங்கல் மொய் குழல் மகளிர்தம் மயலால் - இசைபாடும் வண்டினங்கள் புதிதுண்ணும் (தேனிறைந்த) பூமாலைசூடிய கூந்தலினையுடைய மங்கையர்மயக்கத்தால், புழுங்கும் என்றன் நின் திருவடி நிழலில் புக விடுத்து அளிக்கும் நாள் உளதோ - வெதும்பும் என்னைத் தேவரீரது திருவடிநிழலிலை வித்துக் காக்குங்காலமும் உண்டோ? (அறியேன்.) எ-று.

சடை காணப்படுதலில்லாது அருவிமாத்திரங் காணப்படுதலால், இங்ஙனங் கூறினார். மணி இரத்தினங்களுமாம். (கஅ)

குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை
மதனவே ளெனவும், புன்றொழின் மனிதர்ப் புகழ்ந்
துபாழ்க் கிறைக்கும் புலமைதீர்த் தெனக்கருள் புரி
யா, யொன்றொரு தினந்தோட் குட்குழைந் தனமென்
றுருதுநா டொறுமக மேரு, தன்றலை தாழ்ப்ப வளர்ந்
தெழுஞ்சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) ஒன்றொருதினம் தோட்குள் குழைந்தனம் என்று உருது - (திரிபுரசங்காரகாலமான) ஒருதினத்தில் இச்சிவபெருமான் திருக்கரத்துக்குள்ளே (வில்லாகக்) குழையப்பெற்றனம் என்று நினைவுற்று (அவ்வளவில்லயிர்ச்சி) உற்றிராமல், மகமேரு நாள்தொறுந் தன்றலை தாழ்ப்ப வளர்ந்து எழும் சோணசைலனே கைலைநாயகனே - மகமேருமலை தினந்தோறுந் தனது தலையைத் தாழ்த்துக்குனிமாறு வளர்ந்தோங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, புன் தொழில் மனிதர் - அற்பச் செய்கையுடைய மனிதர்களை, குன்றுதோறு ஆடும் குமரனே எனவும் - மலைகடோறும் திருவிளையாடல் புரியும் குமாரக்கடவுளை ஒப்பானவனே என்றும், கொடுஞ்சிலை மதனவேள் எனவும் - வளைந்த கருப்புவில்லையேந்திய மன்மதனே என்றும், புகழ்ந்து பாழ்க்கு இறைக்கும் புலமை தீர்த்து - வியந்து கூறி வீணே போக்கும் புலமைத்தன்மையையொழித்து, எனக்கு அருள் புரியாய்-

அடியேனுக்குத் (தேவரீரையேபாடும் பரிசுதந்து) அருள்புரிய வேண்டும். எ - று.

முருகக்கடவுளையும் மன்மதனையும் ஒப்புக்கூறுவது இளமையும் அழகும் பற்றியென்க. கற்றதனாலாயபயன் கடவுளைவணங்கலே; வணங்காக்கால் அக்கல்வியாற் பயனில்லையென்பது தோன்றப் 'பாழ்க்கிறைக்கும்புலமை' என்றார். இதனை "*நலமிலாதானை நல்லனேயென்று நரைத்த மாந்தரை யிளையனே- குலமிலாதானைக் குலவனேயென்று கூறினுங்கொடுப் பாரிலைப் - புலமெலாம்வெறி கமழும் பூம்புகலூரைப் பாடுமின் புலவீர்கா - ளமரர்தம ருலக மாள்வதற் கியாது மையுற வில்லையே." என்னும், தேவாரத்தானுமுணர்க. பாழ் என்பது ஆகுபெயராய்ப் பாழ்ப்பட்ட பயிராதிகளை உணர்த்தியதெனக்கொண்டு, இறைத்தல் நீரிறைத்தலென்னலுமொன்று. ஒன்றொரு தினம் - நாண்மிகுதியின்மைக்குறிப்பினின்றது. தோள் - கை. முன் வலியிலே தோற்றுக்குறைவுற்றோம், இப்பொழுதும் வடிவிலே தோற்றுச் சிறுமையுற்றோமெனத் தினமும் நாணத்தால் மேரு தலைகுனிந்திருக்க; அதிகவுன்னதமாக வளர்ந்தோங்கியது சோணசைலமென்பது கருத்து. (கக)

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய் துறும்பெரு மிடியுங், கொண்டநல் விரதத் தினைக் குறையாக் கெடுத்திடு கொடியனேற் கருணைநா ளுளதோ, வண்டுழுங் குவளை மலர்தடஞ் சுனையின் மற்றைவா னவர்க்குரித் தன்றிச், சண்டியுண் மகிழ்ந்து கொள மலர் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) வண்டு உழும் குவளைமலர் தடம் சுனையில் - வண்டுகள் கிண்டியூதுங் குவளைமலர்களுள்ள அகன்ற சுனைகளிலே, மற்றை வானவர்க்கு உரித்து அன்றி - பிறதேவர்களுக்கு உரிமையாகா

* சுந்தரமூர்த்திநாயனார் திருப்புகலூர்த்தேவாரம் - க.

து, சண்டி உள் மகிழ்ந்து கொள மலர் சோணசைலனே கைலைநாயகனே - சண்டேசுரநாயனார் திருவுளங்களித்துப் புனைந்துகொள்ளும்படி மலர்கின்ற சோணசைலரே கைலைநாயகரே!, வெண் திருநீறு புனையும் மாதவர்க்கு விருந்து செய்து உறும் பெரு மிடியும் - வெண்ணிற விபூதியைப் புனையும் மிக்க தவமுடைய அன்பர்களுக்கு அரிய அமுதுசெய்வித்துச் (செல்வச்செலவினால்) நேர்ந்த பெரிய தரித்திரமும், கொண்ட நல் விரதத்து இளைக்கும் யாக்கையும் இம்மொடியனேற்கு அருளும் நாள் உளதோ - மேற்கொண்ட நல்ல விரதானுஷ்டானத்தாலே மெலியுஞ் சரீரத்தையும் இத்தன்மையேனுக்குந் தந்தருளும் நாளும் உளதோ? (அறியேன்.) எ - று.

திருநீற்றின்வகையுள் செம்மை கருமை யென விசேடமுடையவாய்த் தரிப்போர்க்குத் தீங்குவிளைப்பன என்பதுந்தோன்ற 'வெண்டிருநீறு' என்றும், தரித்திரமில்லாமையும் சரீரமெலியாமையுமே உலகினர்விரும்புமாதலால்; * "மண்ணினிற்பிறந்தார்பெறும் பயன்மதிசூடும் - அண்ணலாரடியார்தமை யமுதுசெய்வித்த" லும் அரிய விரதாதிகளால் உடல்வாட்டலுமே என்பதுதோன்ற, அவ்வுலகினர் கொள்கைக்கு மாறாக 'மிடியும் இளைக்கும்யாக்கையும் அருளுநாளுளதோ' என்றும், சிவபெருமானே இம்மலைவடிவாயிருத்தலால், அவர்மேற்சென்ற மலர்களெல்லாம் அருச்சித்தபுட்பங்களைப்போல நிர்மாலியமேயாதலால், அவை ஏனைத்தேவருக்கு உரிமையன்றிச் சண்டிகேசுரருக்கே உரிமையாதல்தோன்றச் 'சண்டியுண் மகிழ்ந்துகொள' என்றுங் கூறினார். இகரச்சுட்டு இழிவுப்பொருளது. குவளைமலர் சுனையில் மலர் சோணசைல மெனக் கூட்டுக. (உ௦)

வந்துமா மறலி யெனதுயி ருண்பான் மயிலையுண்
சிரலினிற் கின்றான், முந்திநீ யெனையா ளந்தவா றிதி

* பெரியபுராணத்தில் - ஆளுடையபிள்ளையார் புராணம் - க. அஎ.

பிணி மூழ்குற விடுத்தருள் புரியாய், நந்துமா மலை
யே யென்றுசா திப்ப நனைமலர் வேங்கையு மசோ
கும், நந்துமேன் முளைப்பச் செய்துகொள் சோண
சைலனே கைலைநாயகனே.

(இ - ள்) நந்தும் மாமலையே யென்று சாதிப்ப - (சிவசொரூப மென்கொள்ளாது) வளர் மலையேயென்று (அபக்குவிகள்) உறுதியிட்டுரைப்ப, நனைமலர் வேங்கையும் அசோகும் நந்தும் மேன் முளைப்பச் செய்துகொள் சோணசைலனே கைலைநாயகனே - தேன் பொருந்திய மலர்களையுடைய வேங்கையும் அசோகும் [illegible]ாகிய விருக்ஷங்களை மேலே உதிப்பச்செய்துகொண்ட [illegible] சோணசைலரே! கைலைநாயகரே!, மாமறலி எனது உயிர் உண்பான் மயிலை உண் சிரலின் நிற்கின்றான் - சிறந்த இயமன் எனது உயிரை அபகரிக்கும்படி மீனைக்கவரநிற்கும் மீன்குத்திப் பறவைபோல நிற்கின்றனன், நீ முந்தி என்னை ஆனந்தவாரிதியில் மூழ்குற விடுத்து அருள் புரியாய் - தேவரீர் (அவ்வியமன் கவருமுன்) முன்னமே அடியேனை ஆனந்தசமுத்திரத்தில் மூழ்கிடச்செய்து அருள்புரிவீராக. எ - று.

மாமறலி - சிறப்பருமையுடைய இயமனென்னலுமொன்று. மயிலை - மீன். சிரல் - மீன்குத்திப்பறவை. நீருண் மூழ்கிய மீனைக்கவரும் ஆற்றலில்லாது மீன்குத்திப்பறவை விலகுதல்போல் ஆனந்தசமுத்திரத்தின் மூழ்கிய என்னைக் கவரும் ஆற்றலில்லாது இயமனகலும்படி அவ்வானந்தசமுத்திரத்தில் மூழ்குவித்தல் வேண்டுமென்பதும், இச்சோணசைலம் சிவசொரூபமேயெனப் பக்குவிகள் கொள்ளுதற்குக் கருவியாகச் சுருதியாதிகளை காட்டியதுபோல, அபக்குவிகள் மலையேயென்று சாதித்தற்குக் கருவியாக வேங்கையாதியமரங்களை மேலேமுளைப்பச் செய்துகொண்டு விளங்காநின்றனை யெனபதும் கருத்தாகக்கொள்க. நந்தல் - வளர்தல். நந்துளாவென்னும் பாடத்திற்கு, சங்கையுள்ள திருமால் அடிதேடத் தொடங்கியகாலத்துச் செல்லச்செல்ல

மலையாகவே காணப்பட்டமையால் மலையென்றே சாதிட்ட எனப்பொருளுரைக்க. சாதிப்பச்செய்துகொள் எனக் கூட்டுக.

பூமழை யமரர் பொழியமா தவர்கட் புனன்மறு
இடைப்பொடி யடக்கத், தூமொழி மனைநீ தூதுபோம்
பயனில் சொற்பதர் புடைத்திளைக் கின்றேன், யாமு
ணர் மிகுபே ருருவமாய் வரினு மிருவரு முணர்த்
திடி னன்றித், தாமுணர் கிலரென் றெழுந்துய
சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) யாம் உணர மிகு பேர் உருவம் ஆய் வரினும் - நாம் எல்லாராலும் எளிமையில்) அறியத்தக்க மிக்கபெரிய வடிவமுடையேமாய்த் தோன்றினும், இருவரும் உணர்த்திடின் அன்றி தாம் உணர்கிலர் என்று எழுந்து உயர் சோணசைலனே கைலைநாயகனே - (பிரமவிட்டுணுக்க) ளிருவரும் அகத்தே உணர்த்திடு னன்றித் தாமுணரும் ஆற்றலிலரென்று காட்டுவான் ஓங்கி யுயர்ந்துநிற்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, அமரர் பூமழை பொழிய மாதவர் கண் புனல் மறுஇடை பொடி அடக்க - தேவர்கள் புஷ்பவருஷம வருஷிக்கவும் மிக்க தவசிகளுடைய கண்கள் ஆராமையாற்பொழிந்த ஆனந்த அருவி திருவடியிலுள்ள பொடிகளை அடக்கவும், தூ மொழி மனை நீ தூது போம் பயன் இல் - செவ்வியமொழிகளாக் கூறும் (பரவை நாச்சியாரது) திருமனைக்குத் தேவரீர் தூதுபோகக்கூடிய (அவ்வளவு) பொருட்பிரயோசனமில்லாத, சொல் பதர் புடைத்து இளைக்கின்றேன் - சொற்களாகிய பதர்களைத் தூற்றித்தூற்றி மெலிகின்றனன். (எனசெய்வேன்!) எ - று.

நாயன்மார் தமது திருப்பாடல்கள் பெருமானைத் தூதுஞ்செல்லுதற்கேதுவாகிய பொருட்பயனிரம்பிய சொற்களையுடைமையின் வேண்டிய பெற்றனர்; யானே, அப்படிப்பட்ட பொருட்பயன் சிறிதும்பெறாத சொற்களாகிய பதர்களைப்புடைத்துப் பயன்யாதும் பெறாது மெலிகின்றேனென்பது தம்மையிழித்

துக் கூறியவாறு. தாமொழி பல்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. பேரம்பயனெனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார். புடைத்தல் - எண்டுச் செய்யுளாகத் தொடுத்தலென்மேலது. பதரென்றதற்கிணங்கப் புடைத்தென்றார். உணர்கிலர் என்பதில் கில் ஆற்றலையுணர்த்துவதோரிடைச் சொல். (உஉ)

கழைமொழிக் கொடியயார்க் கேவல்செய் துடலங்
கமருகு மமிழ்தின்மங் குறமல், விழைவறத் துறந்
துன் றிருவடிக் கமலம் விழைகுநர்க் கேவல்செய் திலனே,
மழைமதக் களிநல் யானைமத் தகம்பாய் வள்ளுகி
ரோடுசெல் லரிமாத், தழைசிறைச் சிம்புள் கொண்
டெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) மழை மதம் களி நல் யானை - மழைபோலும் மதப் பெருக்கும் செருக்குமுடைய (உத்தம) இலக்கணமமைந்த யானையினது, மத்தகம் பாய் வள் உகிரோடு செல் அரிமா - மத்தகத்திலேசெலுத்திய கூரிய நகங்களோடு செல்லுகின்ற சிங்கத்தை, தழை சிறை சிம்புள் கொண்டு எழும் சோணசைலனே கைலைநாயகனே - தழைத்த சிறகுகளையுடைய சரபப்புள் அதிசயப்படக் (கால்விரல்களால்) தூக்கிக்கொண்டெழும்பும் சோணசைலரே! கைலைநாயகரே!, கழை மொழி கொடியோர்க்கு ஏவல் செய்து - கரும்பினிரதம்போலு மொழிகளையுடைய கொடிபோல்வாரான பெண்களுக்கு (அவரேவிய) ஏவற்றொழிலைச் செய்து, உடலம் கமா உகும் அமிழ்தின் மங்குறாமல் விழைவு அற துறந்து - (அரிதிற்பெற்ற) இச்சரீரம் பூமியின் வெடிப்பில் ஊற்றிய அமிர்தம்போல வீணையழியாமல் சகல பற்றுக்களையும் முற்றற வொழித்து, உன் திருவடி கமலம் விழைகுநர்க்கு ஏவல் செய்திலனே - தேவரீருடைய திருவடித்தாமரைகளையே விரும்பியிருக்கும் சரணாகட்குத் தொண்டுசெய்யாதவனாயினேன் (என்செய்வேன்!.) எ - று.

மிர்தத்தையொழித்த இன்பமளிக்கும் அமிர்தமய மதைப்பெற்றோர் தவறால் வெடிப்பிற்சிந்திப் பயன்படாதொழிந்தாற்போல, அத்தகைய இம்மானுடசரீரமும் அப்பயன் விளையாது வீண்படாதபடி ஏவல்செய்திலனென்பதும், யானைமத்தகத்திலே பாய்ந்தசுத்தோடு அதனையூர்ந்துசெல்லுஞ் சிங்கத்தை அந்தயானையோடு சரபங்கொண்டுசெல்லும் அப்படிப்பட்ட சாரலையுடையது இச்சோணசைலமென்பதும் குறித்தாகக்கொள்க. ‘கொடியோர’ என்பதற்கேற்க ‘மங்குறுமல்’ என்றும, அடியார் பெருமைதோன்ற ‘ஏவல்செய்திலனே’ என்றும் உருக்கியும் இரங்கியுங் கூறினர். கழை - ஆப்பயா. கொடியோர - மகாடுமையருமாம். பாய் விளைதமதாகை. உடலம் அம் சாரியை. வள் - கூர்மை. அரிமா இருபெயரொட்டு. சிம்புள் - எண்காற்புள். (௨௫)

கார்தரு சுருண்மென் குழறசிறு நுதற்பூங் கணை
புரை மதரரிக் கருங்கட், டார்தரு குவவுக் கொங்கை
நுண் மருங்குற் றையலார் மையலென் றெறுழிலேவல்,
சீர்தரு மணியி னணிந்தன வெனக்கட் செவியுமொண்
கேழலின் மருப்புஞ், சார்தரு முலக விளக்கெனுஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) சீர்தரும் அணியின் அணிந்தன என கட்செவியும் ஒள்கேழலின் மருப்பும் சார்தரும்-முன் சிறப்பமைந்த ஆபரணமாகத் தரிக்கப்பட்டனபோலப் பாம்பும் அழகிய பன்றிக்கொம்பும் (இப்பொழுதும்) நிலைபெற்ற, உலகவிளக்கு எனும் சோணசைலனே கைலைநாயகனே - உலகதீபமெனக் கொண்டாடப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!, கார் தரு சுருள் மெல் குழல் - மேகம்போலச் சுருளுற்ற மெல்லியகூந்தலும், சிறு நுதல் - சிறிய நெற்றியும், பூ கணை புரை மதர் அரி கருங் கண் - கூரிய அம்பையொத்த களிப்புவாய்ந்த அரிபரந்த கண்களும், தார் தரு குவவு கொங்கை - ஆரம்பூண்ட குவிந்த தனங்

களும், நுண் மருங்குல் தையலார் - சிறிய இடையையுமுடைய மக ளிராலனுங்கும், மையல் என்று ஒழிவேன் - மயக்கங்களை என்று நீங்கப்பெறுவேன். எ-று.

கார் தரு என்பதில் தருவும், அணிந்தனவென என்பதில் என வும் உவமவுருபிடைச்சொற்கள். சுருள் வினைத்தொகை. மன் மதபாணங்களுள் தாமரைகுவளை யொத்த கண்ணெனலுமாம். அணிந்தன இதில் பன்மைவிகுதி தொக்கது. கட்செவி - கண்களை யே செவியாகவுடையது (பாம்பு.) ஒண்மை தையல் - அழகு. சராசரும உலகவிளக்கெனும் பெயரக்ஷரங்கள் சோ ணசைல னென்னும் ஒருபெயரா கொண்டன. உலகவிளக்கு - உலகமாதிரமுள் மலவிருளையோட்டி ஞானப் பிரகாசத்தை உண்டாக்குவது. (௨௪)

ஐந்துகைத் தலத்து நாரணற் கயற்கு நவமணிக் கரகநீ ரிருந்து, மைந்துறக் குறித்து மாட்டியுங் காண் பரும் பதிந்திடா துனையெதிர்ந் திலமோ, வைந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு மறுமுகம் படைத் த கேசரியுந், தந்தெமைப் புரக்குங் கருணைகூர் சோ ணசைலனே சைலநாயகனே.

(இ - ள்.) ஐந்து கை தனிக்கோட்டு ஒரு பெருங் களிறும் ஐந்து திருக்கரங்களையும் ஒற்றைக்கொம்பையுமுடைய (விநா யகக்கடவுளென்னும்) ஒரு பெரிய யானையினையும், அறுமுகம் படைத்த கேசரியும் தந்து - ஆறுமுகங்களையுடைய (சுப்பிர மணியக்கடவுளென்னும்) சிங்கத்தினையும் தோற்றுவித்தருளி, எமைப்புரக்கும் கருணைகூர் சோணசைலனே சைலநாயகனே அடிமையாகிய எங்களைக் காத்தருளும் கிருபைமிக்க சோண சைலனே! சைலநாயகனே!, நாரணற்கு ஐந்து அயற்கு நவ மணிகரகம் நீர் கைத்தலத்து இருக்கும் - விஷ்ணுமூர்த்திக்குச் சயகமும் பிரமதேவருக்கு நவமணிகுயிற்ற கமண்டலதீர்த்த

மும் திருக்கரங்களில் வாய்த்திருந்தும், மைந்துஉற குறித்தும் ஆட்டியும் காண்பான் மதித்திடாது உனை எதிர்ந்திலர் - முன்றேயே உமது சந்நிதியில் வன்மை பொருந்த ஊதியும் திருமுடியில் திருமஞ்சனஞ்செய்தும் (பத்தியால் உண்மைக்) காணமதியாது அகங்கரித்தமையால் உம்மைக் காணாராயினர் (என்னே!) எ-று.

மைந்துறக் குறித்தல் - பலங்கொண்டு தொனிப்பித்தல். நாரணற்குக் கைத்தலத்து நந்திருந்தும் குறித்தும என்றும், அயற்குக் கைத்தலத்து நீரிருந்தும் ஆட்டியும் என்றும் கூட்டிப் பொருள் கொள்க. அன்பர்க் கெளியரும் அல்லார்க் கரியருமாதல் தோன்றக் 'குறித்தும் ஆட்டியும் காண்பான் மதித்திடாது, உனை யெதிர்ந்திலர்' என்றார. (௨௫)

வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர் விருந்தினுக்
குதவிலேன் முந்திற், றனையிரந் திடுவான் வந்தனன்
பதநீ யுதவியென் றுயரொழித் தருளா, யினியபைந்
தமிழின் பொதியமால் வரைபோ லிசைக்குரு காதிம
மலையின், றனையையின் னீஞ்சொற் குருகுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) இனிய பைந்தமிழின் பொதியம் மால் வரைபோல் இசைக்கு உருகாது - இனிய பசிய தமிழினையுடைய பொதிய மலைபோல இராகத்திற்கு உருகாமல், இமம் மலையின் தனையை இன் தீம் சொற்கு உருகுறும் சோணசைலனே கைலைநாயகனே - பனிமலையின் புத்திரியாராகிய அம்பிகையின் இனியசொற்கு இளகுந் தன்மைவாய்ந்த சோணசைலரே! கைலைநாயகரே!, வினை அரும் புகலிக்கு இறை மணம் பந்தர் விருந்தினுக்கு உதவிலேன் - வினையற்ற சீர்காழிக்குத் தலைவராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார் தமது திருமணப்பந்தரி லளித்த முத்திவிருந்தினுக்கு யான் அடையாமற்போயினேன், முந்தில் தனை இரந்திடுவான் வந்தனன் - (அது அடியேன் இச்சரீர மெடுத்தற்கு) முற்காலத்

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய
சோணசைலமாலையுரை. சென்னை-20
அடையாறு,

ததாயினுமையின் தேவரீரைவேண்டி அம்முத்திப்பெற அடைந்தனன், 'நீ பதம் உதவி என் துயர் ஒழித்து அருளாய்' - தேவரீர் உயதுபதவியளித்து எனதுதுயரத்தை ஒழித்தருளவேண்டும்: எ-று.

அருமை - ஈண்டு இன்மை. பந்தர் - போலி. விருந்து - புதுமை; அது ஆகுபெயராய்ப் புதிதுண்பிக்கும் முத்தியின்பத்தைச் சுட்டிநின்றது. உதவல் - தருணத்தில் அடையப்பெறுதல். புகலி ஆளுடையபிள்ளையாரால் சிறப்பெய்திற்றென்பார் 'புகலிக்கிறை' என்றும், அவர் மணங்காணவந்தவர் பரிசனார்கள் யாசிகளாதியனாரையேயன்றிப் பூப்படைந்தொதுங்குகின்ற ஓர் கணிகையையும் சோதியிற்கலப்பித்துத் தாம் கலந்தாராதலின், யானும் அங்கிருப்பின் பிரார்த்தனையின்றியே அச்சிவபதம் பெற்றிருப்பன்; அது முந்தினமையின் தேவரீரை யாசிக்கலாயினேன் என்பார், 'முந்திற்று உய்யிரந்திடுவான் வந்தனன்' என்றுங் கூறினர். இதனை "பொழில்புடைசூழ்ந் திடுபுகலிக் கவுணியர் தங் குலத்துதித்த புனித ரந்த-வெழின்மருவு காரிகைதன் முக நோக்கிப் பெருநெருப்புக் கிர மின்றுஞ்-செழுமையுறு மைந்தெ முந்தி னுருவதுவா மினையநெடுந் தீர்த்த மூழ்கித்-தழல்வடிவாய் விளங்குபெருஞ் சோதியிடைப் புகுதியெனச் சாற்றி னரால். இன்னவகை மணங்காண வந்தவருந் தவர்களுட னின்ப வீடு-தன்னையுற நினைந்தனைய மாதலத்தி னிடையினிது சார்ந்து ளோருஞ்-மன்னுநீச்சென் றடைந்ததற்பி னனையாளு மெழிற் காழி வள்ளலார்தா - மின்னிடைப்பூங் கோதையுடன் சென்றனைய சோதியினுண் மேவி னரால்." என்னும் ஆச்சாபுரப்புராணச் செய்யுள்களானுமுணர்க.

இசைபிலேதருக்கிய நாரதருக்கு அதனையொழிக்கவினைத்த திருமால் மேருவில் தவம்புரியும் ஆஞ்சனேயரிடம் வேறுகாரியங்குறித் தனுப்பதும், அவர் மகதியாழினைவாங்கி மேகராகக் குறிஞ்சியைப்பாடி அம்மலையை உருகுவித்து வீணையைக்க

இறுகியபின்பு அவ்வாறு உருகப்பாடி அவ்வீணையை யெடுக்கமுடியாமல் நாரதர் தோற்றனொ இசைநூலார் கூறுவதுபோலப் பொதியமுருகியசரித்திரம் யாண்டுளதோ அறிந்திலம். (உசு)

பெண்ணொருங் கலமே யமுதமே யெனப்பெண் பேதையர்ப் புகழ்ந்தலந் திரிவேன், பண்ணுறுந் தொடர்பிற் பித்தவென் றினுநீ பயன்றரா லறிந்துநிற் புகழேன், கண்ணுறுங் கவின்கூ ரவயவந் தரிந்துங் கதிர்நூறாயிரங் கோடித், தண்ணிலங் கரவா துயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) கண்ணுறும் கவின் கூர் அவயவம் தரிந்தும் - காணப்படும் அழகுமிக்க திருவுருவத்தைத் தரித்தும், ஞாயிறு கோடி கதிர்கள் பொன்னிறம் காலவும் உயர்ந்து எழும் சோணசைலனே கைலைநாயகனே - இவ்வுலகத்தினர் அறியாதபடி ஒளிர்ந்த ஒளியை மறையாது வெளிப்படுத்தி நின்ற சோணசைல கைலாசபதியே!, பெண் பேதையர் உடலம் அரும் கலமே அமுதமே என புகழ்ந்து அலம் திரிவேன் - மெய்யன்பர் மதிக்கப் பேதைமையுடையவரையும் பயன் கருதி அப்பொருளைப் போல்வரே! அமுதம்போல்வரே! என்று புகழ்ந்து ஆசையால் மெய்த்தாது திரிகின்ற யான், பண் உறும் தொடர்பில் பித்த என்கினும் - இசையமைந்த செய்யுட்களில் பித்தனேயென்று உம்மையழைக்கினும், நீ பயன் தரால் அறிந்தும் நின் புகழேன் - விரும்பிய பயனைத் தேவரீரளித்தலை (ஆளுடையநம்பிகள் திவ்யசரித்திரத்தால்) அறிந்திருந்தும் உம்மைப் புகழ்ந்திலேன். (என்னறியாமை இருந்தவாறு என்சொல்கேன்.) எ-று.

தொடர்பிற் பித்தவென்பது "பித்தா பிறைசூடீ" என்னும் திருப்பாடலாதியவற்றைச் சுட்டுகின்றது. கண்ணுதல் - இயாவருங் காணுதலுமாம். ஒளியாற் சூரியனை யொப்பினும், இதமளித்தலிற் சந்திரனை யொத்தலென்பது தோன்றக் 'கதிர்கள் நூறாயிரங்

சொடி தண்ணிறம், என்றார். இதனை "*தண்ணந் திங்களிற் றண்ணெனத் தண்கதிர் - வண்ணங் குன்றுரு ஞாயிறு" என்பதனு னும் அறிக. (உஎ)

உயங்குநூ லிடைப்பூங் கோதைய ரல்குலொளிம
ணிப் பாம்புதீண் டுதலான், மயங்குவேன் றனக்குன்
பதமருந் துதவி மயக்கமென் றொழித்தருள் புரிவாய்,
முயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தணர்க்கு முத்துவெ
ண் பந்தரீந் தகல்வான், றயங்குமீன் முத்துப் பந்தர்
வாழ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) மா புகழ் முயங்கு பூ புகலி அந்தணர்க்கு - மிக்க புகழ் பொருந்திய அழகிய சீகாழியி லவதரித்த திருஞானசம்பந்த மூர்த்திக்கு, வெண் முத்து பந்தர் ஈந்து - வெண் முத்துக்களாலாகிய பந்தலைத் தந்தருளி, மீன் முத்து தயங்கும் அகல் வான் பந்தர் வாழ் சோணசைலனே கைலைநாயகனே - உடுக்களென்னும் முத்துக்கள் விளங்கும் அகன்ற ஆகாயமாகிய பந்தரின்கீழ் வாழும் சோணசைலரே! கைலைநாயகரே! உயங்கு நூல் இடை பூ கோதையர் - அசையாநின்ற நூலொத்த இடையினையும் மலர்சூடிய கூந்தலையுமுடைய மங்கையரது, அல்குல் ஒளி மணி பாம்பு தீண்டுதலால் - நிதம்பமென்னும் ஒளியமைந்த மணியினையுடைய பாம்பு தீண்டப்பெற்றமையால், மயங்குவேன் தனக்கு உன் பதம் மருந்து உதவி - மயக்கமெய்திக் கிடப்பேனாகிய எனக்குத் தேவரீருடைய திருவடியென்னும் மருந்தினைத் தந்து, மயக்கம் என்று ஒழித்து அருள் புரிவாய் - அம்மயக்கத்தினை என்று நீக்கி அருள்புரிவீரோ? (அறியேன்.) எ - று.

உயங்கல் - துவளல். அடும் வினைத்தொகை. அதியுன்னத சொரூபராகிய இப்பெருமானுக்குப் பந்தராதற்குரியது ஆகாயமேயன்றி வேறின்மையின் இங்ஙனம் வியந்தார். (உஅ)

பிரபுலிங்கலீலை ஆரோகணச்சந்தி க.

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும் விளங்கு
மா கமவுணர்ச் சியினும், புத்தலர் கொடுநிற் பரவுபூ
சையினும் பொழுதுபோக் கெனக்கருள் புரிவாய்,
முத்தமு மரவ மணிகளு மெறிந்து முதிர்தினைப் புன
த்தெயின் மடவார், தத்தைகள் கடியுஞ் சாரலஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) முதிர் தினை புனத்து எயின் மடவார் - விளைந்த தினைப்புனத்திற் (காவல்பூண்டுள்ள) வேட்டுவப்பெண்கள், முத்தமும் அரவம் மணிகளும் எறிந்து தத்தைகள் கடியும் சாரல் அம் சோணசைலனே கைலைநாயகனே - முத்துக்களையும் நாக மணிகளையுமே (கற்களாக) வீசி (அத்தினைக்கதிர் கவரவரும்) கிளிகளையோட்டும் சாரலினையுடைய அழகிய சோணசைலரே கைலைநாயகரோ!, மெய் தவர் அடி குற்றேவலின் திறத்தும் உண்மைத்தவமுடைய பெரியோர்களின் திருவடிகளுக்குச் சிறேவல்செய்யும் வகையினும், விளங்கும் ஆகமம் உணர்ச்சியினும் - (யாவராலும் அங்கீகரிக்கப்பட்டுத்) திகழும் சிவாகமங்களை ஆராய்ந்துதெளிதலினும், புத்து அலர் கொடு நின் பரவு பூசையினும் - அன்றலர்ந்த மலர்களைக்கொண்டு தேவரீரை வழிபடுப பூசைத்தொண்டினும், பொழுது போக்கு எனக்கு அருள் புரிவாய் - காலங்கழித்துவாழும் பேற்றினை அடியேனுக்கு அளிப்பீராக. எ - று.

அன்பர்பணிசெய்தலே எளிதிற் சிவானந்தப்பேற்றிற்கு ஏதுவாதலின் அதனை முன்னும், பூசிக்குந் தனதியல்பையும் பூசிக்கப்படுங் கடவுளியல்பையும் பூசித்தற்குரிய கருவிகளையும் விளக்கலின் சிவாகமவுணர்ச்சியை இடையினும், அவ்வுணர்ச்சிக்குப் பயன் அதிற்கூறியபடி வழிபடுதலேயாகலின் அதனை இறுதியினும்வைத்து, இவ்வாறு கழியாநாள் பயனில் நாளாய் முடிதலின் இவற்றிற் 'பொழுதுபோக் கெனக்கருள் புரிவாய்' என்றார் முத்தமும் மணிகளும் எங்குங்கிடத்தலின் கற்போலெ

றமர்ந்து, தாமுயன்று விளைத்த தினைகவருங்கிளியைக் கடிவாராயினரென அம்மலைவளங்கூறியபடி. எயின் - வேட்டுவச்சாதி. இதனை "ணஃகான்கிளை பெயர்" என்னும் நன்னூற் சூத்திரத்துணர்க. (௨௧)

பாயும்வெண் டிரைப்பே ராழிசூ ழுலகிற் பழமொ
ழி யொழியமெய் யடியா ராயுமென் மலரோர் மலை
யள வணிய வமர்ந்தநின் கோலம்யான் மறவேன்,
றூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்பச் சூழ்பசுங்
கொடிபயி லுருவச், சாயைசென் றுறநின் றிலங்கு
றுஞ்சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) தூய வெண்மதியில் களங்கம் என்று உரைப்ப - சுத்தமுடைய வெள்ளிய சந்திரனிடத்திற் களங்கமென்று எவருங் கூறும்படி, சூழ் பசுங்கொடி உருவம் பயில் சாயை சென்று உற - படர்ந்துள்ள பசிய கொடிவடிவங்களிற் பொருந்தியசாயைகள்சென்று படியும்வண்ணம், நின்று இலங்குறும் சோண சைலனே கைலைநாயகனே - ஓங்கிவிளங்கும் சோணசைலரே கைலைநாயகரே!, பாயும் வெண்திரை பேர் ஆழி சூழ் உலகில் - பரவிய வெள்ளிய திரைகளையுடைய பெரிய கடல்வளைந்த இவ்வுலகின்கண், பழமொழி ஒழிய - (மலையளவு தெய்வத்திற்கு மலையளவு புஷ்பம் சாத்துவதுண்டோ ? என்றுகூறும்) பழமொழிநீங்க, மெய் அடியார் ஆயும் மெல் மலர் ஓர் மலை அளவு அணிய அமர்ந்த நின் கோலம் யான் மறவேன் - உண்மைத் தொண்டர்கள் ஆய்ந்தெடுக்கப்பட்ட மெல்லிய மலர்களை ஒரு மலையளவே அருச்சித்து வணங்க எழுந்தருளிய தேவரீர் திருக்கோலத்தைச் சிறியேன் மறக்கமாட்டேன். எ-று.

பாய்தல் - தாவுதலுமாம். மலைமலையாகக் குவித்துச் சாத்துகின்றனரெனவே; அத்தலத்துள்ள அடியவர் மிகுதியும், சந்திரன்பாற் களங்கமெனக் கொடிச்சாயை படிகின்றதெனவே.

மலையுன்னதமும் குறிப்பித்தவாறாயிற்று. மெய்யடியா ரணிவென இயையும். (௧௫)

நடமிடு பசும்பொற் புரவிமேற் கொண்டு நளிவமென் மலர்க்கரத் தெறிபூப், படையொடு துரந்து வந்துமென் விடயப் பகைப்புலி தனையெறிந் திலையே யடிநடு நிழல்சென் றெழுகட லடைய வகல்பெரும் புறத்துவா ரிதியிற், றடமுடி நிழல்சென் றுறவளர் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) அடி நடு நிழல் எழுகடல் சென்று அடைய - அடி நிழலும் நடுநிழலும் எழுகடலளவு சென்று சேரவும், அகல் பெரும் புறத்து வாரிதியில் தடமுடி நிழல் சென்று உற வளர சோணசைலனே கைலைநாயகனே - அகன்ற பெரும்புறக் கடலில் விசாலித்த முடிநிழல் சேரவும் ஓங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, நடம் இடு பசும் பொன் புரவி மேற் கொண்டு - நடனஞ்செய்யும் பசிய பொன்னிறமுள்ள குதிரையிலாரோகணித்தும், நளிவம் மலர் மெல் கரத்து எறி பூ படையொடு துரந்து வந்தும் - தாமரைமலர்போன்ற மெல்லிய திருக்கரத்தில் வீசத்தக்க ஆயுதங்களைக்கொண்டு துரத்திவந்தும், என் விடயம் பகை புலி தனை எறிந்திலையே - அடியேனது விடயப் பகைகளாகிற புலிகளை வீசியெறிந்திலையே; (என்செய்வேன்!) எ-று.

குதிரையேறாதல் உயக்கியற்கையே யாகையால், இனியேனும் இங்ஙனம் வந்து எறிதல்வேண்டு மென்பது படாநின்றது. கொண்டும் என்புழி உம்மைவிரிக்காது வந்து என்புழிமாத்திரம் உம்மைவிரித்தது, சுவாநுபாகத் தோற்றி அருளாது விடினும் இவ்வாறு வந்தேனும் என்பால் சத்தாதி விடயங்களை யொழித்திரில்லையே என்செய்வே னென்னலுமாம். விலைகிடாது நினைக்கலைக்கப் பாய்ந்து வஞ்சித்து வருத்திக்கொல்லுதலுடைமையின் விடயங்களைப் புலியென்றார். (௧௬)

யாவுமா முமையுண் ணாமுலை முலைப்பா லீந்துபா
டச்செயா யெனினு, மேவுமா துயர்செய் சூலைநோ
யெனினும் விடுத்துநிற் பாடுமா றருளா, யோவுமா
னலது தொல்லுருக் கொளின்வே றொன்றெடுத் திடு
மென நினைந்து, தாவுமா னினமெண் ணிகந்தசூழ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.), தொல் உரு கொளின் - சிவபெருமான் தமது பழையதிருவடிவந் தாங்குவாராகில், ஓவும் மான் அலது - (முற்காலத்திற்றரித்து) இக்காலத்திற்றுறக்கப்பட்டுள்ள அம்மானையன்றி, வேறு ஒன்று எடுத்திடும் என நினைந்து - தமக்கிஷ்டமாகியவேறொருமிருகத்தைத் தாங்கியருளுவரெனச் சிந்தித்து, தாவும் மான் இனம் எண் இகந்த சூழ் சோணசைலனே கைலைநாயகனே - தாவிச்செல்லும் மான்கூட்டங்கள் அளவிறந்தன சூழ்ந்துவாழும் சோணசைலரே! கைலைநாயகரே!, யாவும் ஆம் உண்ணாமுலை உமை முலைப்பால் ஈந்து - எச்சிறப்பும் உண்டாதற்கேதுவாகிய உண்ணாமுலையம்மையென்னும் உமாதேவியாருடைய திருமுலைப்பாலை (அடியேனுக்குத்) தந்து, பாட செயாய் எனினும் - தேவரீரைப் பாடும்படிச் செய்துகொள்ளீரேனும், மேவும் மா துயர் செய் சூலை நோய் எனினும் விடுத்து நின் பாடும் ஆறு அருளாய் - நிலைபெறும் மிக்கதுன்பத்தினைச் செய்யாநின்ற சூலைநோயேனும் என்னைவிடுத்துத் தேவரீரைப் பாடும்படி செய்துகொள்வீராக. எ - று.

இம்மை மறுமை வீடென்னும் முப்பயன்களையுஞ் சுட்டலின், யாவுமாம்' என்புழி உம்மை முற்றும்மை. யாவுமாதற்கேதுவாகிய முலைப்பாலை யாவுமாம் முலைப்பாலென்றது காரியத்தைக் காரணமாக உபசரித்தல். ஆளுடையபிள்ளையார்க்குப் பாலையும் ஆளுடைய அரசுக்குச் சூலையுமளித்துப் பாடச்செய்தாராகலின், அந்திய பேறேனும் இப்பேதையேற்கு அருளல்வேண்டுமென்பதும், ஞானகண்ட திரிநேத்திரதாரியாய்ச் சுவீகரித் திருக்கின

த்தில் நம்மினமாகிய மானையே தாங்குகின்றாராகலின மலையுருக் கொண்ட இக்காலத்தும் சூழ்ந்திருப்பின் அகலாது காத்தலை நோக்கி நம்மையே தாங்குவரெனக் கருதியதுபோல மானினம் சூழ்ந்தனவெனபதும் கருத்தாகக் கொள்க. ௭ (௩௨)

விருப்பொடு வெறுப்பு மகன்றபே ரின்ப வெள் ளத்து ளழுந்துநின் னடியார், திருப்பத மிறைஞ்சி யவர்க்குவே ளாண்மை செய்பெருஞ் செல்வமே யருளாய், பொருப்புக டொறும்வீழ் பொங்குவெள் ளருவி போன்றறி விலர்க்கிடை யறாமற், றரிப்பருங் கருணை பொழிதருஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) பொருப்புகள் தொறும் வீழ் பொங்கு வெள்ளருவி போன்று அறிவு இலார்க்கு - ஏனைமலைகடோறும் வீழ்கின்ற அதிகரித்த வெள்ளிய அருவிநீர்போல அறிவிலர்களுக்குத் தோற்றும்படி, தரிப்ப அரும் கருணை இடை அறாமல் பொழிதரும சோணசைலனே கைலைநாயகனே - தாங்குதலரிய கருணை வெள்ளமே இடைவிடாது சொரியும் சோணசைலரே! கைலைநாயகரே!, விருப்பொடு வெறுப்பு அகன்ற பேரின்பம் வெள்ளத்துள் அழுந்தும் - விருப்பும் வெறுப்பும் விட்டு மிக்க இன்பப்பெருக்கிலே மூழ்கிச் சுகிக்கும், நின் அடியார் திருப்பதம் இறைஞ்சி - உமது அடியவர்களுடைய திருவடிகளை வணங்கி, அவர்களுக்கு வேளாண்மை செய் பெரும் செல்வமே அருளாய் - அவ்வடியவர்கட்கு வேண்டியவற்றை யுதவும் உயர்ந்தவாழ்வினையே தந்தளிப்பீராக. எ-று.

வேளாண்மை - உபகரித்தல். செல்வத்தாலெய்தும்பேறுகளும் சிவனடியாரைப் பேணுதலாலெய்துதலின் அச்சிறப்பு நோக்கி, அவர்க்குபகரித்தலையே பெருஞ்செல்வமென்றார். இது, *"இலமது தனைபொன் சிவஞானிக் கீந்தால் - பலமுத்தி சித்தி

* திருமந்திரம் - பாத்திரம் - ௧

ரபோக நூந் தரும்" எனபதனுணாக. தொறும் என்பது தன்னையேற்ற பெயாப்பொருண்முழுமையும் அப்பெயாப்பொருளோடு இயையும்பொருளும் இருப்பதையுணாத்துவதோர் இடைச்சொல். இடைடை ஈது சொரியும் கருணைப்பெருக்கம் அறிவிலாக்கு அருவிபோன்று தோற்றுகிற்பதெனவே, அறிவினாக்குப் பிறரால் தாங்கற்கரிய கருணைப்பெருக்கமாகவே தோற்றுகிற்குமென்புதாயிற்று. (௩௩)

பொங்குறு கவினும் கற்பும்வாய்ந் திலங்கு புண்ணிய மடந்தையும் பொருளு, மிங்குநன் குதவி யங்குவான் கதியி னிருந்துநிற் புலவரென் புகழார், துங்கவெங் குறவர் புனத்திடு பரண்கா றுணிந்துநட் டாரமீ மிசைமா, தங்கவெண் மருப்புப் பரப்புறுஞ் சோணசைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) துங்கம் வெம் குரவா புனத்து இடு பரண் கால் ஆரம் துணிந்து நட்டு - மிக்கவீரமுடைய வேடாகள் தினைப்புனத்திலிடும்பரணுக்குக் கால்களாகச் சந்தனமரங்களைவெட்டி நாறி, மீமிசை மா தங்கம் வெண் மருப்பு பரப்புறும் சோணசைலனே கைலைநாயகனே - அடபரணின்மேற்பரப்பாக யானைகளின்வெள்ளியகோடுகளையேபரப்பும் சோணசைலரே! கைலைநாயகரே!, பொங்குறு கவினும் கற்பும் வாய்ந்து புண்ணியம் இலங்கும் மடந்தையும் - மிக்கோங்கிய அழகும் கற்புத்தன்மையும் அமைந்து தருமவொழுக்கமும் திகழப்பெற்ற மனைவியையும், பொருளும் இங்கு நன்கு உதவி - செல்வத்தையும் இம்மையிலே செவ்விதிற் கொடுத்து அங்குவான் கதியில் இருத்தும் நின் புலவா என் புகழாா - மறுமையிலே உயாந்தகதிகளில் நிலைபெறுவிக்கும் தேவரீரைப் புலவாகள் யாதுபுகழாா? (மிகப் புகழ்வாா.) எ-று.

இம்மையில் உத்தமகுணங்களில் மிக்க மனைவியாதியபோகமும், அம்மையில் சிவபோகமும் அருளவல்ல தேவரீரைட

புலவர்கள் புகழாத மனிசரை வாளா புகழ்கின்றார்களே இஃ தென்னே என்று இரங்கியதுமாம். வெம்மை - இங்கு வீரம். மீமிசை - ஒருபொருட்பன்மொழி; மேலிடமுமாம். எவனென்னும் வினாப்பெயர் என்னெனத் திரிந்தது. (௩௪)

போழ்ந்திடு வடுக்கண் மகளிரை யணைத்துப் புகழ் நந்தி பிரம்படிக் கொதுங்கிச், சூழ்ந்திடு மமரர் நெருங் குசந் நிதியிற் றொண்டனேன் வரவருள் புரியாய், வாழ்ந்திடு மகக்கண் டுருகுதாய் முலைப்பால் வழிந் தொழு குதலென வடியார், தாழ்ந்தெழ வருவி யெ ழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) வாழ்ந்திடும் மக கண்டு உருகு தாய் முலை பால் வழிந்து ஒழுகுதல் என - விருத்திக்கும் குழந்தையைக்கண்டு மனங்குழையும் மாதாவுக்கு முலைக்கண் பால்வழிந்து தானே ஓடுதல் போல, அடியார் தாழ்ந்து எழ அருவி ஒழுகுறும் சோண சைலனே கைலைநாயகனே - அடியவர்கள் வணங்கி யெழுங்கால் தானே அருவியொழுகப்பெற்று விளங்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, போழ்ந்திடும் வடு கண் மகளிரை அணைத்து - பிளந்த மாம்பிஞ்சுபோலும் கண்களையுடைய தம்மனைவியரை அணைத்துக்கொண்டு, புகழ் நந்தி பிரம்பு அடிக்கு ஒதுங்கி - கீர்த்திவாய்ந்த நந்திதேவர் (சந்நிதியில் விலகவீசும்) பிரம்படி தம்மேற் படுமென்றொதுங்கி, சூழ்ந்திடும் அமரர் நெருங்கு சந்நிதியில் தொண்டனேன் வர அருள் புரியாய் - பின்னுஞ்சூழ்ந்து தேவர்கள் நெருங்கும் தேவரீர் சந்நிதியில் சிறுமையேனும் வர அருள்புரிவீராக. எ-று.

மகளிரையணைத்தல் கூட்டமிகுதியால் தம் மனைவியர்கட்கு வூறு நேராமைப்பொருட்டு. மக - மக்கள், இது உகரச்சாரியை யேற்று மகவு எனவரும். தொண்டு - ஈண்டுக் கீழ்மைப்பொருளது; * "தொண்டராம் பேய்ச்சமணர்" என்புழிப்போல. நா

* மெய்ப்பொருணாயனார் புராணம் ௯-

ய்க்குமக்களின் மேன்மை நோக்குங்கால் அன்புமிகுதியின் முலை ப்பால் ஒழுகுதல்போலத் தம்மைவணங்கலாகிய நல்வாழ்வு பெற்ற அடியார்களைநோக்குந்தோறும் பெருமானுக்கு அருண் மிகுதிதோன்றுமென்பார், அதனை அருவிமேல்வைத்து விதந்து கூறினார். (௩௫)

நேர்ந்திடு மொருசெங் கோல்கொடு கொடுங்கோ ணிமிர்ந்திட விலங்கைசென் றடைந்தோன், கூர்ந்த வன் பொடுநின் றிறைஞ்சுபு வழுத்துங் குரைகழ லிரக் கவஞ்ச சுவல்யான், சேர்ந்திடு மலைமான் பெருமுலை யுவமை சிறுமலை களுக்குத வாமற், சார்ந்திட விரும்பி வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) சோர்ந்திடும் மலைமான் பெருமுலை உவமை சிறுமலை களுக்கு உதவாமல் - ஒற்றித்துவிளங்கும் பார்வதிதேவியாரது பெரிய தனங்களுக்கு உவமையாகுதல் சிறியமலைகளுக்குக் கிட் டாது, சார்ந்திட விரும்பி வளர்ந்து எழும் சோணசைலனே கைலைநாயகனே - தமக்கே கிட்டும்படி விரும்பி உன்னதமாக உயர்ந்தோங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, இலங்கை கொடுங்கோல் நிமிர்ந்திட - இலங்காபுரி கொடுங்கோல்நிமிர்ந்து செங்கோலுடைத்தாக, நேர்ந்திடும் ஒரு செங்கோல் கொடு சென்று அடைந்தோன் - கோமையடைந்துள்ள ஒப்பற்ற செங் கோலை யேந்தி, (இராவணவத முன்னிலையிற்போய்) அவ்விலங் கையை யடைந்த இராமமூர்த்தியானவர், கூர்த்த அன்பொடு நின்று இறைஞ்சுபு வழுத்தும் குரை கழல் - மிக்க அன்பொடு நின்று வணங்கி வேண்டித் துதிக்கும் ஓசைமிக்க வீரக்கழலணிந் த திருவடிகளை, இரக்க யான் அஞ்சுவல் - யாசித்துவேண்ட அடி யேன் அஞ்சாநிற்பன். எ-று.

கொடுங்கோனிமிரின் செங்கோலாமாகலின், செங்கோலாக வென்பார் 'கொடுங்கோனிமிர்ந்திட, என்றும், அன்புமிக்க இராம மூர்த்தி. வேண்டத்தக்க அரியதிருவடியை அன்பற்ற யானே

வேண்டுவது தகுதியோ? என்பார், 'இரக்கவஞ்சுவல்' என்றுங் கூறினார். இச்சைலத்தையடுத்த தீர்த்தகிரியில் இராமமூர்த்தி வழிபட்டனரென்பது புராண சித்தமாகலின், இத்தலத்தும் வழிபட்டனர்போலும். நேர்மை - தகுதி. செங்கோல் கொடுங்கோலென்றவை - நீதி அநீதிமேலன. நிமிர்தல் - ஓடலுமாம். கொடுங்கோலோடச் செவ்விய பாணங்கொண்டடைத்தவனெனும், கொடு என்பது மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபான கொண்டென்பதின்மரூஉ எனலும் ஒக்கும். இறைஞ்சபு செய்பு வாய்பாட்டு வினையெச்சம். வழுத்தல் - வேண்டித்துதித்தலின் மேற்று. கழல் - தானியாகுபெயர், திருவடிநிலையுணர்த்தலின். அஞ்சுவல் - அல் தன்மையொருமைவிகுதி. மலையிலுதித்தமையின் 'மலைமான்' என்றார். சார்தல் - தன்னையேயடைதல். (௩௯)

தெருமரும் பிறவித் தளையகன்றிடாத தேவரைத் தேவரென் றெண்ணி, யருமருந் தனைய நினையடையாத வறிவிலார் பவப்பிணி யறுமோ, கரிமருங் கணைந்த தெனமுழை வாயிற் கார்வர விரைந்தெழுந் துகள்கே, சரிமறைந் திருந்து நாணுறுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) முழை வாயில் கார் வர - குகைவாசலில் மேகம் தவழ (அதனை நோக்கி), கரி மருங்கு அணைந்தது என மறைந்திருந்து - யானை பக்கலில் அணைந்ததென்று நினைந்து ஒளித்திருந்து, விரைந்து எழுந்து உகள கேசரி நாணுறும் சோண சைலனே கைலைநாயகனே - (பரீபித்தலும்) விரைந்துகிளம்பிச் (சந்தோஷத்தால்) துள்ளியசிங்கம் (அஃதன்மை கண்டு) வெட்கிநிற்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, தெருமரும் பிறவி தளை அகன்றிடாத தேவரை தேவர் என்று எண்ணி - சுழலும் தன்மையவாகிய பிறவிகளை நீங்காத தேவர்களைத் தெய்வங்களென்று கருதி, அருமருந்து அனைய நினை அடையாத அறிவிலார்

பவம்பிணி அறுமோ அருமருந்தன்ன தேவரீரை எய்தப்பெறாத அஞ்ஞானிகளின் பிறவிநோய ஒழியுமோ? (ஒருபோதும் ஒழியா.) எ-று.

பிறவியிலாத தேவரீரேயன்றிப் பிறரைக் கூறினமையின் தாமும் பிறவியகன்று விளங்கிப் பிறர்பிறவியையும் அகற்றவல்லவர் இக்கடவுளேயென்பதும், இடையே யிறவாதபடி நீண்டவாயுளை யுடையராகச்செய்வதாகலின் பவப்பிணியொழிக்கும் இக்கடவுளுக்கு அமிர்தத்தை யொருபுடை யுவமையாக்கியதென்பதும் கருத்தாகக்கொள்க. தெருமரல் - (காற்றுறுமோலை மாறிமாறிச்) சுழலல். அருமருந்து - அமிர்தம். உயர் - வினைத்தொகை. (கூஎ)

ஆண்டுகள் பலசென் றிடவிருந் திடினு மன்றியோ
ரிமைப்பினி லுடல, மாண்டுகு மெனினு நன்றுநின்
றாமரை மலரடிக் கன்பரா யிருப்பிற், பூண்டயங் கயில்
வேற் குதலையந் தீஞ்சொற் புதல்வன்மே லிவர்செய
லெனமார்த், தாண்டடன் வந்திவர விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) பூண் தயங்கு அயில் வேல் குதலை அம் தீம் சொல் புதல்வன் மேல் இவர் செயல் என - அணிகள்விளங்கும் கூரிய வேற்படையையும் திருந்தாமைவாய்ந்த அழகிய இனிய சொற்களையுமுடைய குமாரக்கடவுள் மேன்மேலேறித் தவழுதல்போல, மார்த்தாண்டன் வந்து இவர விளங்குறும் சோணசைலனே கைலைநாயகனே - சூரியனேறித் தவழவிளங்குஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, நின் கமலம் மலர் அடிக்கு அன்பர் ஆய் இருப்பின் - தேவரீருடைய தாமரைமலர்போன்றதிருவடிகட்கு அன்பராகி இருப்பீராகில், உடலம் ஆண்டு பல யுகம் சென்றிட இருந்திடினும் - அச்சரீரம் ஆண்டுகளாகிய பலயுகங்கள்செல்லுமளவும் இருக்கினும், அன்றி ஓர் இமைப்பினில் மாண்டு உகும் எனினும் - அல்லது ஓரிமைப்பொழுதில் மாண்டொழியுமாயினும், நன்று - நன்மையுடையதேயாம். எ-று.

ஆண்டெனபதற்கு உலகங்களைபபுரந்து என்னலுமாம். திருவடிப்பத்தி யெய்தியோர தேகத்தாலடையவேண்டிய சிவகதியெய்தப்பெற்றவரேயாதலின், தேகம் பன்னாளிருப்பினும் அன்றிச் சின்னாளிலொழியினும் அதுபற்றிக் கவலையின்றென்பதாம். இதனை *"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார் - துரும்பெழுந்து வெங்காற் றுயராண்டு உழவார் - வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம் - வருங்கால் பரிவதிலர்." என்பதனுமறிக. மார்த்தாண்டன் - சூரியன். சூரியனை உவமித்தது ஒளியாலும் இவாதற் செயலாலுமென்க. (௩௨)

விரைவிடை யிவரு நினைப்பிற வாமை வேண்டுநர்
வேண்டுக மதுரம், பெருகுறு தமிழ்ச்சொன் மலர்
நினக் கணியும் பிறவியே வேண்டுவன் றமியே, னிரு
சுடர் களுமேல் கீழ்வரை பொருந்த விடையுறல்
மணிக்குடக் காவைத், தரையிடை யிருத்தி நிற்ப
னோர் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) இருசுடர்களும் மேல் கீழ் வரை பொருந்த - சூரியனும் சந்திரனும் மேற்றிசை கீழ்த்திசைகளிலுள்ள அத்தகிரியினும் உதயகிரியினும் தனித்தனி தங்க, இடை உறல் மணிக்குடம் காவை தரையிடை இருத்தி நிற்பனோர் சோணசைலனே கைலைநாயகனே - (தேவரீர்) இடையில் மலைவடிவாக நிற்றல் இருபுறத்தும் மணிக்குடங்களைக் கொண்ட ஒரு காவடியைச் சுமந்து நிற்பவரையொக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, விரை விடை இவரும் நினை பிறவாமை வேண்டுநர் வேண்டுக - விரைந்து தாவுகின்ற இடபத்தில் ஏறியருளுந் தேவரீரை பிறவாமையைவேண்டி வேண்டுபவர்கள் வேண்டக்கடவர், தமியேன் நினக்கு மதுரம் பெருகுறு தமிழ் சொல்மலர் அணியும் பிறவியே வேண்டுவன் - அடியேன் தேவரீருக்கு இனிமைமிகுகி

* நாலடியார் அறன்வலியுறுத்தல் ௫.

த்த தமிழ்ச்சொற்களென்னும் மலர்களாற்றொடுத்த மாலையைத் தரிக்கும் பிறவியினையே விரும்புவேன். எ - று.

பிறவாமையா லெய்தப்பெறும் பேரின்பம் கடவுள்வழிபாடுடைய பிறவியாலும் எய்தலாமென்பது நூலோர்துணிபாகலின் 'தரிக்கும்பிறவியேவேண்டுவல்' என்றார். இது * "பிறவாத விதியெலன்ன பயன்வந்து பிறந்தாலு - மிறவாத பேரின்பம் பெறலாமால்" என்றதனுமறிக. சொல் - கருவியாகுபெயர்; பாலை யுணாத்தலின். அணிதற்கேதுவாகியபிறவியை அணியும் பிறவியென்றது காரியத்தைக் காரணமாகவுபசரித்தல். பௌர்ணிமையில் சூரியன் அத்தகிரியையடையுந் தருணத்துச் சந்திரன் உதயகிரியிலுதித்தமாவருதலின் அக்காலஞ்சுட்டி வாணித்து. டி. காவலென்பது காவப்படுதலிற போந்தபெயர். காவுதல் - சுமத்தல். சூரியசந்திரர்களை யியக்கி இடைநிறலின் காவுவோராகவு உவமித்தனரென்க. (ரு௧)

ஒண்மணிப் பசும்பொற் பூணிமா முலையார்க் குளத்திடை மெலாமளித் தடியார், கண்மணிக் கமையா விருந்துசெய் தருணீ கணமிருப் பதற்கிடம் புரியேன், வெண்மணிக் கழைமுன் கரியநெற் றிதழி வேங்கை பொன் சொரியகா சுணிங்க, டண்மணிப் பைக ளவிழ்த்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) வெண்மணி கழை முன் - வெள்ளிய முத்தங்களை யுதிர்க்கும் மூங்கில்களுக்கு முன்பு, கரிய நெற்று இதழி வேங்கை பொன் சொரிய - கறுத்த முதிர்காய்களையுடைய கொன்றையும் வேங்கையும் பொன்போலுமலர்களைத் தூவ, மாசுணங்கள் தண் மணி பைகள் அவிழ்த்திடும் சோணசைலனே கைலைநாயகனே - பாம்புகள் தண்ணிய மணிகளைப் பைவிரித்துக் கக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, ஒண் மணி பசும்

* கோயிற்புராணம் பாயிரம் - கஙு.

டான் பூண் இளமுலையார்க்கு - அழகிய [illegible]
பொற்பூணணிந்த இளமை [illegible] கொங்கைகளையுடைய [illegible] மங்கையர்க்கு
உளத்து இடம் எலாம் அளித்து - தன் உள்ள [illegible]
முற்றும் உரிமையாகத் தந்து, [illegible]
விருந்து செய்தருளும் நீ - [illegible]
தெவிட்டுதலில்லாத [illegible] விருந்து [illegible]
ளும் தேவரீர், கணம் இருட்டுதற்கு இடமுள்ள [illegible]
மேனும் இ[illegible]
லேன் (இவ்வறியாமையை [illegible]) [illegible].

எலாம் என்றமையால் [illegible]
முற்றும் மங்கையர் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
கொடைமேல்வைத்து [illegible]
[illegible]
எதிர் [illegible]
படம். ([illegible])

அருங்கலம் புனையும் மகளிர் [illegible] புணர்த்திடு [illegible], தூங்கும் [illegible] புலவர்க்கு [illegible] துதித்திட [illegible] வந்தே, மருங்கு நின்று அழகு ஆலத்தி தாங்குவபோல [illegible] பெருஞ்சுனையொடு பூம், [illegible] விளங்குறுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) மருங்குநின்று அழகு ஆலத்தி தாங்குவதுபோல் - [illegible] கங்களினின்று அலங்கார தீபங்களைத் தாங்குவனபோல, [illegible] மலர் பெருஞ்சுனையொடு பூத்தாமரைகள் நின்று இலங்க விளங்கு றும் சோணசைலனே கைலைநாயகனே - செந்தாமரைமலர்க ளைத் தாங்கிய பெரிய சுனைகளொடு பொலிவமைந்த அலகுஅ[illegible]

நிலைபெற்றுவிளங்க திகழும் சோணசைலனே! கைலைநாயக னே!, [illegible]க்கு - சுந்தரமூர்த்திநாயனாருக்கு, அரும் [illegible] [illegible] பகலி[illegible] இரவில் அணி மணம் புணர்த்தி - அரிய பூவை [illegible] [illegible]ள்ள [illegible] மங்கையர்களிருவரை மணமுடி[illegible]த்து, வாரணமும் துரங்கமும் உதவும் இறையாயே துதித்தி [illegible] [illegible] - [illegible]யானையையும் குதிரையையும் தந் [illegible] [illegible] பெறுது [illegible] [illegible]போக [illegible]. ([illegible]) [illegible] - று.

[illegible] [illegible] சங்கிலிநாச்சியார். இவ் [illegible] [illegible] [illegible] [illegible] குதிரையும், கைலை [illegible] [illegible] [illegible] [illegible]களத்தில் [illegible] [illegible] ஆ[illegible] [illegible]. இ[illegible] "* [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] - வா[illegible] புகும்[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] ஒ[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]க்குதல்போலச் [illegible] [illegible] [illegible] [illegible] அ[illegible] [illegible] [illegible] [illegible], [illegible] உவமித் [illegible]. அ[illegible] அழகிய [illegible] [illegible] [illegible], சனை [illegible], [illegible] [illegible] [illegible], அ[illegible] [illegible] ஆ[illegible]மாக்கலும் ஒன்று. (சக)

ஏ[illegible] கடைகடலனிந்த விருவொடு மணி மிடற் [illegible], [illegible] விருளுங் [illegible] கருமை யுருகுமிக் கிலங்குறுங் கண்டாய்; மாமெனுழில் [illegible] முழும்புழை [illegible] மணியொளிப் பிழம்பெழல் சிறுத்திக், [illegible] [illegible] முருக னெழுதனோர் சோண சைலனே கைலைநாயகனே.

* திருவாலொளிப்புத்தார்ப்புராணப பாயிரம். இதனை [illegible] [illegible]நாயனார் புராணம். [illegible] [illegible] [illegible].

(இ-ள்.) மாண் எழில் வராகம் உழும் புழை - பெருமை பெற்ற அழகிய பன்றிகள் இன்டுேந்துவாரத்தில், அகந்தன் மணி ஒளி பிழம்பு எழல் - ஆதிசேடனது உச்சிமணிகளின் ஒளித்திரட்சி மேலோங்குதல், சிறு தீ தாழுவின் முருகன் எழுதல் நேர் சோணசைலனே கைலைநாயகனே - சிறிய தீத்திரட்சிவடிவாக முருகக்கடவுள் தோன்றும் தோற்றத்தை யொத்திருக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, வண் உறும் அமரர் சடை கடல் அளித்த இருளொடு - வலிமைமிக்க தேவர்கள் கடைந்த கடல் தோற்றுவித்த (விஷமென்னும்) இருட்டினோடு, அடியேன் ஆணவம் இருளும் கலந்திடில் - அடியேனது ஆணவமென்னும் நீங்கா மலவிருளையும் சேர்ப்பீராயின், மணி மிடற்று கருமை அழகு மிக்கு இலங்குறும் - நீலமணிபோலும் கண்டத்தில் கருமையொளி அதிகரித்து விளங்காநிற்கும். எ - று.

அடியேனது ஆணவமலம் தேவரீருண்டவிடத்தினும் வருத்தும் இருண்மயத்ததாகலின் இதனையும் கண்டத்திலிருத்தியருளவேண்டுமென்பதும், வராகம் இண்டிய துவாரவழியில் ஆதிசேடன்மணி ஒளிவீசல், பெரிய தீத்தம்பமாயமருஞ் சிவபெருமானருகே சிறிய தீத்தம்பமாக முருகக்கடவுளெழுதலொக்குமென்பதும் கருத்தாகக்கொள்க. (சஉ)

மின்னவிர் சடிலக் கற்றையு மருள்கூர் விழிகளுந் திருமுகத் தழகும், கன்னவி றிரடோ ளுன்குபீ ரடியுங் கண்டுகண் களிக்குநா ளுளதோ, வின்னிசையொலிகேட் டுருகுதல் கடுப்ப விழிதா வருவிகிம் புருடர், தன்னிக ரிசைகூர் சாரலஞ் சோண சைல, னே கைலைநா யகனே.

(இ-ள்) இன் இசை ஒலி கேட்டு உருகுதல் கடுப்ப அருவி இழிதர - இனிய கீதமுழக்கங்கேட்டு மனமே உருகிக்கசிதல் போல, அருவிகள் சாற்புறமும் ஒழுகாநிற்க, கிம்புருடர் தன்னி

கர இசை கூர் சாரல் அம் சோணசைலனே கைலைநாயகனே - கிம்புருடர்களாற் பாடப்படுவதாய்த் தனக்குத்தானே ஒத்ததாகிய இனிய கீதங்களாமிகும் சாரலினையுடைய சோணசைலரே! கைலைநாயகரே!, மின் அவிர் சடிலம் கற்றையும் - மின்போல ஒளிரும் சடிலத் திரட்சியும், அருள் கூர் விழிகளும் - அருள் மிக்குத்திகழுந்திருக்கண்களும், திருமுகத்து அழகும் - திருமுக மண்டலவழகும், கல் நவில் திரள் தோள் நான்கும் - மேரு மலை என்றுசொல்லத்தக்க திரண்ட நான்குதோட் புயங்களும், ஈர் அடியும் - உபய திருவடிகளும், கண் கண்டு களிக்கும் நாள் உளதோ - நாயேனது கண்களால் தரிசித்து மகிழுங்காலமும் உளதோ? எ - று.

கல் — ஆகுபெயராய் மலையையுணர்த்திற்று. கடுத்தல் - ஒத்தல். (சாடு)

அள்ளிவெண் டிருநீ றுடன்முழு தணியு மடியவர்ப்
பெறினெழுந் திளங்கன் றுள்ளிநின் றுருகு மன்னை
யின்பயனிலெங் குருகுபெசன்றிலை நஞ்சிலனே, வெள்ளி
வெம்புலிமேல் வருமண் கரித்திரு மேனி யேறுத லகாதென
வெகுண்டு, தள்ளிவந் தருவி யிழிதருஞ் சோண
சைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) வெம் புலி பண்டு அரி வெள்ளி திருமேனி ஏறுதல் தகாது என வெகுண்டு - வெய்ய புலி கரடி சிங்கம் இவைகள் அவமதித்துச் சுவாமியின் திருமேனியில் ஏறியுலாவல் தகாதென்று கோபித்து, அருவி தள்ளி வந்து இழிதரும் சோண சைலனே கைலைநாயகனே - அருவிகள் அவற்றைக் கீழ்வீழ்த்தி வந்து இறங்குதலை ஒத்திருக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, வெண் திருநீறு அள்ளி உடல் முழுதும் அணியும் அடியவர் பெறின் - வெள்ளியதிருநீற்றைக்கொண்டு சரீரமுற்றுந்தரிக்கும் அடியவர்களை எதிரே காணப்பெறின், எழுந்து இளம் கன்று உள்ளி நின்று உருகும் அன்னையின் - இளங்கன்றினை நினைத்து நின்று

உருகுகின்ற தாய்ப்பசுவைப்போல், மனம நெக்கு உருகுப செ ன்று இறைஞ்சிலனே-நெஞ்சம் இளகிக்கசிந்து சென்று வணங்கி னேனில்லையே: (என்செய்வேன்!) எ - று.

கன்றையுள்ளியணையும் ஆனைபோல் 'அடியவர், இரங்கி மதி ரட்பெறின் கண்டமாத்திரத்தே, தம்பறுத்துக்கொண்டோடும் கன்றுபோல விரைந்து மனமுருகிச்சென்று இறைஞ்சிலேனே னினும் பொருந்தும். இப்பொருட்கண் உருகென் றதற்கு உருகி யணையுமென்க. அருவி புலியாதிகளைக்கீழ்வீழ்த்துவது திருமே னிமேலிவா தல்கூடாதென்று தள்ளுதலை ஒத்தமைதலைபது.

இழையெனத் தளர்சிற் றிடையுறு முலையா ளொ
க்குவண் புகலிவேந் தயின்ற, கழுமணிப் பசும்பொற்
குலவுபாற் கிண்ணக் கழுவுநீர் வார்ப்பதற் குறையாய்,
முழையிடைக் கதிர்மா மணிவிளக் கேற்றி முசுக்கலை
பிணையொடு மசோகத், தழையிடைத் தழுவி யுறங்கு
றுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) முசுக்கலை முழையிடை கதிர் மா மணி விளக்கு ஏற்றி - ஆண்முசுக்குரங்கு குகையில்கண் காந்தியுடைய பெரிய மணியினை விளக்காகவைத்து, அசோகம் தழையிடை பிணையொடு தழுவி உறங்குறும் சோணசைலனே கைலைநாயகனே- அசோகந்தழையைப்பரப்பி அதனிடையில் பெண்குரங்கினொடும் அணைந்து உறங்கப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே! இழை என தளர் சிறு இடை உண்ணுறுமுலையாள் - நூலிழைபோலத் துவளும் சிறிய இடையினையுடைய உண்ணாமுலையம்மையார், வண் புகலி வேந்து அயின்ற - வளவிய சீகாழிக்கிறைவராய் உதித்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் உண்டருளிய, கழும் மணி குலவு பசும்பொன் பால்கிண்ணம் கழுவும் நீர் - சாணையில் தீற்றிய மணிகள் பதிக்கப்பெற்ற பசும்பொன்னாலாகிய பாற்கிண்ணத்தைக் கழுவிய நீரையேனும், எனக்கு வார்ப்ப

தற்கு உரியாய் - அடியேனும் வாராக்கும்படி கட்டளையிடுவீ ர் க. எ-று.

அம்பிகையாருட்ட ஞானப்பாலருந்தும்பேற்றைப் பெறும் பக்குவமில்லேனாகையால், அடபாற்கிண்ணம் கழுவுநீரேனும் வார்க்கப் பணித்தருள்வீரென்பது கருத்து. கழுவும் என்பதில் இடையிலுள்ள உயிர்மெய்யெழுத்துச் [illegible]நின்றது. கழுவுதல் - [illegible] சாணையில் நீடல். உமைமுலையாள் வாய்ப்பட்டதற் மேனமும் அயின்ற பாற்கிண்ணமெனவும் பிறைவொட்டுமுறங்குறு மெனவும் கூட்டிமுடிக்க. முசு - ஒருவிதகுரங்கு. கலை - ஆண். பிணை - பெண். (சரு)

வினைவழி யுடலிற் கலமைந்தாறு முணவே வேண்டி னார் வினைகொடு புணரா, நனைமலர் புனைநின் றிருவடி யடைவா னொடாறும் வேண்டிலருலகர், கனையிருள் கரந்த வடபறிந் துணைப்போங் காட்சியிற் புனக்கிளித் தொகுதி, நனையெயிற் மணிகன் முறைபுகுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) புனம் கிளி தொகுதி நனை எறி மணிகள் - புனத்தில் (தினைக் கதிர்களில் வீழும்) கிளிக்கூட்டத்தினை (ஓட்டுதற்குக் குறச்சிறுமிகளால்) எறியப் படும் மாணிக்கக்கற்கள், இருள் கரந்த இடம் அறிந்து உணை போம காட்சியல் - நெருங்கிய இருள் ஒளிந்துள்ள இடத்தையுணர்ந்து அதனையழிக்கச்செல்லுந் தோற் றம்போல, முறை புகும் சோணசைலனே கைலைநாயகனே - குகையினுட்செல்லும சோணசைலரே! கைலைநாயகரே! உலகர் வினை வழி உடலிற்கு அமைந்துறும் உணவே வேண்டினார் - உல கிலுள்ளவர் தாம ஈட்டிய இருவினைக்கீடாக எடுத்த வுடலுக்கு முன்னரே அமைந்து கிடைக்கும் அற்பமான உணவையே வே ண்டுகின்றனர், வினை கொடு புணரா நனை மலர் புனை நின் திரு வடி அடைவான் ஒரொறும் வேண்டிலர் - இருவினைகளுஞ்

கொண்டு அடையப்படாதனவாய்த் தேன்சொரியும் மலர்புனையப்பட்டுள்ள தேவரீரது திருவடிகளையடையத் திலமும் வேண்டினாகளிலா; (அந்தோபாவம்!.) எ-று.

செல்வம் வறுமை இன்பம் பிணி மூப்பு சாக்காடு இவ்வாறும் கருவிலேயே அமைந்துகிடத்தலின், இவை முயல்வில்லாவழியும் எய்துமென்பதுதோன்ற 'வினைவழியுடலிற் கமைந்துறுமுனைவ' என்றும், திருவடிப்பேறு சிவபுண்ணியமுதிராவால் 'இருவினையொப்பெய்தின் அடையலாமல்லது சுகதுக்கங்கட்கேதுவாகிய நல்வினை தீவினைகளால் அடையமுடியாதென்பதுந்தோன்ற 'வினைகொடுபுணரா' எனறும், உத்தமையம் மறை ஆதிருவடி யாச் சனைவழிபாட்டாலே அறிஞா எளிமதய்துவரெனபதுதோன்ற 'கணைமலாபுனைநின் திருவடி' என்றுங்கூறினா. கூறவே, முயலவேண்டாததில் முயற்சிக்கும் முயலவேண்டியதில் முயற்சியில்லாமைக்கும் பாவங்காரணமல்லது வேறலவென்றவாறு. கணை - செருக்கம். உண்ணுதல் - அமைந்து ஆதிதல். கணை - தேன். வினைகொடு புணராததிருவடி எனக்கூட்டுக. கொண்டு மூன்றும்வேற்றுமைச்சொல்லுருபு, இது இடைக்குறைந்தது. (௪௨)

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன் மறுப்பவு முடிமிசை யிருத்தும், பூங்கழ லடியேன் றலைமிசை யிருத்தப் புகலினு மென்கொலோ யிரங்கார், யோங்குறு மண்ட கோளகை யளவு முயர்ந்துயோர் மழவிடை முதுகிற், றூங்குபு நடக்க விருந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) ஓங்குறும் அண்ட கோளகை அளவும் உயர்ந்தும் - உன்னதமான அண்டப் பரப்பளவும் ஓங்கிய திருமேனி வாய்க்கப்பெற்றும், ஓர் மழவிடை முதுகில் தூங்குபு நடக்க இருந்திடும் சோணசைலனே கைலைநாயகனே - ஒரு இளமைதங்கிய

இடபம் நனந்துமுதுகில் ஏந்திச்செல்லக் கனமின்றி அதிலமரும் சோணசைலரே! கைலைநாயகரே!, மா குயில் மிழற்றும் நாவலூரா புலவன் - மாஞ்சோலையிற் குயில்கள் இசைக்கும் வளமிக்க திருநாவலூர் புலவரான சுந்தரமூர்த்திநாயனார், மறுப்பவும் முடிமிசை இருத்தும பூ கழல் - மறுத்தும் தடுக்கவும் அவர் சிரசிலே சூட்டும் தாமரை மலர் போலும் திருவடிகளை, அடியேன் தலைமிசை இருத்த புகலினும் நீ இரங்காய எனக்கொல் - தானே முன்வந்து அவர் சிரசிலே சூட்டிய பலமுறை துதித்துவேண்டியும் தேவரீர் இரங்குகிலீர் என்னையோ? எ-று.

நாவலூராப்புலவனை மறுத்தது திருவதிகையில் சித்தவடமடத்தில் சிவபெருமான் அந்தணராய் வந்து திருமுடியிற் சூட்டியபொழுது. கொல் இரக்கம்பற்றிவந்த ஐயம். அண்ட - சோணசைலமா உயர்ந்தும் மடவிடைமுதுகிற்றுங்க இருத்தலாவது - மலைவடிவாயிருத்தலோடு சேர்மாஸ்கந்தராதிய வடிவமாகியும் அமர்தல். ஒருமையென்பது ஈண்டுச் சிறுமைப்பொருளது. தாங்குபு செய்பு என்னும்வாய்பாட்டு வினையெச்சம். (சஎ)

ஈரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு மின்சொலு
மிந்தியப் பகையெலாம், வீரமு மருளி யெனதுளவம்
பிறவி விலக்கிட் கொள்ளுநா ளுளதோ, வாரமு
மகிலுந் தடிந்துசெம் மணிக ளரிந்தெறிந் தெறும்வ
லிக் குறவர், சாரலி னிறுங்கு விதைக்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) எறும் வலி குறவர் - மிக்க வன்மையுடைய வேடர்கள், சாரலில் ஆரமும் அகிலும் தடிந்து செம்மணிகள் அரித்து எறிந்து - மலைச்சாரலிலுள்ள சந்தன மரங்களையும் அகில்மரங்களையும் வெட்டி (அங்குள்ள) செவ்விய நாகமணிகளை ஆராய்ந்தெடுத்தகற்றி, இறுங்கு விதைக்குறும் சோணசைலனே கைலைநாயகனே - சோளங்களை விதைக்கும் [illegible] சோண

சைலரே! கைலைநாயகரே!, ஈரமும் அருளும் ஒழுக்கமும் - அன் பும் இன்சொலும் இந்திரியப் பகை வெல் வீரமும் அருளி - அன் பும் கருணையும் ஆசாரமும் குணவமைதியும் இனியசொற்களும் பஞ்சேந்திரியங்களாகிற பகைகளை வெல்லும் திடமும் அடியே னுக்குத்தந்தருளி, எனது வெம் பிறவி விலக்கி ஆள் கொள்ளும் நாள் உளதோ - என்னுடைய கொடிய பிறவிப்பிணியையகற்றி அடிமைகொண்டருளும் காலமும் உளதோ? (அறியேன்.) எ - று.

அன்பு - உரியவரிடத்துநிகழும் மனநெகிழ்ச்சி. அருள் - எல் லார்மாட்டும் நிகழுந்தயை. ஈரம் முதலியவை ஒன்றுக்கொன்று காரணகாரியமாய்ப் பிறவிநீக்கத்திற்கு ஏதுவாதல் பற்றி முறை ப்படுத்து வேண்டியபடி. ஆராயாதிகளைத் தடிந்தெறிதற்குக்கார ணம் அவற்றிலே பொருட்படுத்தாமை. அகில் - சந்தனமரம் போல வாசனையுடையதொருமரம்; இது முதிர்ந்துலவரம்பட் டிய கள்ளிச்செடியிடையிலும் பிறக்கும். * "கள்ளிவயிற்றின கில்பிறக்கும்" என்பதனானுமுணர்க. எறும்புவலி ஒருபொருட் பன்மொழி. (௪௮)

தொகைமிகு மமரர் முனிவரர் பரவித் தொழுதகை யொடுவிரை கமழ்பூம், புகைமிகு மணிமண் டபத் திடை நெருங்கப் புழுகுநீ யணிதல்கண் டுவந்தேன், குகைமிகு வாயிற் சோதிமா மரஞ்சேர் குளிர்மதி விழுங்கவாய் வைத்த, தகைமிகு மூரற் றிரதனசேர் சோண சைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) குகை மிகு வாயில் - மலைக்குகையினது பெருத்த வாயின்கண்ணிற்கும், சோதி மா மரம் சேர் குளிர் மதி - சோ தியையுடைய பெரிய மரத்தினுனியிற் சேர்ந்த குளிர்ந்த சந்திரன், விழுங்க வாய் வைத்த தகை மிகும் மூரல் இரதன சேர் சோண.

* நான்மணிக்கடிகை - ௬.

சைலனே கைலைநாயகனே - விழுங்குதற்கு வாயின்கண் வைத்த வெண்ணிறமிக்க அன்னத்திரட்சியை ஒத்துவிளங்குகின்ற சோணசைலரே! கைலைநாயகரே!, பூ விரை சமழ் புகை மிகும் மணி மண்டபத்திடை - பொலிவுபெற்ற வாசனைவீசும் புகைமிகுந்த மணிமயமான மண்டபத்தினிடத்தில், தொகை மிகும் அமரர் முனிவரர் பணிவி தொழுத கையொடு நெருங்க - [illegible]மான முப்பத்துமுக்கோடி தேவராதியர்களும் முனிவர்களும் துதித்து அஞ்சலிக்குங் கரங்களோடு நெருங்கிநின்று தரிசிக்க, நீ புழுகு அணிதல் கண்டு உவந்தேன் - தேவரீர் புழுகணிந்துகொள்ளும் விழாவினைத் தரிசித்து உவப்படைந்தனன். (இதற்கு எப்புண்ணிய மியற்றினேனோ அறிந்திலேன்.) எ - று.

பூர்வத்திலே ஒரு புழுகுப்பூனை, இச்சோணசைலப் பெருமானுக்குச் சார்தெனப் புழுகையப்பி அகலாது வசித்த புண்ணியப் பேற்றால் அயோத்தியிலே மனுகுலத்தில் ஏமாங்கதனென்னும் அரசனாயுதித்துப், பூர்வசன்மவாசனையால் ஈங்கடைந்து, புழுகாதிய கலவையணிந்து வழிபட்டுச் சிவபதமெய்திய ஐதீகம்பற்றி நடக்கும் மகோற்சவதரிசனம் கிடைக்கப்பெற்ற ஆர்வமேலீட்டால் துதித்தவாறு. இச்சரித்திரவிரிவை அருணகிரிபுராணம் தராபதிபுழுகுசாத்தியசருக்கத்திலுணர்க.

சோணசைலநாதருக்கு மலைக்குகையே திருவாயாகவும், அங்குநிற்குஞ்சோதிமரமே அன்னமமைக்கும்பாத்திரமாகவும், சந்திரனே பாற்றிரளன்னமாகவும் உருவகித்தவாறு. விரை சமழ்புகையாவது - குந்துருக்கம் பச்சைக்கற்பூரம் அகில் சந்தனம் கருஞ்சீதாரி என்பவற்றின் பொடியோடு சிறிது கபிலைப் பசுநெய்கலந்து இடுந்தூபம். இது பஞ்சதூபமாம். இன்னும் தசாங்கமுதலாகப் பலதிறப்படும். (௪௧)

சினம்படு முரண்கொள் மூவரை யெனையுஞ் சேர்ப்பது தகுமுனைக் கிசைவன், டினம்படு மலரி னகழ்

ழொடுபுல் லிதழுமொன் றுதலுல குடைத்தே, மனம்
படு மடிமை யுளன்சிலை யெறிகரு மனங்குழைந் துமை
யவள் களபந், தனம்பட வடிவங் குழைந்திடுஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) மனம் படும் அடிமை உளன் சிலை எறிக்கு மனம் குழைந்து - அகத்தொண்டுடையராகிய சாக்கியநாயனார் விட்டெறிந்த கல்லுக்குத் திருவுளம் உருகப்பெற்று, உமையவள் களபம் தனம் பட வடிவம் குழைந்திடும் சோணசைலனே கைலைநாயகனே - உமாதேவியாரின் சந்தனமணிந்த கனதனம் பொருந்துதலால் திருமேனிகுழைந்து மகிழப்பெறும் சோணசைலரே கைலைநாயகரே !, இசை வண்டு இனம் உறும் மலர் அகவிதழொடு புல் இதழும் ஒன்றுதல் உலகு உடைத்து - இசைபாடும் வண்டினங்கள் பொருந்திய மலர்களில் அகவிதழ்களோடு புறவிதழ்களும் பொருந்திநிற்றல் உலகினியற்கையாகும் (ஆதலால்) சினம் படும் உளம் கொன்றவர் அவை எனையும் சேர்ப்பது உனக்கு தகும் - சினக்கும் உளத்தின்சேட்டையையொழித்த அடியவர்கூட்டத்தில் அடியேனையும் தேவரீர் சேர்ப்பது பொருந்தும். எ - று.

சினம் - கோபமிகுந்தடங்கியபின் நிற்கும் ஒரு குணம். இதனைத் திருமுருகாற்றுப்படையில் "கடுஞ்சினங்கடிந்த காட்சிய" என்பதற்கு நச்சினார்க்கினியாருளிய உரையானுணர்க. எனையும் என்பதில் உம்மை இழிவுசிறப்பு. அர்ச்சனை வழிபாட்டிற்குரியதாகும் அகவிதழொடு உரித்தாகாப் புறவிதழும் பூவிதழென்னு மொற்றுமையால் ஒன்றிநிற்றல் உலகியற்கையாகலின், உரிய உமதுதொண்டரோடு உரிமையற்றயானும் உமதுதொண்டனெனப் பெயர்பூண்டிருத்தலின், ஒன்றிநிற்றற்பாலனேயென்பார் 'சேர்ப்பதுதகும்' என்றும், புறத்தே தொண்டுடையாராகாது அகத்தே தொண்டுடையராகலின், 'மனம்படுமடிமை'

என்றுங்கூறினர். "அல்லி அகவிதழ்" "புல்லி புறவிதழ்" என்பன உதாரணம். (௫௦)

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன் மணிப்
பணி பெரும்புவி யாட்சி, யாம்பரி சலவென் றுன்பத
மருவி னன்றியென் கவிகளென் கவிகள், காம்பரி முரா
ண்முழம் மதகரி வளைந்த நகவிட மோதலாற் கதிர்த்
தேர்த், தாம்பரி நுணுக்கென் றிந்திடுஞ் சோண
சைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) முரண் முழுமதம் மிகு வளைத்த காம்பு அரிமடமாதலால் - வலிமையும் மும்மதமுமுடைய யானையானது துதிக்கையால் வளைத்த மூங்கில்களை - அவை நாக்குதலால், கதிர் தேர் தாம் பரி நுணுக்கென்று ஈர்த்திடும் சோணசைலனே கைலைநாயகனே - சூரியனுடைய தேரிற்பூட்டப்பட்டுத் தாவிச்செல்லும் சப்தமாகிய குதிரை (அதனைச்) சம்மட்டியின் அடியென மதித்து விரைவாகத் தேரை இழுத்துச்செல்லும் சோணசைலரே! கைலைநாயகரே!, வாம் பரி கரி தேர் சிவிகை பொன் குவியல் மணி பணி பெரும்புவி ஆட்சி - தாவிச்செல்லுங்குதிரை யானை இரதம் பல்லக்கு பொற்றிரட்சி இரத்தினம் பதித்த அணிகள் பெரிய உலகாளுதல் (ஆகிய இவைகள்), ஆம் பரிசு அல என்று உன் பதம் மருவின் அன்றி என் கவிகள் - என் கவிகள் கீர்த்திக்குந் தகுதியுடையன அல்லவென்று வெறுத்துத் தேவரீரது திருவடிப்புகழ்ச்சியைப் பெற்றாலல்லது எனது பாடல்கள் என்னபயனைத்தரும் பாடல்களாளும் (ஒரு பயனையும் தாராதனவே.) எ - று.

ஆதல - கீர்த்தித்தல். கீர்த்திப்பனவல்லவென்வே அழிவன வென்பது தானேபோதரும். பரிசு-பரிசுடைப்பொருளை யுணர்த்தலின் ஆகுபெயர். கவ்கள் உலகவின்பக்கை விமைக் கபகடாக

* திவாகரம்..

திருவடிகளைப் புகழ்ந்தாலல்லது பயனுடையனவாகா என்பது கருத்து. காம்பு அரி - மூங்கில்; ஒருபொருட் பன்மொழி. மூங்கிலின் செறிவுமாம். வாவும் ஆகும் தாவம் என்பன இடைக் குறைந்தன.

(௫௧)

துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுநோய் தொலைப்பினுந் தொலைத்திடா துறினு, நின்னடி மலரை யன்றியானை மறந்து நினைப்பனோ விறகரும்வா னவரை, மன்னளி பருக வுடையிருள் மதுவும வாரண மதமும்வெள் ளருவி, தன்னொடு மிகலி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) *மன் அளி பருக உடை இருள் மதுவும் - நிலைபெற்ற வண்டுகள் மொய்த்துண்ணுதலால் உடைந்த தேன் கூட்டினின்றும் ஒழுகுந்தேனும், வாரணம் மதமும் - யானையின்மதநீரும், வெள்ளருவி தன்னொடும் இகலி ஒழுகுறும் சோணசைலனே கைலைநாயகனே - வெள்ளிய அருவிநீரோடு மாறுபட்டு இழியப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!; துன் உறு துயரம் பிறவி வெம் கொடுநோய் தொலைப்பினும் - மேன்மேலுறுந் துன்பமயமாகிய பிறவியென்னும் வெவ்விய கொடியபிணியை (அடியேனுக்கு) ஒழிப்பினும், தொலைத்திடாது உறினும் - ஒழிக்காது மேன்மேல் உறச்செய்யினும், நின் அடி மலரை அன்றி - தேவரீரது திருவடித்தாமரைமலரையல்லது, இறக்கும் வானவரை மறந்தும் யான் நினைப்பனோ - மரிக்கும் தேவகூட்டங்களை மறந்தேனும் அடியேன் நினைப்பனோ? (நினையேன்.) எ-று.

அநாதியாய் விடாது தொடர்ந்துவருதலால் 'துன்னுறுபிறவி' என்றும், அது அணுத்துணையும் இன்பம்பயத்தலின்றித் துன்பமேபயத்தலால் 'வெங்கொடுநோய்' என்றும், "* உடையாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே" என்

* திருவாசகம் குழைத்தபத்து - உ.

றப்படி ஆண்டாமுறைமைபெரும தலைவனையும் ஆக்கவினைவிற்கு ஏது வாமாகையால் 'தொலைப்பினுந் தொலைத்திடாதுறினும்' என்றும், தேன் செந்நிறமும் மதம் கருநிறமுமாய் நிறம்வேறுபடுத லால் 'வெள்ளருவிதன்மை மிகலி' என்றுங் கூறினர். உற ம்பிடினுமெண்ணும் பிறவியும் உறினுமெனத் தன்வினையாய் நின் றது. இறால் - தேனடை. (ருஉ)

நீரினு லழலால் வருமகொடும் பிணியா னிருதரா லலகையால் விலங்காற், சோரரால் வருந்து மவரலர் நினது தூயநா மம்புகன் றிடுவார், சீருலா மணியா லரி பரவு தலாற் றிசையுற நீள்கையா லெழின்மை, சார் தலா லுமையாள் விழிநிகர் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) சீருலாம் மணியால் - கனம்வாய்ந்த அரதனமணிக ளாலும் (பொலிவமைந்த கண்மணியுடைமையாலும்), அரி பர வுதலால் - சிங்கங்கள் சூழ்தலாலும் (செவ்வரிபரவப்பெறுதலா லும்), திசை உற நீள்கையால் - திக்குகளிற்பொருந்த நீண்டிரு த்தலாலும் (நோக்கமமைய நீளச்செல்லுதலாலும்), எழில் மை சார்தலால் - எழுச்சியுடைய மேகங்கள் தவழ்தலாலும் (அழ கிய மை தோய்தலாலும்), உமையாள் விழி நிகர் சோணசைல னே கைலைநாயகனே - உமையம்மையின் திருக்கண்களுக்கு நிக ராய்த்திகழுஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, நினது தூய நாமம் புகன்றிடுவார் - தேவரீருடைய சுத்தமாகிய திருநாம த்தைத் துதிக்கப்பெறுமவர்கள், நீரினால் அழலால் வரும் கொ டும் பிணியால் நிருதரால் அலகையால் விலங்கால் சோரரால் வருந்துமவர் அலர் - நீராலும் நெருப்பாலும் (வாத பித்த சிலே ஷ்மங்களால்) உண்டாகும் கொடிய நோய்களாலும் அரக்கரா லும் பசாசங்களாலும் மிருகங்களாலும் கள்வர்களாலும் துயருழ ப்பவராகார்கள். எ - று.

மூன்றனுருபுகள் கருவிப்பொருள்ளன. "* ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது" ஆகலின் சிவநாமத்தினைத் 'தூயநாமம்' என்றும், "† கொல்வாரேனுங் குணம்பல நன்மைக - ளில்லாரேனு மியம்புவ ராயிடி - னெல்லாத் தீங்கையு நீங்குவர்" என்பது திண்ணமாகலின் 'வருந்துமவரலர்' என்றும் கூறினர். பின்னிரண்டடியும் சிலிஷ்டமாய்ப் பொருள்பயத்தலுணர்க. சிலிஷ்டம் - சிலேடை. சீருலாம் அணியெனவும் பிரித்தலும், சோணசைலத்தில் அரிபரவல் திருமால் துதித்தலென்னலும் ஒன்று. திசை - திக்கு, நோக்கம் எழில் - எழுச்சி, அழகு. எழுச்சியெனக்கொள்ளுங்கால் "‡ நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம் - மண்மாண் புனைபாவை யற்று" என்பதிற்போல எழில் என்பதில் இல் தொழிற்பெயர்விகுதி என்க. (௫௩)

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிர முலைமுகட் டணிபெற மலராள், பகல்விளக் கென்ன வொளிகொடு வரும்பொற் பாவையர்க் கிரங்கிடா தருளா, யகவிளக் கென்ன வகறிரி நெய்தீ யாக்குவோ ரின்றியே யெழுந்த, சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) அகம் விளக்கு என்ன - ஒவ்வொருவீட்டிலும் ஏற்றப்பட்ட விளக்கினைப்போல, அகல் திரி நெய் தீ ஆக்குவோர் இன்றியே - தகழியும் திரியும் நெய்யும் நெருப்பும் (இக்கருவிகளைக்கொண்டு) ஏற்றுவோரும் இல்லாமலே, எழுந்த சகம் விளக்கு என்ன விளங்குறும் சோணசைலனே கைலைநாயகனே - ஒளியுடன் தோன்றிய உலகதீபமென்று அன்பர்கள் துதிக்குமாறு பிரகாசிக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, முகம் விளக்கு என்ன மணிக்குழை மிளிர - முகத்துக்கு (ஏதோர்) விளக்கபெ.

* ஆளுடையபிள்ளையார் தேவாரம் நமச்சிவாயப்பதிகம் - ௧.
† ஷை :- ௫. ‡ திருக்குறள் - ௪௱௭.

னும்படி அரதனத்தோடு விளங்க, முலை முகடு அணிபெற-முலைகள்தம்மேலே ஆபரணவகைகளினு லழகுபெற, மலராள் பகல்விளக்கு என்ன ஒளிகெட வரும்-தாமரைமலரில்வசிக்கும் இலக்குமியும் பகலொளிமுன் விளக்கொளிபோலத் (தம்முன்) ஒளிகெடும்படி வராநின்ற, பொன் பாவையர்க்கு இரங்கிடாது அருளாய் - பொற்பதுமைபோல்வார்க்குக் காதல்பூண்டு வருந்தாதபடி கிருபைசெய்வீராக எ - று.

விளக்கு என்பதில் வினைமுதற்பொருள் விகுதிபுணர்ந்துகெட்டது. விளக்கு-விளக்கத்தைச்செய்வது. பகல்விளக்காதல் தன்னொளிமழுங்கல். மிளிரப்பெற வரும் பாவையர் என இயையும். அசவிளக்குக்கு மாறுபட்டுக் கருவியாதிகளின்றி உலகைவிளக்கும் விளக்கப்படாதது முடிவிலாற்றலுடைமையை விளக்கிநின்றது

நீலியோ டுனைநா டொறுமருச் சித்து நின்றொழில்
புரிந்திட வுடற்குக், கூலியோ தனமென் றளிப்பவர்க்
கன்றிக் கூற்றினைக் கடக்குமா றெளிதோ, மாலியோ
சனையின் வணங்குறுங் கைலை மலைநிவே தித்திடக்
குவித்த, சாலியோ தனமென் றிடத்திகழ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) மாலியோசனையில் வணங்குறும் கயிலை மலை - திருமாலும் யோசனைதூரத்தினின்று வணங்கும் திருக்கைலைமலையானது, நிவேதித்திட குவித்த சாலி ஓதனம் என்றிட திகழ் சோணசைலனே கைலைநாயகனே - நிவேதனஞ்செய்தற்பொருட்டுக் குவித்த செந்நெலாற்சமைத்த அன்னக்குவியலென எதிர்விளங்கப் பிரகாசிக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, நீலியோடு உனை நாடொறும் அருச்சித்து நின் தொழில் புரிந்திட - அம்பிகையாருடன் தேவரீரையும் தினமும் பூசித்து உமது தொண்டினையே செய்துவருதற்கு, உடற்கு கூலி ஓதனம் என்று அளிப்பவர்க்கு அன்றி - உடலுக்குக் கூலியாகக்கொடுக்கற்பாலது அன்ன

மெனத் தேர்ந்துகொடுக்குந் துறவிகட்கேயல்லது (உடற்பற்றுடைய ஏனையோர்க்கு), கூற்றினை கடக்கும் ஆறு எளிதோ - இயமனைக் கடந்துகொள்ளும்விதம் எளிமையதாமோ? (ஆரிதாம்.) எ - று.

நீலி - நீலநிறப்படிவத்தள், ஒருசொற்றுமைப்பொருளது. *"பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை" யெனும் முதுமொழிக்கும்வரையும் கடவுள் வழிபாட்டிற்கு வேண்டியிருத்தலின், அதன்பொருட்டு உடலோம்புவோர்க்கல்லது போகாதிநுகர்ச்சியின் பொருட்டு ஓம்பும் தேகாபிமானிகளுக்குக் கூற்றைக்கடத்தலரிதென்பதாம். மீயாசனை யென்பு மெம்பொருளாதியின் மேற்று. யாதுமென்னும் உயாவு சிறப்புமைதொக்கது. மாதுமையமர்ந்த பாகனையோரணுகற்கு எளிதுகொல்லோ? என்பது கருத்து. அதுது கையகைலையும் நமக்கெகுதா குவித்த திரு ஈவாரைடோன்று விளங்கத் திகழும் சோணசைலமானே. ௫

தோற்றிடும் பிறவி யெனுங்கடலை விடுந்து துயர்ப்பிணி யெனுமலை யலைப்பக், கூற்றெனு முதலை விழுங்குமுன் னினது குரைகழற் கரைபுக விடுபுபா, வேற்றிடும் விளக்கின் வேறுபட் டகத்தி னிருளெலாந் தன்பெய ரொருகாற், சாற்றினு மொழிக்கும் விளக்கெனுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) ஏற்றிடும் விளக்கின் வேறுபட்டு - உலகினோர் ஏற்றிவைக்கும் விளக்கிற்கு மாறுபாடுடையதாய், தன் பெயர் ஒருகால் சாற்றினும் - தனது திருநாமத்தை ஒருமுறை உச்சரிப்பினும், அகத்தின் இருள் எலாம் ஒழிக்கும் விளக்கு எனும் சோணசைலனே கைலைநாயகனே - உள்ளத்திலே மறைந்து இலைச்செய்துறையும் ஆணவாதி மலவிருட்கூட்டமுற்றும் கெடுத்தருளும விளக்கென்று அன்பர்களாற் றுதிக்கப்பெறும் சோணசைல

*. திருக்குறள் - ௩௪௫.

ரே! கைலாநாயகரே!, தோற்றிடும் பிறவி எனும் கடல் வீழ்ந்து - உதிக்கும் பிறப்பென்னும் கடலில் விழுந்து, துயர் பிணி எனும் அலை அலைப்ப - துன்பினைவிளைக்கும் பிணிகளாகிற அலைகள் (இடையிடையே) அலைத்தலைச்செய்ய, கூற்று எனும் முதலை விழுங்கு முன் - இயமனென்னும் முதலையானது உட்கொள்ளும் முன்னரே, குரை கழல் கரை புக விடுப்பாய் - தேவரீரது ஒலிக்கும் வீரக்கழலணிந்த திருவடியென்னும் கரையிலடையுமாறு (அடியேனைச்) சேர்த்தருளவேண்டும், எ-று.

கழல் - தானியாகுபெயராய்த் திருவடியை உணர்த்திற்று. குரைகழல் - வினைத்தொகையின் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையுமாம். விளக்கில் இன் ஐந்தனுருபு நீக்கப்பொருளது. அளப்படாமையின் பிறவியைக் கடலென்றும், மேன்மேலும் மூண்டு முதலிய பிணியை அலையென்றும், “மூக்கு முதலையும் கொண்டுவிடா” என்றபடி தான் பற்றியவுயிரை மீளவிடாமையின் இயமனை முதலையென்றும், உருவகித்தார். வேறு பொருளாவது - ஏற்றிடும் விளக்கு தன்மைய திட்டசம் விருமையான்ம ஒழுப்பட்டதாகத் தான் அதற்குடம்பாய் எதிரிட்டதாக பாக்கதையும் மலமென்னும் அகவிருளையும் தன்மையுருவைத்த மாத்திரத்தானே ஒழித்தல். இது *“இல்லகவிளக்கது இருள் கெடுப்பது - நல்லகவிளக்கது நமச்சிவாயவே.” என்பதனாலுமுணர்க. (௫௪)

கந்தர மிருந்து மடகுகீ ரயின்றுங் கரதலத் தமைத் திருபதத்த, மந்தர கிரிதது நின்னிலை யறியா ரரும்பவ மொழியுமோ வுரையாய், யிந்திரன் வணங்கு மல்லிகை மலரினின்னடைசாத்தியமதனை நிறைந்த, சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோண சைலனே கைலைநாயகனே,

* ஆளுடையடிகள் தேவாரம் நமச்சிவாயப்பதிகம். ௮.

(இ-ள்.) இந்திரன் வனத்து மல்லிகை மலரின் இண்டை சாத்தியது என - இந்திரன் தனது நந்தனவனத்து மலர்ந்த மல்லிகை மலரினாற்றொடுத்த கொண்டைமாலையைச் சாத்தியதுபோல, நிறைந்த சந்திரன் முடிமேல் வர்த்தும் சோணசைலனே கைலை நாயகனே - பூரணசந்திரன் திருமுடியின்கண் வசிக்கப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!, நின் நிலை அறியா - தேவரீரது உண்மைநிலையினை உணரப்பெறாதவர்கள், கந்தரம் இருந்தும் - மலைக்குகைகளில் வசித்தும், அடகு நீர் அயின்றும் - இலைகளையும் சலத்தையும் புசித்தும், கரம் நிலத்து அமைத்து இருபதமும் அந்தரம் நிமிர்த்தும் - கரங்களைப் பூமியிற் பொருந்த இருகால்களையும் உயரத்தூக்கியும் (கர்ப்பவேலைகளாக் காலவரையின்றிச் செய்தும்), உறும் உடலம் வறிதுபோ உரையாய் - அவர்களுடைய அரியபிறவிச்சாகரமுடியாதோ தேவரீர் திருவாய் மலர்ந்தருள்வீராக. எ - று.

(நிலையாவது - அனைவருக்குந் தலைவருமாகிய எல்லாமுடையராய ஆன்மாக்களுக்கு விம்பமாகி தமது அருட்சத்தியாற் பக்குவர்களுக்கு அநுக்கிரகம்பண்ணும் தன்மையென்க. கவ்வுணிலையறியார் [illegible] கருமயோகங்கள் பயன்படாமைப்படுவது கருத்து. அரும்பவ [illegible] னைப்பற்றி அருமை பக்கமைமேல் ஏறு, அருந்துயர [illegible].)

கூப்புறு கரமு முலர்ந்திடு முகமுங் கொண்டுநின்
றனைவலம் புரிவோர், மேய்படு சரண மலர்ப்பொடி
மேனி மேற்படிற் பவம்பொடி படுமே, பூம்பொழிற்
புகலிச் சிறைவனா னிலஞ்சேர் புண்ணியத் தலங்களி
னடைந்து, தாய்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) பூம்பொழில் புகலிக்கு இறைவன் - மலர்ச்சோலைகள் புடைசூழும் சீகாழிக்குத் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், நானிலம் சேர் புண்ணியம் தலங்களின்

அடைந்து - நால்வகைநிலத்தைச்சார்ந்தனவாய்ப் புண்ணியவிருத்திக்குக்காரணமாகிய தலங்களிலெழுந்தருளி, தாம் புனை பதிகந்தொறும் புகழ் சோணசைலனே கைலைநாயகனே - தாம் துதிக்கும பதிகங்கடொறும் புகழ்ந்து பாடப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!, கூம்புறு கரமும் மலர்ந்திடு முகமும் கொண்டு - குவிந்த கைகளும மலர்ந்த முகமுமுடையராய், நின்றனை வலம புரிவோர் மேயபடு சரணம் மலர் பொடி-தேவரீரைப் பிரதக்ஷணஞ்செய்பவருடைய மேன்மைவாய்ந்த திருவடிமலரிணைகளெழும் தூளி. மேனிமேல் படில் பவம் பொடிபடுமே - (அடியேனது) சரீரத்திற்படப் பெறுவேனேல் எனது பிறப்பும் அழிவடைந்திடுமே! (அங்ஙனம் பெற்றேனில்லையே!). எ-று.

"ஒக்கவிழுந்து சீப்பாயு மொனபதுவாய்ப் புண்ணுக் - கிடும ருந்தை யானறிந்து கொண்டேன—கடுவருந்துந், தேவாதி தேவன் றிருவொற்றி யூர்த்தெருவிற், போவா ரடியிற் பொடி." என்று பட்டினத்தடிகளுமாகலின உடலையொழிக்கு மருந்து அடியார்களின் பாததூளியேயாதலால், 'பொடிமேனியேற்படிற் பவம்பொடிபடுமே' என்றும், சம்பந்தமூர்த்திகளருளிய ஒவ்வொரு திருப்பதிகங்களிலும் ஒன்பதாவதுபாடலில் இத்தலவிபவத்தையே கூறுதலால் 'பதிகந்தொறும்புகழ் சோணசைலம்' என்றுங் கூறினார். கூம்புறுகரம் என்றதற்கு முரண்பட மலர்ந்திடுமுகம் என்றலின் முரண்டொடை. ஏகாரம் தேற்றம்; அசையுமாம். நால்வகைநிலம் - குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல். (௫௮)

காமமே மருவும் விலங்கினுங் கடையேன் கற்பனை கற்றிலேன் விடய, ஞானமே யுடையே னறிஞரைக் காணி னணிலே னுய்யுநா ளுளதோ, வானமே யளவு

* பட்டினத்தடிகள்.

நெடுங்கிரி மலய வாதமோ துறுபவர் கட்குத், தான மே யுதவ வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) வானம் அளவும் நெடும் மலயகிரி வாதம் மோதுறு பவர்கட்கு - ஆகாயமளாவிய நீண்ட மலயமலையினின்றும் தென்றலால் தாக்கப்பெற்றவர்கட்கு, தானம் உதவவே வளர்ந் திடும் சோணசைலனே கைலைநாயகனே - வசிக்குமிடம் தந் தருளுதற்கே ஓங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, கற் பவை கற்றிலேன் - ஓதியுணர வேண்டியவற்றை ஓதியுணர்ந் திலேன், விடயம் ஞானமே உடையேன் - (கண்டு கேட்டு உண்டு உற்று உயிர்த்து அறிதலாகிய) விஷய வுணர்ச்சியையே உடை யேன், அறிஞரை காணின் நாணிலேன் - நினதடியாரான அறி ஞரைக் காணப்பெறில் நாணிற்றிலேன் (ஆகையால்), கானமே மருவும் விலங்கினும் கடையேன் உய்யும் நாள் உளதோ - காட் டிலேயே தங்கும் மிருகக்கூட்டத்தினுங் கடைப்பட்டவனாகிய (நாயேன்) உய்தலடையுந் தினமும் உண்டோ? (அறியேன்) எ-று.

கற்பவை-என்பது ஞானநூல்கள். * "கற்க கசடறக் கற்பவை" என்பதும் இக்கருத்ததே. கற்பவைகளைக் கற்றலாதியவின்மை யின் 'விலங்கினுங்கடையேன்' என்றும், தென்றலால் பொத்து ண்டு திகைத்து வாடிவருந்தினோர்க்கு அவ்வாறின்றி நிவர்த்திப் பான் தானமளித்துத் தயவுபெருக்குவித்தலின் 'தானமே யுதவ' என்றுங்கூறினார். எதுகையேகாரம் நான்கனுள் மூன்றாவது அசை, ஏனையவைபிரிநிலை; தேற்றமுமாம். தானமுதவவே என ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. (௫௬)

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும் விதியினைக் கவளமுண் டெவவுங், கழைகளி நெடுங்கல் யானையின் மனிந்து கடக்குமென் பழமொழிக் கிடு

* திருக்குறள் - ௩௯௧.

மோ, மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரு மலி
தரு புகையென வெழுந்து, தழலுரு வுண்மை விளக்
குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) மழை முகில் வந்து தவழ்ந்து - நீர்முகந்த கருமுகிலணுகிப்படிந்து, விண் படரும் மலிதரு புகை என எழுந்து - ஆகாயத்திற் செல்லும் மிக்க புகைபோல மேற்கிளம்பி, தழல் உரு உண்மை விளக்குறும் சோணசைலனே கைலைநாயகனே - தேவரீர்கொண்ட இம்மலையுருவம் அக்கினிசொரூபமென்பதை உண்மைப்படப் புலப்படுத்தப் பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!, விழைவொடும் அறம் செய்து உய்க என்று உரைக்கும் விதியினை - அன்பினோடும் சிவபுண்ணியஞ்செய்து உய்தலடைவாயென்று கூறும் விதியை, கவளம் உண்க எனவும் கழை சுளி நெடு நல் யானையின் - கவளத்தை உண்ணுவாயென்று (பாகன்) உரைக்கவும் (அதுசெய்யாது மிகவருந்தி) மூங்கிலைமுறிக்கச்செல்லும் நீண்ட நல்லிலக்கணமமைந்த யானையைப்போல, முனிந்து நடக்கும் என் பவம் ஒழிந்திடுமோ - வெறுத்து (விடயங்களிற்) செல்லும் எனது பாவமும் நீங்குமோ? (அறியேன்.) எ - று.

விதியாவன - இவை செயற்பாலவென வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்டவை. விதியினை முனிந்து நடக்குமென இயையும். முனிதல் - வெறுத்தல்; அது அருளும் சினமுமன்றி இடைநிகர்த்ததாதல். உண்கவென்பதன் ஈறு தொக்கது. கழை கரும்புமாம். நெடுமை - ஒன்பான்முழ நீட்சியுடைமை; இரு கொம்மை இருகொம்பு நெற்றி தலை முதுகு என்னும் ஏழிடவுயர்ச்சியெனினும் பொருந்தும். நன்மை - இலக்கணநிறைவு. தரு இடைவழுவமைதி. (௬௦)

வாத்தியு முழங்கச் சங்கையுங் காயு மாறியூர்த்
தலைவிவாழ்ந் தவரு, மேத்திய மொழியோ டிரக்கை

யா னின்குற் றேவலே வாழ்வென வறிந்தேன், பாத்
திய மணிகள் கொண்டிழைத் திலங்கும் பாரவா சி
கைமணி மேகஞ், சாத்திய தெனவில் வளைந்துறுஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) பாத்திய மணிகள் கொண்டு இழைத்து இலங்கும் பாரம் வாசிகை - ஆராய்ந்தெடுத்த மணிகளால் பதிக்கப்பட்டுப் பிரகாசிக்கும் பரிய திருவாசிகையொன்றினை, மணி மேகம் சாத்தியது என வில் வளைந்து உறும் சோணசைலனே கைலைநாயகனே - மணிகளைப்பொழியும் மேகங்கொணர்ந்து சாத்தியதுபோலுமென்று நினைக்குமாறு (இந்திரதனுவெனப்படும்) வில்வளையப்பெற்ற சோணசைலரே! கைலைநாயகரே!, வாத்தியம் முழங்க சிவிகையும் கரியும் மாறி ஊர்ந்து - பஞ்சகருவிகளும் ஒலிக்கப் பல்லக்கிலும் யானையிலும் (வேண்டியவாறு) மாறிமாறி யேறிச்சென்று, உலவி வாழ்ந்தவரும் - எங்குஞ் சஞ்சரித்து வாழ்தலையடைந்த செல்வப் பெருக்குடையவரும், வந்திய மொழியோடு இரக்கையால் நின் குற்றேவலே வாழ்வு என அறிந்தேன் - (தேவரீரது சிற்றேவலுடையவரானால்) துதிமொழிகளோடு நின்று யாசிக்கக் காணுதலின் உமது சிற்றேவலைப் பெருவாழ்வெனத் துணிந்தேன். எ-று.

பெருஞ்செல்வரும் தமக்குநேர்ந்த குறைபாறுக்கும்படி பூபரி வராதியரால் யாசித்துழலுதலை நாடோறும் அநுபவத்தானும் அறிதலின் 'நின்குற்றேவலே வாழ்வென வறிந்தேன்' என்றார். வாழ்ந்தவரும் ஊழால் வறியராகித் தம்பாலேற்றவரிடத்துத் தாம் சென்றிரத்தலும் குற்றேவலுடையவர் தேவரும்வணங்க வாழ்தலும் காண்டலின், 'குற்றேவலேவாழ்வெனவறிந்தேன்' என்னலுமாம். வாத்தியம் - தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி என்பன. பாத்தல் - நன்கு தேர்ந்தெடுக்கல். கொண்டு மூன்றும்வேற்றுமைச்

சொல்லுருபு. வாசிகை - மூர்த்தங்களுக்குமேல் பிரணவாகாராகவிளங்க அணிவதொரு அலங்காரக்கருவி. இந்திரதனுசுடலவாணத்ததாதலால் பலமணிகள் கொண்டிழைத்த திருவாசிகையாகக் கூறினர். மணி முதல் பொன் பூ மண் கல் தீ இவற்றை முறையே பொழியும் சம்வர்த்தம் ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரித்தம் துரோணம் காளமுகி நீலவர்ணம் என்னும் மேகமேழனுள் ஈண்டு மணிமேகமென்றது சம்வர்த்தத்தை. இதனை, *"சம்வர்த்த மாவர்த்தம் புட்கலா வர்த்தஞ் - சங்காரித்தந் துரோணங் காளமுகி - நீல வருணமேழ் மேகப் பெயரா. மணிநீர் பொன்பூ மண்கற் றீயென் - றெழுவகை மேகம் பொழிமாரி யேழே." என்பவற்றானு முணர்க. (௬௧)

குலத்தினிற் பிறந்து மலகினூல் கற்றுங் குணத்தினிற் சிறந்துநல் விரத, பலத்தினிற் கவர்ந்து நின்னடியவர்க்குப் பரிவிலார் கதியிலா தவரோ, கலத்தினிற் பொலிந்த விமையமீன் றெடுத்த கன்னிநுண் ணிடைமிசைக் களப, சலத்தினிற் குறுதி கொடுத்திடுஞ் சோணசைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) கலத்தினில் பொலிந்த இமையம் ஈன்றெடுத்த கன்னி - ஆபரணங்களால் விளங்கிய இமையமலைபெற்ற கன்னிகையாகிய உமையம்மையின், நுண் இடைமிசை களப அசலத்தினிற்கு நுண்ணிய இடையின்மேலனவாகிய களபம் பூசிய மலைபோலுந் தனங்களுக்கு, உறுதி கொடுத்திடும் சோணசைலனே கைலைநாயகனே - உறுதியைத் தந்தருளும் சோணசைலரே! கைலைநாயகரே!, குலத்தினில் பிறந்தும் - நற்குலத்தில் உதித்தும், அலகு இல் நூல் கற்றும் - அளவிறந்த நன்னூல்களை ஆராய்ந்தும், குணத்தினில் சிறந்தும் - நற்குணங்களில் மேம்பட்டும், நல் விரதம் பலத்தினில் கவர்ந்தும் - உயர்

* பிங்கலந்தை வான்வகை., ௭௭ -௭௯.

ந்த விரதபலங்களில் வேட்கைப் பெருக்கமடைந்தும், நின் அடியவர்க்கு பரிவு இலார் கதி இலாதவரோ - உமது தொண்டர்கட்கு அன்பில்லாதவர்கள் கதியடையப் பெறாதவர்களோ யாவர்கள். எ - று.

கவர்தல் - வேட்கைப்பெருக்கம். உம்மைகள் எண்ணொடு உயர்வு சிறப்புமாம். கதியிலாதவரோ இதில் ஏகாரம் தேற்றம். பரிவிலார் கதியிலாரென்பதனை * "ஈசனுக் கன்பில்லா ரடியவர்க்கன் பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார் - பேசுவதென் னறிவில்லாப் பிணங்களை நா மிணங்கிற் பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவா விடுநீ" என்பதனாலு மறிக. கதி - முத்தி; ஆதாரமெனினும் ஒன்றும். கலத்தினிற் பொலிந்தகன்னி எனமுடிக்க. கட ஆசலம் - கடாசலம், தீர்க்கசந்தி. உறுதிபயத்தல் - தாம் உருகுதலடைந்து அவைக்குத் திண்மையுடைமையைத் தருதல். (௬௨)

மூடக விருளோ டென்னையின் றன்னை முலையமு
சாலகற் றுவலென், சூடரு மொழியா லடைந்தனன்
றமியேன் சூள்வழு வாதுநீ யருளாய், வீடுறுங் கவரி
கீழ்விழ வுறல்கார் மிசையனம் பன்றிதா மாறித், தா
டலை துருவ வடைதனேர் சோணை சைலனே கைலைநா
யகனே.

(இ - ள்.) வீடுறும் கவரி கீழ் விழ கார் மிசை உறல் - உச்சியிலிருந்து நழுவிய கவரிமான் கீழேவிழ மேகம் (கீழிருந்து) உச்சியிலேறுதல், அன்னம் பன்றி தாம் மாறி - (முன்னர் முடியையும் அடியையுந்தேடிய) அன்னமும் பன்றியுந் தங்களுக்குள் அம்முறைமாறி; தாள் தலை துருவ அடைதல் நேர் சோணைசைலனே கைலைநாயகனே - திருவடியையும் திருமுடியையும் தேடிக்காணச் செல்லுதலை ஒத்திருக்கப்பெறுஞ் சோணசைலனே'

* சிவஞானசித்தியார் சுபக்கம் பன்னிரண்டாஞ்சூத்திரம்

கைலநாயகரே!, அகம் மூடு இருளோடு உன்னை இன்று உண்ணாமுலை அரசால் அகற்றுவல் என் சூள்தரும் மொழியால் - (அடியேனது) மனத்தை மூடியுள்ள ஆணவவிருளோடு 'நின்னை இத்தினம் அபீதகுசாம்பாள்உடைய தலைவராகிய அருணாசலேசரால் நீக்குவேன்' என்னுஞ் சபதமொழி கூறிவிட்டேனாதலால், தமியேன் அடைந்தனன் - துணையற்றவனான யான் தேவரீரை அடைக்கலமாக அடைந்தனன், நீ சூள் வழுவாது அருளாய் - தேவரீர் அச்சபதம் தவறுதலடையாவண்ணம் (அடியேற்கு) அருளவேண்டுகின்றனன். எ-று.

உன்னை இன்று உண்ணாமுலை அரசால் அகற்றுவலென்னும் சூள்மொழி இருளோடு பகர்ந்து தமியேன் அடைந்தனன், (ஆகையால்) நீ அருளாய் எனக் கூட்டிக்கொள்க. என் வினைத்தொகை. தரு - இடவழுவமைதி. வீடுறல் - ஈண்டு வீழ்தல். துருவல் - தேடல். (சஅ)

ஐயநுண் மருங்குன் மாதர்மேல் வைத்த வாதர வுன்பதாம் புயத்து, மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு வெண்டிரு நீற்றிலும் வருமோ, கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங் கிள்ளைக் குழுக்கடோ ரணமென வெழுந்து, மையலர் கடியப் பறந்துறுஞ் சோணசைலனே கைலநா யகனே.

(இ - ள்.) கொய்யுறு தினை வீழ்ந்திடு பசும் கிள்ளை குழுக்கள் - அறுக்கத்தக்க தினைக்கதிர்களில் மொய்க்கும் கிளிக்கூட்டங்கள், மையலர் கடிய தோரணம் என எழுந்து பறந்துறும் சோணசைலனே கைலநாயகனே - குறப்பெண்கள் (கவண் கற்களாதியவற்றால்) ஓட்டுதலும் பசிய தோரணங் கட்டினாற்போல ஒழுங்காகப் பறந்துசெல்லும் சோணசைலரே! கைலநாயகரே!, ஐயம் நுண் மருங்குல் மாதர்மேல் வைத்த ஆதரவு உன் பத அம்புயத்தும் - (உண்டோ இன்றோவெனச்) சந்தே

கம்பிளைக்கும் நுண்ணிய இடையினையுடைய மாதர்பால் வைத்துள்ள விருப்பம் தேவரீர் திருவடித்தாமரைகளிடத்தும், மெய் உறும் நறும் மெல் கலவையின் விருப்பு - சரீரத்தில் மிகவும் பூசும் நறிய மெல்லிய கலவைச்சாந்தில் வைத்துள்ள விருப்பம், வெண் திருநீற்றிலும் வருமோ - வெள்ளியவிபூதியின் கண்ணும் அடியேனுக்கு உண்டாகுமோ? (அறியேன்.) எ-று.

* "தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த தயாவை நூறாயிரங் கூறிட் - டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக் கமருல களிக்குநின் பெருமை" என்றார் ஆன்றோரும். பத அம்புயம் - பதாம்புய மென்றதல் தீர்க்கசந்தி. (௧௪)

கனலினூ டமைத்த விழுதென வுருகக் கற்றதின்
றுள்ளமென் கரங்கள், புனலுமாய் மலருங் கொடுநினை
ப் பூசை புரிந்தில வென்செய்கோ வுரையாய், சினவு
நோய் மருந்து வேறுகொண் டிருக்குஞ் சிலம்புக ணா
ணவுட் கொள்வோர், சனனநோய் மருந்தா யெழுந்
திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) சினவும் நோய் மருந்து வேறு கொண்டு இருக்கும் சிலம்புகள் நாண - வருத்தும் நோய்களுக்கேற்ற மருந்துகளைத் தமக்கு வேறாகக்கொண்டுள்ள மலைகளெல்லாம் நாணமுற்றொழிய, உள் கொள்வோர் சனனம் நோய் மருந்து ஆய் எழுந்திடும் சோணசைலனே கைலைநாயகனே - உள்ளத்திற் றியானிப்பவருடைய பிறவிநோயைப் போக்கும் மருந்தாகி யோங்கிய சோணசைலரே! கைலைநாயகரே!, என் உள்ளம் கனலின் ஊடு அமைத்த இழுது என உருக கற்றது இன்று - என்மனம் அழலினிடையே இருத்திய வெண்ணெயைப்போலத் (தேவரீர் விஷயமாக) உருகக்கற்றதில்லை, என் கரங்கள் புனலும் ஆய்

* கருவூர்த்தேவர் திருவிசைப்பா கங்கைகொண்ட

மலரும் கொண்டு நின்னை பூசை புரிந்திலன் - என்கைகள் தீர்த்தமும் ஆய்ந்த மலருங்கொண்டு தேவரீரைப் பூசைசெய்திலன், என்செய்வேன் உரையாய் - யான் என்செய்யக்கடவேனோ தேவரீரே கட்டளையிடுவீராக. எ-று.

செய்கு தன்மையொருமை வினைமுற்று. கு விகுதி. ஓ வினைமொடு இரக்கம். இனைவல் - அதனதுகாரியமாகிய வருத்தத்தை னாந்தி நின்றழுது. உட்கொள்ளல் - சிந்தித்தல். எளிதிலே நீக்கத்தகும் சாமானியநோய்களையும் தாமே நீக்குந்தெய்வீகம் தமக்கின்மையால் அந்நோய்களை நீக்கும் சஞ்சீவியாதிமருந்துகளைத் தாம் வேறே கொண்டிருக்க; நீங்காத பிறவிநோயையும் இச்சோணசைலம் சிந்தனைமாத்திரத்தானே நீக்குதல்பற்றி மற்றையமலைகள் நாணுவவாயின என்பது கருத்து. (௯௫)

ஊழுறு மணிப்பொற் கோயில்போய் வாவ லூறக்
கொடுத் தாங்குநிற் புணர்த்தாய், பாழுறு மனம்பே
ரவாக்குடி யிருப்பப் பண்ணுமென் கண்ணுநண் ணு
வையோ; வீழுறு மெயினர் கிழங்ககழ் குழியும் வே
ழம்வீழ் குழிகளு நிரம்பத், தாழுறு மருவி பொன்
சொரி சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) எயினர் வீழுறும் கிழங்கு அகழ் குழியும் - குறவர்கள் விரும்பாங் கிழங்குகளைக் களைந்தெடுத்தகுழிகளும், வேழம் வீழ் குழிகளும் நிரம்ப - யானைகள் வீழும்படி வேட்டர்களால் அகழ்ந்துவைத்த குழிகளும் நிரம்புதலடையும்படி, தாழுறும் அருவி பொன் சொரி சோணசைலனே கைலைநாயகனே - ஒழுகாநின்ற அருவிகள் பொன்னைச்சிந்துகின்ற சோணசைலரே! கைலைநாயகரே!, ஊழ் மணி உறும் பொன் கோயில் வாவல் போய் உற கொடுத்து ஆங்கு - வரிசையாக அரதனங்கள் பதிக்கப்பெற்ற பொற்கோயிலை வவால்கள் சென்று வாசஞ்செய்யுமாறு (அவற்றிற்கு) வீடாகக் கொடுத்ததுபோல், நின் புணர்த்

தா பாழ் உறும் மனம் போ அவா குடி இருக்க பண்ணும் என் கண்ணும் நண்ணுவையோ - தேவரீரையிருத்தி வழிபடாது பாழ்பட்டொழிய மனத்தின்கண் பேராசையைக் குடியிருக்கச் செய்யும் கீழ்மையுடைய அடியேனிடத்தும் எழுந்தருளியிருப் பீரோ? (அறியேன்.) எ-று.

உம்மை இருத்தவேண்டியமனத்தில் பேராசைகளைக் குடியேற்றியது தேவரீரை இருத்தவேண்டிய மணிமயமான மந்திரத்தில் வவாலைக் குடியேற்றினதுபோலும் என்பது திரண்ட பொருள். ஊழ் - வரிசை. சிவிறி விசிறியென எழுத்துமாறுதல் போன்று வாவல் வவாலென மாறிவழங்கும். வீழுறும் தாழுறு மென்பன ஒருசொல் நீர்மையன. வீழ்குழியெனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார். (௩௧)

பைம்மறிப் படுப்பி னுள்ளறி யாமற் பணிநறுந் துகி
ல்புனை மடவார், மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுமெ
ன் றுழலும் வினையினே னுய்யுமா றுளதோ, செம்ம
லர்ப் பதம்பா தலங்கடந் திடவான் றிருமுடி கடப்பி
னு மூவர், தம்மியற் செப்பி னடங்குறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) செம் மலர் பதம் பாதலம் கடந்திட - செந்தாமரை மலர்போலும் திருவடிகள் பாதலத்தைக் கடந்து செல்ல, திருமுடி வான் கடப்பினும் - திருமுடி தேவலோகத்தைக் கடந்து செல்லினும், மூவர் தம் இயல் செப்பின் அடங்குறும் சோணசைலனே கைலைநாயகனே - ஆளுடைய பிள்ளையார் ஆதிய மூவர்களுடைய இலக்கண மமைந்த தேவாரத் திருமுறைகளுக்குள் அடங்கிவிளங்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, பை மறிப்படுப்பின் - பையினை மேனோக்கி மகிழாது திருப்பி அதன் உள்ளமைதியை நோக்குதல்போல, பணி நறும துகில் புனை மடவார் உள் அறியாமல் - ஆபரணங்களும் நல்ல

வஸ்திரங்களும் அணிந்த மங்கையர் அகத்தமைந்த இழிவுகளை நோக்குறுயல், மெய் மிசை கரும் தோல் கண்டு உவந்து உழலும் வினையினேன் - (அவ்விழிவு தோற்றாதபடி அழகு தோன்ற) உடலில் மேற்செறிந்த பெரிய தோலினை நோக்கி மகிழ்ந்தலையும் தீவினையேன், உய்யும் நாள் ஏதோ - பிழைப்புறுங் காலமும் உண்டாங்கொலோ? (அறியேன்) எ - று.

மறிப்படுப்பு - இருட்பல். *"தோற்போர்வை மேலுந் துளைபல வாய்ப் பொய்ம்மறைக்கு - மீப்போர்வை மாட்சித் துடம்பானுன் - மீப்போர்வை, பொய்ம்மறையாக் காயம் புகலாது மற்றதனைப் - பைம்மறியாப் பார்க்கப் படும்" என்றார் பிறரும். இஃது உவம உருபு. நறுமை - நன்மை. கருமை - பெருமை. †"பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர் - போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே" எனவியக்கப்பெற்ற திருமேனியேனும், அது மூவர் தேவாரங்களால் இத்தன்மைத்தென மதிக்கப்படுதலின், 'மூவாமசப்பி னடங்குறும்' என்றார். அறிவால் மதித்தல் பற்றியே தெய்வப்புலவரும் ‡"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் - வகைதெரிவான் கட்டே யுலகு" என்ப துணர்க. செப்பு - சொல். (திசைச்சொல்) இது கருவியாகுபெயர்; செய்யுளுக்காகலின். இரட்டுற மொழிதலாய்ச் சிமிழையுணர்த்தலுமறிக. பைம்மறிப்படுத்தியென்னும் பாடத்திற்கு, பைம்மறிபோலாக்கியெனப் பொருள்கொள்க. (௧௭)

செக்குறு இலத்தின் வருந்துபு பிறக்குஞ் செல்லலு நாடியின் பிணிப்பு, நெக்குற வறிவு கலங்குசாக் காடு நினைதொறு முளம்பதைக் கின்றேன், மொய்க்குறு முகில்கண் டரிகரி யெனனு முழக்கமு மாகர வென்

† திருவாசகம் திருவெம்பாவை - ௧௦. ‡ திருக்குறள் - ௨௭.

னும், தக்கவர் முழக்கு மெதிரெழுஞ் சோணசைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) அரி மொய்க்குறும் முகிற் கண்டு கரி எனவும் முழக்கமும் - சிங்கமானது தவழும் மேகத்தினைக்கண்டு இது யானையென்று கருதி ஒலிக்கும் ஒலியும், தக்கவா அரகரஎன்னும் முழக்கும் எதிரெழும் சோணசைலனே கைலைநாயகனே - நற்றகுதியினையுடைய மேலோர் ஹரஹர வென்று துதிக்கு மொலியும் ஒன்றற்கொன்று எதிராக மடுப்பெறும் சோணசைலரே! கைலைநாயகரே!, செக்கு உறு திலத்தின் வருந்துபு பிறக்கும் செல்லலும் - செக்கிலுற்ற எள்ளினைப்போல (யோனிவாயிலெருக்குண்டு) நைந்து உதிக்கும் துன்பமும், நாடியின் பிணிப்பு நெக்குற அறிவு கலங்கு சாக்காடும் - நரம்புகளின்கட்டுக்கள்குலையச் சிந்தனை மயங்குதற் கேதுவாகிய மரணத்துன்பமும், நினைதொறும் உளம் பதைக்கின்றேன் - சிந்திக்குந்தோறும் மனம் துடிப்புறுகின்றனன். (என்செய்வேன்!) எ-று.

கருவினி லுறையுங்கால் எய்தும் கருப்பாசயப்பையுறுத்தல், அதிற்சலம்பூரித்தல், உதராக்கினியால்வேவுதல், பிரசூதவாயு முறித்துத்தள்ளுதல் என்னும் நால்வகைத் துன்பத்திலும் யோனித்துவாரத்தினெருக்குண்டு உதித்தற்றுன்பம் மிகக்கொடியதென்பார் 'செக்குறுதிலத்தின் வருந்துபு பிறக்குஞ் செல்லல்' என்றும், மரணத்துன்பம் அதனினும் கொடியதென்பார் 'அறிவுகலங்கு சாக்காடும்'என்றும், இவற்றைச் சுருதியாலும் பிரத்தியக்ஷத்தாலும் அறிந்திருத்தலின் இவ்வேதனையை எவ்வாறு கடப்போமென்னும் ஏக்கம் இடையிடையே நிகழாநிற்பதென்பார் 'நினைதொறு முளம்பதைக்கின்றேன்'"என்றுங் கூறினார். ஒருபால் அரிகரி என்னுமுழக்கமும் ஒருபால் அரகரவென்னு முழக்கமும் இகலி எழுமெனவும் பொருள்பட்டு முரண்டொடையாய்நிற்பதுணர்க. நெக்குற மொய்க்குற என்ப

வை ஒருசொல் நீர்மையன. கு சாரியை. ஊ எனனுமெழுத்து முதலில் அகரமும இடையில் ககரமும் ஆகுமாதலால் அரகர எனு வந்தது. (கூஅ)

மரணமும் பிறவித் துயருநீங் குறநூல் வாய்ச்சிலம் பிக்கருள் புரிந்த, கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின் கருத்தினை யின்னதென் றறியேன், முரணி பம் பரூஉக்கை தலைமிசை யெடுப்ப முழைக்கரும் பாம்பென மணித்தேர்த், தரணியுள் வெருவி யகன் றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) முரண் இபம் பரூஉ கை தலைமிசை யெடுப்ப - வலிமையுடைய யானைகள் தமது பருத்த துதிக்கைகளைத் தலையின்மீது தூக்க, முழை கரும்பாம்பு என - அளையினின்றெழும் கரும்பாம்பென அச்சமுற்று, மணி தேர் தரணி உள் வெருவி அகன்றிடும் சோணசைலனே கைலைநாயகனே - மணிகசிதமான தேரினையுடைய சூரியன் மனமருண்டு நீங்கப்பெறும் சோண சைலரே! கைலைநாயகரே!, வாய் நூல் சிலம்பிக்கு மரணமும் பிறவி துயரும் நீங்குற - வாயினின்றெழும் நுண்ணூலிழைக்கும் சிலந்திப்பூச்சிக்கு இறப்புத்துன்பமும் பிறப்புத் துன்பமும் ஒழிய, அருள் புரிந்த கருணி என்று வந்து உனை அடைந்தனன் - கிருபை பாலித்த காருணிய சொரூபியென்று கருதிவந்து தேவரீரை அணுகினேன், இனி நின் கருத்தினை இன்னது என்று அறியேன் - இனி உமது திருவுளக்குறிப்பை இத்தன்மையதென உணரேன். எ-று.

சிலம்பிக்கருளியது சீகாளத்தியிலும் திருவானைக்காவிலும், சிலம்பிக்கென்புழி கருணையைவிசேடிக்கும் உயர்வுசிறப்பும்மை தொக்கது. கருணி - கருணையுடையவன், இது வடநூல்முடிபு. கருத்தாவது - பிறப்பிறப்பைக்கடப்பித்தல் வேண்டுமென்பதும் அல்லது அவற்றில் உழல்வித்தல்வேண்டுமென்பதுமாகிய

திருவுள்ளக்கிடை. பரூ பரூஉவென இன்னிசையளபெடையாய் நின்றது. இராகுவென்னுங் கரும்பாம்பு திங்களையும் கேதுவென்னுஞ் செம்பாம்பு ஞாயிற்றினையும் பற்றுவதாகவும் இனம்பற்றி இதுவும் வருத்தவந்ததோ வென்னும் அச்சத்தால் வெருவினனென்க. தரணி - சூரியன். (௬௬)

அங்கையின் வைத்த கூர்ங்கனன் மழுவா லருவி
னைக் காடற வெறிந்து, மங்கலில் பத்தி வித்திட வடி
யேன் மனத்தினைத் திருத்துநா ளுளதோ, பொங்குறு
செக்கர் கருவிசும் புறவேள் புரத்தெரி கதுவிட நோ
க்கித், தங்குத லொப்ப நின்றிடுஞ் சோண சைலனே
கைலைநா யகனே.

(இ-ள்.) வேள் புரத்து எரி கதுவிட நோக்கி தங்குதல் ஒப்ப - மன்மதனது சரீரத்தில் அக்கினி பற்றும்படி நோக்கி யமாதல் போல, பொங்குறு செக்கர் கரு விசும்பு உற - அதிகரித்த செவ்வானம் கரிய ஆகாயத்திற்பொருந்த (அதற்கெதிரில்), நின்றிடும் சோணசைலனே கைலைநாயகனே - அமர்ந்தருளும் சோணசைலரே! கைலைநாயகரே!, மங்கலில் பத்தி வித்திட - குன்றுதலில்லாத அன்பென்னும் வித்தினை விதைத்தற்பொருட்டு, அங்கையின் வைத்த கூர் கனல் மழுவால் அருவினை காடு அற எறிந்து - தேவரீர் அகங்கையிற்கொண்ட கூரிய அனல்வடிவான பரசாயுதத்தால் கொடிய வினைக்காடுகளைப் பற்றறவெட்டியெறிந்து, அடியேன் மனத்தினை திருத்தும் நாள் உளதோ - அடிமைப்பட்ட எனது மனப்புலத்தினைத் திருத்தமாக்கும் நாளும் உண்டோ? (அறியேன்.) எ-று.

பத்தியை வித்தென்றதற் கியைய மனத்தைப் புலமென்றமையின் ஏகதேச வுருவகம். நல்வினை சுவர்க்காதி யின்பங்களையும், தீவினை நரகாதி துன்பங்களையும் பயப்பனவாய் ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்தலில் பொன்விலங்கும் இருப்புவில

க்கும் போல்வனவாகலின் இருவினையும் பிறப்பிற்கு ஏதுவாதல் பற்றிப் பொதுப்பட அருவினை என்றார். அருமை - ஈண்டுக் கொடுமை. கரியவாகாயம் கருநிறம்பெற்ற மன்மதனுக்கும் செக்கா அவனுடலிற் பற்றிய அக்கினிக்கும் சோணசைலம் அவனெதிரினின்றருளிய சிவபெருமானுக்கும் ஒப்பாக்கியவாறு. விசும்பு - மேகமண்டலமுமாம். (எ௦)

செருக்குமைம புலனும விரிக்குமூ தறிவுந் துன்னு நல் லினமுநீத் தகன்றே, யிருக்கும்வெங் கயவ ரின முமென் றருளி யென்னைநின் னடிமைசெய் தருள்வாய், பு கதமா மணியுமிழ்ந் தகன்ற முழைத ழற் றெனவுளம வெருவித், தருக்குமொண் புலிசென் றுறமருள் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) அங்கதம் முருக்கும் மா மணி உமிழ்ந்து அகன்ற முழை - பாம்புகள் (இருளை) கெடுக்கும் ஒளிவாய்ந்த பெரிய மணிகளைக் கக்கிச்சென்ற குகைகளை, தழற்று என உளம் வெருவி - அம்மணியி னொளிகண்டு இது தழலுடையதென மனம் பயந்து, தருக்கும் ஒண் புலி சென்று உற மருள் சோணசைல னே கைலைநாயகனே - செருக்கிய அழகிய புலிகள் (அம்மலை முழையிற்) சென்றிருத்தற்கு மருண்டிடும் சோணசைலரே! கைலைநாயகரே!, செருக்கும் ஐம்புலனும் - (விடயங்களிற் செல்லாது அடக்கும் ஐம்புலனும், விரிக்கும் மூது அறிவும் - நற்றுறைகளில் விரித்துச் செலுத்தக்கூடிய உயரிய உணர்வும், துன்னும் நல் இனமும் - வாழ்தற்குரிய அன்பர் கூட்டமும், நீத்து அகன்று இருக்கும் வெம் கயவர் இனமும் - அகன்று நீக்கத்தக்க வெவ்விய கீழ்மக்கட் கூட்டமும், என்று அருளி என்னை நின் அடிமை செயது அருள்வாய் - எக்காலத்திலெனக்கருளித் தமியேனை உமது திருவடிகளுக்கு அடிமையாக்கிக்கொண்டருளுவீர்? (கட்டளையிட்வேண்டும்.) எ-று.

ஐம்புலச்சுருக்கமும் மூதறிவுமேரிவும் நலவினந்துன்னலுய கயவரினம் நீத்தகன்றிருத்தலும் வேண்டுமென்பார், ஒவ்வொ ரையும் முன்பின்னாக்கிச் சாதுரிய நயந்தோன்ற மாரணமொடா டையி னுரைத்தனர். 'நீக்குறுமயல்' 'நீங்கியநேயத்தவர், என இந்நூலினும், * "இலாதவெண்கோவணத்தான்" என இந்நூலே பிறண்டும் இவ்வாசிரியர் உரைத்தருள்வதுணர்க. முருக்குமு அங்கதம் - கொல்லும் பாம்பு எனலுமாம். தழற்று - ஒட்டுப் படர்க்கைக் குறிப்புவினைமுற்று. நா - யிகுதி. (௭௧)

அந்தரி குமரி யஞ்சலி கௌரி யம்பிகை மனோன்ம ணி மதங்கி, சுந்தரி யுமையுண் ணாமுலை யெனநின் றுணைவியை வாழ்த்துமா றருளாய், வந்தரி சுருதி மரு ங்கினிற் பாட வயங்குதும் புருவுநா ரதனுந், தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண சைலனே கைலைநா யக னே.

(இ - ள்.) அரி மருங்கினில் வந்து சுருதி பாட - வண்டுக ளருகணைந்து சுதிபாட (அச்சுதியைத் தழுவிக்கொண்டு), வய ங்கு தும்புருவும் நாரதனும் தந்திரி யாழ் இசை பாடுறும் சோ ணசைலனே கைலைநாயகனே - கீர்த்திவாய்ந்த தும்புருவுட நாரதரும் நரம்புகளோடுகூடிய யாழினைக்கொண்டு இசைபா டிப்பரவும் சோணசைலரே! கைலைநாயகரே!, அந்தரி - மே லான முத்திநாட்டினையுடையவளே!, குமரி - யௌவனமுடை யவளே!, அஞ்சலி - (சரணம்புக்க அடியவர்கட்கு) அபயந் தரு வளே!, கௌரி - சொர்ணமேனியளே!, அம்பிகை - உலகுக்குத் தாயே!, மனோன்மனி - மனுத்தமானவளே!, மதங்கி - இசை பாடியமரும் திருக்கோலத்தவளே!, சுந்தரி - நல்லழகினை யுடை யவளே!, உமை - காப்பவளே!, உண்ணாமுலை - அபீதகுசாம்பி கையளே!, என நின் துணைவியை வாழ்த்தும் ஆறு அருளாய் - என்று

* பிக்ஷாடனநவமணிமாலை - உ.

தேவரீருடைய அருணையாகிய அமுதம்பிகையை வாழ்த்தும்படி அருள்வீராக. எ-று.

கௌரி - வெண்ணிறத்தளுமாம். கௌரம் - பொன்மை, வெண்மை. திருவருட்சொரூபியாகிய தேவியைவழிபடாது தேவரையேவழிபடும் பேரின்பமெய்திய பிருங்கிமுனிவரைப்போலும் ஆர் தலையெய்தப்பெறுதா ... அத்திருவருட்சத்தியானே தேவரை அடையப்பெறுத ... ஏனைய பேறுகளோடு அச்சிவ... எனவே குவேண்டுமென்பார், 'துணைவியையவாழ்த்துமாறருளாய்,' என்றார். ... - வண்டு. சுருதி - சுதி. ... முனிசிரேஷ்டரோடும் மிகமுயன்று நெடுநாட்பயிற்று ... புருவோடு இசையிலொத்தாராகலின், அச்சிறப்புத்தோன்ற ... ப்பருவை முற்கூறுவ (எஉ)

தேக்குறு மயலு நிலைந்தபே றறிவு நின்றிரு வடிமலர்க் ... அன்பு, காக்குறு மனமு முடையமெய்த் தொண்டர் ... ஞாத்திறு பொனேவிற்றருளாய், தேக்குறு மிரு ... ம் கன்னலைக் காட்டுவபோற் றென்றலவந் தசைதொறு மெல்லத், தாக்குறு காந்த ளப்பலர் சோணசை லனே கைலைநா யகனே.

(இ-ள்.) தேக்குறு உறும் இறலில் கன்னல் காட்டுவபோல் - (தேனை) நிரம்புதலுள்ள ... தில் காதிலையைக் காட்டுங் குறிப்புப்போல, தென்றல் வந்து அசைதொறும் மெல்ல தாக்குறு காந்தள் - தென்றற்காற்றுவந்து வீசுந்தொறும் மெல்லப்போதும் ... காந்தள், அப்பு அலர் சோணசைலனே கைலைநாயகனே அப்பென இதழ்கள் விரியப்பெறும் சோணசைலனே! கைலைநாயகனே!, தேக்குறும் மயலும் - தேக்கும் மயலினையும், நிலைத்த பேறறிவும் - இடம் பெற்ற மிக்கவுணர்வினையும், நின் திருவடி மலர்க்கு அன்பு காக்குறும் மனமும் - தேவரீருடைய திருவடித் தாமரைகளில் அன்பு

அமையச்செய்யும் சித்தத்தையும், உடைய மெய்த் தொண்டர் கணத்தினுள் எனை விடுத்து அருளாய் - உடையவராகிய உன் மையடியவர்கூட்டத்தில் தாழ்ந்த அடியேனையும் சேர்த்தருள்வீராக. எ - று.

சிவபெருமானை வழிபட்டு அடையும் பேற்றினை அவரடியவரை வழிபட்டும் அடையலாமென்பது திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் அப்பூதியடிகணாயனார் பெருமிழலைக்குறும்பநாயனார் ஆகியோரால் வெளிப்படுதலின், 'தொண்டர்கணத்தினுள்ளெனை வைத்தருளாய்' என்றார். தொண்டர் தம் தொண்டரேயும் பெற்றின் * "ஐயா யாவ [illegible] சிவன் வருந்துரா பிணியின் [illegible] னைம்புக் - கிளையாத் தனங்கண் டிரங்கின் [illegible] மாரிட் பிறப்பினில் வக் - தளையா மலகிழுப் [illegible] வாரமுடையான் [illegible] றைத் - தளையா ஞெட்டையருந் தன்னடியார்க் கடியார் தவமே" என்பதனானுமுணர்க. நீக்குறுமயல் - மயலினீக்கும். [illegible] மைமயக்கம். தேக்கு [illegible]. தேக்கமார்ந்த இறால், [illegible] லது தேன்செறிந்த குறிய இறால் [illegible] நாழிகையை அறிந்துகொண்டு அக்காலத்தில் அமைந்துவருகப்பட்டதொரு இயந்திரத்தைச்சுட்டி வாளிந்ததடி. உவமை காந்தளரும்பு தாக்குதலாலிருக்கை; மலர்கின்றது. அன்று இப்பொழுதுவழங்கும் கடிகாரம் இந்நூலாசிரியர் காலத்தே புதிதாகப்போந்து இந்நாட்டிலே உலவத்தொடங்கியதனால், இதனோக்கியுரைத்ததொரு கற்பனையெனக்கொண்டு, மெல்லியதேன்கூடு கடிகாரக்கருவிக்கும், அதில் மெல்லத்தாக்கும் காந்தள்மொட்டு மெல்லப்புடைபெயரும் நிமைமுள்ளுக்கும், அதில். முறுக்குடைந்து தம்பெயவிரியுந்தனியிதழ் விளக்கலையுமுள்ளுக்கும், தாக்குதலோசை அதனொலிக்கும் ஒருபுடை உவமித்ததென்னலுமொன்று. (எஉ)

* திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - உக.

பவமிலே மினியா மென்றிறு மாந்து பயமற விருந் திடப் பத்தி, நவமிலே மடியே மென்செய்வா னிருந் து நாளினை வறிதொழிக் கின்றேம், அவமிலே மிமை யா விழியினைக் காண்கை யால்வலங் கொளவடி நிலந் தோய், தவமிலே மெனவான் சுரர்தொழுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) இமையா விழியிற் காண்கையால் அவமிலேம் - இமையாநாட்டத்தாற் றரிசிக்கப்பெறுதலின் பயன்செய்கையில் லேம், வலம் கொள அடி நிலந் தோய் தவமிலேம் என - (ஆகலி ல்,) பிரதட்சிணஞ் செய்யுமாத்திரம் பாதங்கள் பூமியிற்றோயப் பெறும் தவமுமானதுஞ் செய்திலேமென்று, வான் சுரர் தொழு ம் சோணசைலனே கைலைநாயகனே - சுவர்க்கத்துறையும் தே வர்கள் (வருந்தித்) தொழப்பெறுஞ் சோணசைலரே! கைலைநா யகரே!, யாம் இப்போது பவம் இலேம் என்று இறுமாந்து பயம் அற இருந்திட - நாம் இனிப்பிறத்தல் இல்லாமையுடையோமென்று இறுமாப்புடன் [illegible] அச்சமற்றிருத்தற்கு, பத்தி நவம் இலேம் - அன்பாகிய புதுமையை இல்லாதவராயினோம், என் செய்வான் இருந்து நாளினை வறிது ஒழிக்கின்றேம் - யாதுபயன் ஈட்டு தற்கோ இங்ஙன [illegible]யிருந்து நாட்களை வாளா போக்குகின்றன ம் (ஆண்டவா!) எ - று.

மூன்றாந்தரமாகிய [illegible] நமையுணர்த்தப் பத்திமுனைக்கப்பெ றுவதுபுதுமை; அப்புதுமையுடைமையின் பிறப்பையடக்கலாமென் பார், 'பவமிலேமென்றிறுமாந்திட [illegible] பத்திநவமிலேம்' என்றும், அதுபெறுக்கால் காலக்கழிவேயன்றி ஈட்டும்பயன் சிறிதுமின் றென்பார், 'என்செய்வானிருந்து நாளினைவறிதொழிக்கின்றே ம்' என்றும், கண்களாற்காணப்பெறாத கடவுளைக் கண்களார இமையாவிழியாற் காணப்பெறுதலும் கால் நிலந்தோய வலம் வருதலுமே தவமும், அங்ஙனம்பெறாமையே அவமுமாகலின்,

காணப்பெறுதலிற்றவமும் வலம்வருதலில் அவமுமுடையமெ ன்பார், 'அவமிலேம் தவமிலேம்,' என்றாரென்றுங்கூறினர். ()

கண்களிற் பரிந்து கண்டுவப் பனவே கைகணிற்
றொழுபவே செவிகள், பண்களிற் புகழும் புகழ்ச்சி
கேட் பனவே பதமிணை வலம்புரி வனவே, யெண்குபு
ற் றிடப்ப வெழுமணி கரவா விருந்துசென் றிருள்க
வர் வனபோற், றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோ
ண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) எண்கு புற்று இடப்ப எழும் மணி - கரடிகள் புற்றினைத் தோண்டுதலால் அப்புற்றிலிருந்து வெளிப்படும் அரவின் மணிகள், கரவா இருந்து சென்று இருள் கவர்வன போல் - ஒளித்திருந்து வெளிவந்து இருளை கவர்கின்றனபோல, தண் கதிர் கற்றை கான்றிடும் சோணசைலனே கைலைநாயகனே - குளிர்ந்த கிரணக் கூட்டங்களை வீசிக்கொண்டிருக்கும் சோணசைலரே! கைலைநாயகரே!, கண்கள் பரிந்து நின் கண்டு உவப்பனவே - எனது நேத்திரங்கள் தேவரீரை விரும்பித் தரிசித்து மகிழத்தக்கவைகளே, கைகள் நின் தொழுபவே - கரங்கள் உம்மை வணங்கத்தக்கவைகளே, செவிகள் பண்களில் புகழும் புகழ்ச்சி கேட்பனவே - காதுகள் (அடியவர்களால்) பண்களோடு புகழ்ந்து துதிக்கப்படும் கீர்த்திகளைக் கேட்கத்தக்கவைகளே, பதம் இணை வலம் புரிவனவே - கால்கள் உம்மை வலம் வரத்தக்கவைகளே (ஆகையால் ஆண்டருள்வீராக.) எ - று.

ஏகாரம்நான்கும் பிரிநிலை; வேறொன்றும் செய்யத்தக்கன வல்லவெனப் பொருள்படுதலின். இருள்கவர்வனபோற் கதிர்க் கற்றை காலுதலாவது - இருட்செறிவுபோலும் கரடியினிறந் தோன்றாதபடி கதிர்பரப்பல்.

கிணங்கிகழ் வடிவேற் காளையே யென்று நேரிழை
யவர்விழைந் திடுவோர், குணங்கிரி தனிரின் மடியவே

க்கண்டுங் கொடியனேன் வாழ்வுவந் திருந்தேன், மணா
ந்திமிர் மகளிர் சிலம்பொடு மைந்தர் வார்கழ றுவக்
கிட் வலம்போய்த், தணந்திடு மமையத் தறிந்துநாண்
சோணசைலனே கைலைநா யகனே.

(இ - ள்., மணம் திமிா மகளிா சிலம்பொடு - களபமணிந்த மங்கையாகளின் காற்சிலம்பினேடு, மைந்தா வாா கழல் துவக்கிட் - ஆடவர்கள் (காலிற்கட்டிய) பெரிய வீரக்கழல் மாட்டிக் கொள்ள (அதனை அறியாதாராகி), வலம் போய் தணந்திடும் அமையத்து அறிந்து நான் சோணசைலனே கைலைநாயகனே - பிரதக்ஷிணமாகச்சென்று தமதிடஞ்செல்லப் பிரியுஞ்சமயத் துணாந்து நானிநிற் கும்பெருஞ் சோணசைலரே! கைலைநாயக ரே!, இணம் திகழ் வடி வேல் காளையே என்று - ஊன்செறிந்த கூரிய வேலேந்திய இளம்பருவமுடைய முருகக்கடவுளே இவ ரென்று, மோா இழையவா விழைந்திடுவோா - தக்க பூண்களை யணிந்தமங்கையாகளால் விரும்பப்படுவோராகிய ஆடவர்கள், குணம் திரி தமியேன் படிய கண்டும் - தன்மையாறிய தனிா போல (வெள்ளைமுறுகிப்போமாறு முதிர்ந்தவராய்) இறந்தொழிவ தைப் பிரத்தியக்ஷமாகநோக்கியும், கொடியனேன் வாழ்வு உவந்து இருந்தேன் - கொடுமேருகியயான் இத்தகைய வாழ்வை நல்வாழ்வெனக் களித்திருந்தனன் (இஃதென்ன அறியாமை.) எ - று.

தனிரெனப்பெயாபெற்று வொன்றே இலை பழுப்பு சருகெனப் பெயர்மாறி மடிதல்போல, முன்னாள் பாலரெனப் பெயர்பெற்று அழகினரும் குமாரா தருணர் விருத்தரெனப் பெயர்பெற்று மடிவரென்று, இளமையாதிகளின் நிலையாமையையும், தணந் திடுமமையந் தறிந்து எனை...யின்; சிலம்புங்கழலும் துவக் குண்டது முன்னறியாமை சனநெருக்கத்தாலென்று வழிபடு வோர் மிகுதியையும் விதந்தபடி. ஏகாரமிரண்டும் ஈறசை

தேற்றமும் அசையுமாம். விழைந்திரோ என்பது *"செயப்படு பொருளைச் செய்தது போலத், தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே" என்ற சூத்திரவிதியால் படு விகுதியும் வாழ் வென்புழி இழித்தற்பொருட்டாயக்கும் இகரச்சுட்டும் தொக்கன. உம்மை இழிவுசிறப்பு. கழல் அரவின் படம்போல வைந்து கொக்கிபோன்றிருத்தலின் துவக்குங்கருவியாயிற்று. வாரகழல் - கச்சாலிறுக்கப்படுங் கழலுமாம். (எகூ)

மாந்தளிர் கவற்று மணிச்சிலம் படிகள் வடுவகிர் பொருவும்வா ணெடுங்கண், காந்தளி னிமைக்கு மங்கையென் றவலக் கன்னியர்ப் புகழ்வினை யறுமோ, பூந்திரை சுருட்டுங் கடலகடை குரமொராண் பொறியரா வின்றிமா தவர்க்குச், சாந்துய ரகற்று மருந்தருள் சோணசைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) பூந்திரை சுருட்டும் கடல் - பொலிவுபெற்ற அலைகளை மடக்கிவீசுஞ் சமுத்திரமும், கடைகுரம் - அதனில் மத்திட்டுக் கடைகுரும், ஒள் பொறி அரவு இன்றி - அழகமைந்த துத்திகளையுடைய பாம்பும் (ஆகியஇவைகள்) இல்லாமலே, மாதவர்க்கு சாம் துயர் அகற்றும் மருந்து அருள் சோணசைலனே கைலைநாயகனே - தம்மையடைந்த தவமுநிவருக்கு மரணத்துன்பத்தை யொழிக்கும் மருந்தினைத் தந்தருளுகின்ற சோணசைலரே! கைலைநாயகரே!, மணி சிலம்பு அடிகள் மாந்தளிர் கவற்றும் என்று - மணிகசிதமான சிலம்பணிந்த கால்கள் தேமாந்தளிரினையுங் கவலைச்செய்யுமெனவும், வாள் நெடும் கண் வடு வகிர் பொருவும் என்று - ஒளிபெற்ற நீண்டகண்கள் மாம்பிஞ்சின் பிளப்பினை நிகர்க்குமெனவும், அங்கை காந்தளின் இமைக்கும் என்று - அகங்கை காந்தள்மலர்களைப் போலப் பிரகாசிக்குமெனவும், அவலம் கன்னியர் புகழ் வினை

* தொல்காப்பியம் சொல் - உசக.

அறுமோ - சீரேண மங்கையர்கள் வியர்த்திரியும் தீவினை தமியேனை விட்டொழியுமோ? (அறியேன்.) எ-று.

மேற்கூறியதுபோலக் குணந்திரிந்து வேறுபடும் அங்கங்களைப்பற்றிக் கன்னியர்களைப் புகழ்வினையறுமோ எனவே, என்றும் ஒரியல்பினதாகிய நித்தியானந்தசுகத்தைப் பாலிக்கும் தேவரைப் புகழும் நல்வினையுறுமோ என வேண்டினமைதானே போதரும். உடகாரணங்களால் தேவர்க்கு அமுதந்த மந்தரம் போலாவுமாதலாக்குதலினேனை தபரிந்து தந்தருமிச் சோணசைலம் அதனின் மேம்பாடுடையதெனக் கூறியவாறு. மிருதத்தையொழிப்பது யாதேனும் அது அமிர்தமாமென்பார் 'சாந்துயரகற்றுமருந்து' என்றார். என்று என்பது யேலிடங்களிலுங் கூட்டப்பட்டது. (எஎ)

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு செவிகளுஞ் செவிடுபட் டைமமே லூர்ந்திட வுயிர்போம் பொழுதினின் வடிவ முளங்கொளும் பரிசெனக் கருளாய், மந்தர சைலம் தருபிடங் களைந்து வைத்திடத் தினிமிம சைலந், தந்திடு மமுதை வைத்திடுஞ் சோண சைலனே கைலை நாயகனே.

(இ-ள்.) மந்தரம் சைலம் தருபிடம் களைந்து வைத்து - மந்தரமலைதருஞ் சாளகூடத்தைக் கண்டத்திலமைத்து, இமம் சைலம் தந்திடும் அமுதை இடத்தினில் வைத்திடும் சோணசைலனே கைலைநாயகனே - இமாசலவரசன் பெற்றருளிய அம்பிகையாரென்னும் அமுதை வாமபாகத்தி லமைத்தருளுஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, சிந்தனை கலங்கி - சித்தம் பேதித்து, இணை விழி இருண்டு - இரண்டுவிழிகளும் பஞ்சடைந்து, செவிகளும் செவிடுபட்டு - காதுகளிரண்டும் செவிடாகி, ஐ மேல் ஊர்ந்திட - கோழை மேலேறி வாயாற்பாய, உயிர் போம் பொழுது - உயிர் இவ்வுடலினின்றும் நீங்குங்காலத்தில், நின்

வடிவம் உளங்கொளும் படிக எனக்கு அருளாய - மதவேழு டைய திருவுருவத்தை மனத்திற்றியானிக்குந்தன்மையை எ றனக்கருள்வீராக. எ - று.

உடலினை உயிர்துறக்குங்காலத்து இந்திரியாதிகளொன் றுதா மீல்களெல்லாம் மயங்குமென்பதை *"புலனைந்தும் பொறிகலங் கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மே லுந்தி-யலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்" எனவும், †"ஒன்பது வாசல் வைத்தா ரோகக வடைக்கும்போ துணரமாட டேனே" எனவும் வருவனவற்றாலும், சிவகிருபையால் இக்காலத் திற் பயின்றவைத்த பழக்கத்தாலன்றி இறுதிக்காலத்திலே சிவ த்தியானம் புணர்ச்சி நிகழாதாதலின் அப்பயிற்சி நிகழ்பெறுமாறு ஆனேறு மெல்லாம் உடையானைப் பிரார்த்திக்க வேண்டுக்கொட வியல்பென் றவே, ‡"அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து - பங்கத்தைப் போக மாற் றிப் பாவித்தேன் பரமா நின்னைச் - சங்கொத்த மேனிச் செல் வா சாதனா ணாயே னுன்னை - யெங்குற்றா யென்ற போதா விங் குற்றே னென்கண்டாயே" என்பதனாலும் அறிக. இருமலைக் கருத்து யுடைமையையும் அருத்தத்தையும் தம்பா லுண்கொண்டுள்ளாரா மலையுருவமானைச் சாதுரியமாகத் தோன்றும் நிக்கிரகானுக்கிரகமு டைமை குறிப்பிற்றபடி. (எஅ)

நயங்கொளு மெய்பரா னின்றிரு வடியை நாடொறு முயிருணுங் கூற்றம், பயங்கொள வகலா தருச்சனை புரிந்து பரகதி யடையுமா றுளதோ, வயங்கொளு மிடையப் பெருப்பனைக் கடந்து வானநா டாண்டிடப் பிப்போர், சயங்கொள வடைதற் கரணமாஞ் சோண சைலனே கைலைநா யகனே.

* ஆளுடையபிள்ளையார் தேவாரம் திருவையாறு - க

† ஆளுடையவரசுதேவாரம், திருப்புகலூர் - க

பொது அ

இ - ள். பயமகொளும் விடயம் பெரும் பகை சடந்து - (இதுகாறும் தம்மை) வெற்றிகொண்ட விடயங்களாகிய பெரும் பகையைவென்று, வானம் நாடு ஆண்டிட மதிப்போர் - முத்தி நாட்டினை ஆள் விரும்பும் ஞானிகள், சயம் கொள அடைதற்கு அரணம் ஆய சோணசைலனே கைலைநாயகனே - அப்பகையினை வெல்வான் அடைதற்குரிய காவலிடமாகிய சோணசைலரே கைலைநாயகரே!, உயா உறும் கூற்றம் பயம் கொள - (காலவரையறை நோக்கி) உயிரை கவரும் இயமன் (என்னைக் கவர்தற்கு) அஞ்சும்படி, நாடோறும் அகலாது நின் திருவடியை நயம்கொளும் மனராய் அருச்சனை புரிந்து - தினமும் விட்டுநீங்காமல் தேவரீர் திருவடிகளை நல்ல புஷ்பங்களால் அருச்சித்து, பரகதி அடையும் நாள் உளதோ - திருவடிப்பேறாகிய மேம்பட்ட முத்தியைப் பெறுங்காலமும் உண்டோ? (அறியேன.) எ - று.

நயபாவம் புருஷார்த்தமயிர்சிக்கல் முடங்கல் பழமையாதல் வாடல் முதலிய குற்றங்களைவாது மலருடைத்தாய் அப்பொழுது அலர்ந்துள்ளமை. பரகதி திருவடிப்பேறு புக்கிருத்தலென்பதை "உன்னடிக்கேபோதுகின்றேன்" என்ற அருட்பாவானறிக. பகைக்கடிந்து நாடாளவெண்ணுகின்றார்க்கு மலையரணும் வேண்டுமாகலின் விடயப்பகை கடப்பார்க்கு அரணுக்கினா. (௭௧)

பிரம்பொரு கரங்கொண் டடிப்பநந் திசர் பெருங்
கல்வெழ் பாசியி னிமையோர், சிரம்பொர வொதுங்கி
நெருங்குநின் வாயிற் றீயனே னணையுநா ளுள
தோ, வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே லமர்த்
தகட் கிரியக ளிலைக்குஞ், சரம்பொர விருந்து விளங்
குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

* ஆளுடையவரசுதேவாரம் திருப்பதிகம்.

(இ-ள்.) அரம் பொரா அகன்ற இலங்கு இலை நெடு வேல் அரத்தாற் றேய்த்தலால் விசாலித்ததாய் விளங்குகின்ற இலைவடிவ வாய்ந்த நீண்ட வேலினையும், அமாத்த கண்டிகள் - போரிட மமைவன்ற திருக்கண்களையுடைய பாலதுவாத்துதனியம்மையையும்; இனை குஞ்சரம் கொரா இருந்து விளங்குகின்ற சோணசைலனே கைலைநாயகனே - இரண்டு தனைக்கொண்டியாலை எனத் தூக்கட் பெருகுவிளங்கும் சோலை எம்பிரான் கையினாயுமோரே!, ... பிரம்பு ஒரு கரம் கொண்டு - ... பிரம்பிய ... சாத்திற்றாங்கி, இமையா ... அய - தேவர்க ளின் மணிமுடியிற் றாக்குமாறு ... மடுப்பகல் ... டாகி ... ஒதுங்கா மாறு ... - பொய்யகல ... னிலையில் வீழ் ... பாசியிலைடபோல இடை ... உடம்பை ... டிக்கொள்ளத் தக்க, நின் அவையில் நியமனம் ... யும் நாள் ... தோ - தே வர்து ... சாணியல் ... சபையிலே விடாயேற்ப ... முறும் நாளும் உட... டோ? (அடியேனை.) எ-று.

சிரம்பொராவெ தங்கல் முடியொடு முடிதா கவிலகல் என் னுமொன்று அமர்த்தல் அதன் காரியமாகிய வைரத்தினையு ணர்த்தி நின்றது. குஞ்சரக்கோட்டிய குஞ்சரமென்றுமாம். ()

காமனை முனிந்த முனிவர்பாகுமெய்க் கதியிடைப் புகவிடுத் திடினும், பாமர னிவனென் றிருளினுய்ப் பினுநின் பதமலா லன்றிவே றுளதோ, வாமமலை பொருந்து முலகுள குவட்டு மலைகள்போ லாதுறு மலையாந், தாமரை பொருந்து மாதுவள்வாழ் சோணசைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) வாம் மலை பொருஉம் உலகு உள குவட்டு மலை கள் போலாது - தாவிச்செல்லும் மான்களைத் தம்பால் உறை யப்பெற்ற உலகின்கணுள்ள மற்றைச் சிகரமலைகளை நிகராது, உன்னுருவமே ஆம் தாமரை பொருந்தும் மாதுவள் வாழ் சோண

சைலமே சைலநாயகனே - உண்ணாமுலையென்னும் தாம ரையரும்புக்ளையுடைய (உமாதேவியாரானவரை) மாதுளனே பாகமாக்கொண்டிருக்கிற சோணசைலரே! சகலநாயகரே!, காமனை முனி ந்த முனிவரர் புகும் மெய்க் கதியடைப்பு விடுத்திடினும் - மன் ற நெறியெனப்படும் முனிவர்களுடையும் உண்மையாகிய திரிபுவனசாபமுளும் (அன்றி), இவன் டாமரன் என்று இரு ளை உய்ப்பினும் - இவனை அருளாளியென்று நரகத்திற்செ லுத்தினும், நின் துய் ... வேறு உளதோ - உமது திருவடித் தாமரைகளேயல்லாது வேறு கதியுண்டோ? (இல் லை.) எ - று.

* "நரகம்புகினும் ... திருவருளாலே யிருக்கப் பெ றினை" என்றருளினார் மணிவாசகப்பெருமானும் ஆகலின், உடையானையல்லது அடியவர்க்கு உறுதுணையின்மையால் தே ... திருவுளமுவந்து விடுத்திடிய கதியே சுற்றேடற்கு உயர்கதியாவ தெனா, 'கதியடைப்பு விடுத்திடினும் இருளிலுய்ப்பினும் ... வேறுளதோ' என்றும், மாண்களைப் புறத்தே ... ண்டுள்ள வினைவிலக்கு மாறுபட சிற்றேதான்றெண்டார் 'காமுள்வாழ்' என்றும் பாடினார். எவராலும் வெலற்கரிய மென்றும் பெருமைதோன்ற காமனென்றது காமனென்றார். ... மேவ, அவனையுமென்ற முனிவர்பெருமை கூறவேண்டாதா யிற்று. துறக்கமுதலிய பொய்க்கதிகளை விலக்குதற்கு 'மெய்க்க தி'யென விசேடிக்கப்பட்டது. †"திருமூலசாத்தம்பர் ஒண் புதி மழுவைத் திருச்சொன - குருகவும் மெங்கிற யென்ற முதல்வி யைத் திருநட மம்மைத் - திருமுலை வரும் வான்போற்றிரன் புனைக் கரதகா லுயர்னும் - யரிதுதம் கனிர்மின் செக்தாமரை யடி வணங்கு வாமே." எனவும், ‡ "பன்னிரு கமலக் கையும்

* திருவாசகம் திருச்சதகம் - உ. †. சங்கரநாராயணர கோயிற்புராணம் ‡ சௌந்திபுராணம்பாயிரம்.

பற்பல தொழில்செ ளப்பத் - தன்னமர் தாய்முலைப்பா லுண்டு வாளிருந்தன னுங்கால்" எனவுங் கவிகள்வர்ணிக்கினும், யன்னைத்திற் கறந்தளித்தனனென்பதே புராணசித்தமாகலின் உண்ணாமுலை யெனப்பட்டன என்க. மனை - ஒருவகைமான். தனங்களென்னுந் தாமரையரும்புகளைக்கொண்ட மாதென்றது விளங்கவைத்தல். தாமரைபொருந்துமாதென்பது தாயும் மனைகள் பொருந்தியதொருமானைப் பிறிதொருமயங்தோன்றுகின்றது. தேவியானை யானைசெல் மலையில் யானந்தமையிலென்க. *"திருமுகங் கமல மிணைவிழி கமலஞ் செய்யவாய் கமலந்திலர்தாம் - வருமுலை கமலந் தூயகைகமலம் வலம்புரியுந்திபோற் கமலம் - பெருகிய வல்குல் மலர்ந்தடங் கமலம் பிடிநடைத் தாள்களுங் கமல - முருவமட் கவ்வா ருதலினன்றே யுயர்த்து பூவினுட் கமலம்" என்பவாகலின் உறுப்புக்களாகப் பத்துத்தாமரைகளையுடைய உண்ணாமுலையெனுந் தாமென்னினும் பொருந்தும். (௮௪)

தொடுக்குமா கமங்களெலாஞ்சொலின் றெருத்தார் துணிந்தநெஞ் சிருக்கையாற் பகையைப், படைக்கைதா னிருந்து மஞ்சுறு மவர்போற் பகட்டுமா மறலியை வெருவேன், மடக்குவார் கலாப மயிறுயி லெழுந்து மருவலர் வேங்கைமீ தகவத், தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) மடக்கு வார் கலாபம் மயில் - வளைக்கத்தக்க நீண்ட தோகையினையுடைய மயில்கள், துயில் எழுந்து மரு அலர் வேங்கை மீது அகவ - நித்திரைநீங்கியெழுந்து மணமலர்களையுடைய வேங்கைமரங்களின்மீதிவர்ந்து அஞ்சிக்கூவும்படி, தட கை வாரணங்கள் பிளிறிடும் சோணசைலனே கைலைநாயகனே - பெரு

* திருத்தணிகைப்புராணம் களவுப்படலம் - சங.

ப வாய்ந்த துதிக்கையையுடைய யானைகள் பெருமுழக்கஞ் செய்யுஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, தொடுக்கும் ஆகமங்கள் எலாம் சொல் ஐந்து எழுத்தும் - தேவர்களாலருளிச் செய்யப்பட்டுள்ள வேதாகமாதி கலைகளனைத்தும் புகழ்ந்து கூறும் ஸ்ரீ பஞ்சாக்ஷரங்களையும், துணிந்த நெஞ்சு இருக்கையால் - தெளிந்துள்ள மனமென்னுங்கருவி அடியேனிடத்திருத்தலால், படை கை இருந்தும் பகையை அஞ்சுறும் அவா போல் - தக்க ஆயுதங்கள் கரத்திலிருந்தும் சத்துருக்களை அஞ்சுவார் போல, பகுமா மறலியை வெருவேன் - மகிடவாகனனாகிய கரிய இயமனை அஞ்சேன். எ-று.

* "அஞ்செழுத்தே யாகமமு மண்ணலரு மறையு - மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து - மஞ்செழுத்தே, யானந்த தாண்டவமு மாறாறுக் கப்பாலா-மோனந்த மாமுத்தியும்" என்று ஆன்றோருணியபாவின், பஞ்சாக்ஷரம் சிவம் சத்தி ஆன்மா திரோதம் மலம் என்னும் ஐம்பொருளியல்பை விளக்குவனவாய வேதத்திற்கு முதன்மையுடைமையான 'ஆகமங்களெலாஞ் சொல் ஐந்தெழுத்து' என்றும், 'அண்ணலன் ... தலா மழகா மரழுத்தரு - மெய்ஞ்ஞானி விராப்பகலற நின் றோத - நண்ணை, மருளான துசிவதத்தை யாக்கும் பஞ்சாக்ஷரத்தை - யிருவாளனைவிரா வின்று." எனத் துணிந்த முறைப்படி இனிதோதுவாரை அணுகுதற்கும் இயமனும் அவனூர்தரும் அஞ்சுவராக அத்தகைய இயமனையான அஞ்சுவன் கொல்லோ வென்பார் 'மறலியையஞ்சேன்' என்னும்கூறினார். வேதம் ஆகமம் புராணமுதலிய கலைகளனைத்தையுமே ஆகமப்பிரமாணமென வழங்கலாலும், ‡ "வேத நான்கினு மெய்ப்பொருளாவது-நாதன் நாம நமச்சி வாயவே" என்றருட்டக்கத்து ஸ்ருதியுடைமையாலும், ஆகமமென்பது வே

* உண்மைவிளக்கம் - ௪௪. † ஷை - ௪௫. ‡ ஆளுடைய பிள்ளையார் தேவாரம் நமச்சிவாயத்திருப்பதிகம் - ௧.

தாகமாதி கலைகளோதுதலையுஞ் சுட்டிநின்றது. தொடுத்தல் சொல்லும் பொருளுமமையச் செறித்தல்; தொடையென்னும் பெயருடைமையாலுமுணர்க. ஐந்தெழுத்துமெனபதில் உம்மை இனைத்தென்றறிபொருளில்வந்த முற்றும்மை. § "அச்சக இளவிக் கைந்துமிரண்டு - மெச்சமிலவே பொருள்வயி னுனே" என்பது ஒத்தாகலின உருபுவிரித்தழியும் பகையை மறலியை என இரண்டிருருபே விரித்தார். படை - படுத்தற்கருவி; அது கையினின்றும் ஏவப்படுதலை அஸ்திரமென்றும், கையிலேயே நிலைபெறுதலன் சஸ்திரமென்றும் இருவகைப்படும். (படு, துவ- கொல்லுதல்.) பகட்டல் - வெருட்டல், மா - தேகப்பருமை எனலுமாம். த - அசை மறலிமேனிறமேசோடுடைமை யுடைமை முடைமை கருநிட டைமைய இயவுருவல் யா மே போலுதலின், அதமேருவியை மேரு க்கெனக்கு ஈ மயில கள ஒலித்து ஆடும்படி அது பிளிறுமணிலும் புரு மவ பது மெருமை மைாதுப் உரமைா | "ய களியும் மெருமை" என்பதனாலும், இப்படி ‡ "இயமம் அருமரு வ மெசால ணயமவ தோதயல் லாதமை மண்ணிருமை" என அனுமறிக. (அ-

நிந்தியா துடம்ப முழுதுந் தணிய மேனியா தமல மைவந் தெழுந்துஞ், சிந்தியா துழலு மெனக்கொடுங் கூற்றென் செயயுமே வற்நிந்திமேலன் றமியேன், வா தியா வரவ மன்றிடைக் கண்ட மலர்சிலம் படியை மண் ணுணிபோயச், தியா தயர வொளித்திடுஞ் சோண சைலனே கைலை யகனே.

(இ - ள்.) அரவம் வந்தியா மன்றிடை கண்ட மலர் சிலம்பு அடியை - பதஞ்சலிமுனிவர் வழிபட்டுச் சிற்றம்பலத்திலே தரி

§ தொல்காப்பியம் சொல் - ௧௦௦. || ஷை - ௫௨௦
‡ ஷை நமச்சிவாயத்திருப்பதிகம் - ௪.

சிக்கப்பெற்ற வியாபகமான சிலம்பணியணிந்த திருவடிகளை, மண் உணிபோய் சந்தியாது அயர ஒளித்திடும் சோணசைலனே கைலைநாயகனே - உலகையுண்ட திருமால் வராகவடிவாய்த் தேடிச்சென்று காணப்பெறாது சோர்வடையும்படி மறைந்தருளிய சோணசைலரே! கைலைநாயகரே!, உடலம் கிந்தியாது - சரீரத்தை இகழ்ந்து விடாயாலும், (உடலம்) முழுதும் நீறு அணிய நேசியாது - அச்சரீரமுழுவதும் திருநீற்றினைப்பூச அன்புறாதலும், அமலம் ஐந்து எழுத்தும் சிந்தியாது - மலநீக்கம் பெறுதற்கு ஏதுவாகிய பஞ்சாக்கரங்களையும் தியானியாமலும், உழலும் எனை - வருணா அலையுந்தேயனை, கூற்றம் கூற்று என் செய்யுமோ தமியேன் அறிந்திலேன் - கொடிய இயமன் என் செய்வானோ யான் அறிந்திலேன். எ - று.

உடலம் மீள மண்டமாய் நிலைபெறாதிருந் அதுதல்கண்டும் அதனைப்பெறுதலிற் அகாயந்திலனென்பார் 'உடலஞ்சிந்தியாது' என்றும், அவ்வியல்புடைய அவ்வுடலம் நீக்குமுன்னமே முத்திக்கு தற்சாதனமாகிய திருநீற்றை அப்புமண்டட்டேற்றிலேனென்பார் 'உடலமுழுதும் நீறணியநேசியாது,' என்றும், *"லவர் நீயமோருது உச்சிணா - யசல்லல் பெடச்சிப முத்தி காட்டுவ" என்பதறிந்தும் உச்சரித்திலேனென்பார் 'அமலமைந்தெழுத்துஞ் சிந்தியாது,' என்றும், இவ்வியல்புடையனை இயமன் தனது ஆதனைசெய்து தண்டித்தல் ஒருதலையென்பார் 'கூற்றென்செய்யுமோ' என்றும், திருமால் கற்பாந்தத்திலே எவ்வுலகங்களையும் உயிர்களையும் தமதுதரத்துட்டொடுக்கிந்து, பாலகன்போல் அறிதுயிலமர்வண்டது புராணசித்தமென்பார் 'மண்ணுணி' என்றும், இத்தகைப்பெருந்தகைமை வாய்ந்தும், இவர் சயனமாகிய ஆதிசேஷாவதாரமெனப்படும் பதஞ்சலிமுனிவரது வழிபாடுநோக்கித் தந்திருவடிகளைத் தரிசிப்பித்தருளிச்

செருக்குற்றமையால் இவர்க்கு மகிழ்ந்தருளினனென்பார், 'சந்தியாதுயரவொளித்திடும்' என்றுங் கூறினார். உடலம் தாப்பிசையாய் நின்றது; தாப்பு இசை-ஊசல் (போல இருமருங்குஞ் செல்வதொரு) சொல். அவமதியாது திருநீற்றை உடலமுழுது மணியவென ஒரு முடிபாக்கலுமாம். அமலம்பெறுதற்கேதுவாகிய ஐந்தெழுத்தை அமலவைந்தெழுத்தென்றது காரியத்தைக் காரணமாகவுபசரித்தல். வந்தியா வினையெச்சம். மலாயிரத்தொகை. மண்ணுணி வினைப்பெயர். அரவங்கண்டவழியை மண்ணுணியென்னுமொருசேர்ந்து காணுந்தயரவனைப் பிறிதொருயக்கோட்றகு மண்ணுணியென்றார். ௧௦௦ - என்று உபமானின்மேற்று.

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு மதர்விழிக் கடலினு மளகக், கங்குலி னூடுஞ் சென்றிலன் மனத்தைக் கதியிடை நடத்துமா றெவனோ, செங்கதிர் காலை மாலையுந் தங்கச் சிலம்புபோ லெண்டிசையும பகலிற், றங்குற நீடி நின்றிடுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) காலையும் மாலையும் செங்கதிர் தங்க சிலம்புடை உளவான - காலையும் மாலையும் சூரியனையுடைய உதயகிரி அத்தகிரியென்னும் மலைகளிருக்கின்றன வென்று திருவுளங்கொண்டு, நடும் பகலில் தங்குற நீடி நின்றிடும் சோணசைலனே கைலைநாயகனே - உச்சிப்பொழுதில் உறைவதற்கு உயர்ந்துள்ள சோண சைலனே! கைலைநாயகனே!, மங்கையர் பாரம் கொங்கை அம் குவட்டும் - பெண்களுடைய கனத்த தனங்களாகிய அழகிய மலைகளிடத்தும், மதர் விழி கடலினும் - களிப்பையுடைய விழிகளாகிய கடல்களினிடத்தும், அளகம் கங்குலின் ஊடும் - கூந்தலாகிய இருளினிடத்தும், சென்ற என் மனத்தை கதியிடை நடத்தும் ஆறு எவனோ - முடியுமுலைப்பெற்ற எனதுமனத்தினை

முத்திநெறியிற் செலுத்துவது எளிதாமோ? (எளிதன்று.)
எ - று.

சாயாத்தன்மையினாலும் பருமையினாலும் மலை முலைக்கும், குளிர்மையினாலும் பரப்பினாலும் கடல் கண்களுக்கும், கருமையினாலும் பரவியிருத்தலினாலும் இருள் கூந்தலுக்கும் உவமையாதலால், அங்ஙனமே உருவகித்தனர். கவளமிருக்கவும் கழைக்களிக்கும் யானைபோலக் கதியிருக்கவும் மலையிலும் கடலிலும் இருளிலும் கண்மூடி ஓடியுழலும் என்மனத்தை நன்னெறிப்படுத்தல் அருமையே என்பார் 'எளிதோ' என்றார். ஊடு ஏழனுருபு. சூரியமண்டலமளவும் ஓங்கியுயர்ந்திருத்தலின் உச்சட்டோதிற்றங்குற நீடிநின்றதாகக் கூறியபடி. (௮௪)

தண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமே லணிந்துவெண் ணீற்றுப், புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான் பூசனை புரியுமா றருளாய், முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு முடிமிசை முத்தமேற் கட்டித், தண்டிரைக் கங்கை யாறுசேர் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) செழும் முண்டகம் பூ என விளக்கு எரியும் முடிமிசை - செழுமை பொருந்திய செந்தாமரைப்பூவைப்போலக (கார்த்திகைத்) தீபம் பிரகாசிக்கும் திருமுடிமேல், தண் திரை கங்கை யாறு முத்த மேற்கட்டி சேர் சோணசைலனே கைலைநாயகனே - தண்ணிய அலைகளையுடைய ஆகாய கங்காநதியானது முத்தாலலங்கரித்த விதானம்போலச் சேர்ந்து விளங்குஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, கண்டிகை கலனே கலன் என விழைந்து காயமேல் அணிந்து - உருத்திராக்க வடத்தையே உயர்ந்த ஆபரணமென விரும்பி உடலிலணிந்து, வெண் திருநீறு புண்டரம் குறிசேர் நுதலொடு - வெளுத்த விபூதியால் அணியப்பெற்ற திரிபுண்டரக் குறியையுடைய நெற்றியோடும், நினை யான் பூசனை புரியும்

ஆறு அருளாய் - தவநெறி அடியேன் [illegible] செய்யும் படி திரு வருள் பாலிப்பீராக. எ - று.

சிவவழிபாடுடையார்க்கு இன்றியமையாச் [illegible] ளாத விபூதியென்பார் ஔவையாரும் *"நீறில்லா நெற்றிபாழ்" என்றாராகலின், நீறணியப் பட்டே நெற்றி திகழுமென்பது தோன்ற, 'நீறுகளுப்பச' [illegible] என்றும், [illegible] டொறையாய [illegible] மறைத் [illegible] திராக்கவடம் [illegible] சிவார் தனரு செய்யமோக்குச் சிவ தமனி [illegible], [illegible] வையாதிய [illegible] பூதி அப்பு [illegible] நதோரது சுவட் திம் [illegible], [illegible] பது தோன்ற, [illegible] றுங் கூற [illegible] வடி [illegible] றைபோல [illegible] - ஆவது. [illegible] டி - முதது [illegible] கட்ட [illegible]. இதம் [illegible] றுவதாய சிவ [illegible] †"ஆயிரம் [illegible] தங்கிலும் [illegible] விழிமணி [illegible] வீயவே." எனவும், ‡"[illegible] டலத்தைக் - [illegible] சிவ பூசை புரி [illegible] கழல்." எனவும் வருவனவற்றானுமுணர்க. (௮௬)

நாவினைப் பெருபயது [illegible] றுமே [illegible] தமையுநீ யிருப்பப், பாவினம் [illegible] மனிதரைப் புகழும் பாமரர் தமையுமெய் [illegible] கோவி

* நல்வழி - ௨௪. † சிகாளத்திப்புராணம் கண்ணப்பச்சருக்கம் - ௩௪. ‡ உருத்திராக்கவிசிட்டம் - ௬௪.

ளம் பரப்பக் குன்றமெடுத்த குன்றமும் பாடகக்
குன்றந்; தாவினுஞ் சிலையினை யெடுத்திடுஞ் சோண
சைலனே, கைலைநாயகனே.

(இ-ள்., அன்று கோ இனம் பரப்ப குன்றம் எடுத்த குன்றம் அமர (என்று) - (இந்திரன் கன்மழை பெய்வித்த) அன்று பசுநிரைகளைக் காக்குமாறு கோவர்த்தனமலையைக் குடையாக எடுத்தருளிய நீலமலைபோன்ற கண்ணனையே நமது கணையென்றும், ஆடகம் குன்றம் தாவில் நம் சிலை என்று எடுத்திடும் சோணசைலனே கைலைநாயகனே - சொர்ணமயமாகிய மேருமலையைக் கெடுதலற்ற நமது வில்லென்றும் தாங்கியருளிய சோண சைலனே! கைலைநாயகனே!, ஐந்து எழுத்து மந்திரம் (இருபட) அல்லாத நாயினை நவில்பவரோடு தமையும் - (சிறந்த) ஸ்ரீபஞ்சாக்கர மந்திரம் இருக்கவும் அதனையுச்சரியாது அஃதல்லாத பிற மந்திரங்களை உச்சரிக்கும் மனிதரையும், இருபடா இனங் கொள் புன்மனிதரை நேரும் நாயொரு தமையும் - (பாடலைப் பெற்று பலவகைப்பட்ட) தேவரோடு இருக்கும் பாக்களும் பாவினங் களுமாகிய ஆகிய இழிவுள்ள புன்மையிய மனிதரை வாளா புகழும் அறிவிலிகளையும், என்று ஒழிவேன் - என்று நீங்கி (உமது அடியவ ரோடு கூடியுய்யும் பக்குவம் பெறுவேன்) அறிகிலேன் என - று.

சிவபத்தி விசாரமில்லாத தம்மை பேயயன்றித் தம்மையடைந்தாரையும் கெடுக்கவல்லாரைக் கண்டால், அந்தகையரை அஞ்சாதிருப்பது ஆண்மையாயன்று, * "கோணிலா வாளி யஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன் நீணிலா அணியினானை நினைந்துநைந் துருகி நெக்கு - வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா - ஆணலா தவரைக் கண்டால் அம்மநா மஞ்சு மாறே" என்றருளிய திருவாதவூரடிகளும், இருப்பவென்பது மூன்றும் கூட்டப்பட்டது. பா - வெண்பா - ஆசிரியப்பா கலிப்பா

* திருவாசகம் அச்சப்பத்து - ௧0.

வஞ்சிப்பாவென நால்வகைப்படும். இனம் ஈர்நான்கன் விகற்பமாய்க் குறள்வெண்பாமுதற் பலதிறப்படும் எனக. ஒழிதல் - ஈண்டு அதனோடு அதன்காரியமாகிய அடியவர்கூட்டஞ்சேர்தலையும் உணர்த்துகின்றது. திரிபுரதகனகாலத்தில் அம்பு திருமாலும் அதனது ஈர்க்கு வாயுவும் அதனுனி அக்கினியுமாயமையினும் சொரூபம் திருமாலேயாதலாற்றி அவரையே அம்பென்றார். (௮௯)

திங்களுங் கதிரு மிலங்கிய யானுந் திகழ்பெரும் பூதமோ ரைந்துங், கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங் கண்டுகண் களிக்குநா ளுளதோ, பொங்குகுங் குலியக் கலயனா ரழலிற் புகையெனச் சரோருக வல்லி, தங்குவண் டெழூஉம் பொய்கைசூழ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) பொங்கு குங்குலியம் கலயன் ஆர் அழலில் புகை என - பொலிவுற்ற குங்குலியக்கலயரிடத்தில் அமைந்த அக்கினியி லெழும் புகையினைப்போல, சரோருகம் வல்லி தங்கு வண்டு எழூஉ பொய்கை சூழ் சோணசைலனே கைலைநாயகனே - செந்தாமரைமலரின் அகவிதழ்ப்பூவில் தங்கியும் சருவண்டு [illegible] மேகம்செல்லும்படியான [illegible] பெற்ற சோணசைலனே! கைலைநாயகனே!, திங்களும் கதிரும் இலங்கிய யானும் - சோமனும் சூரியனும் விளங்கும் ஆன்மாவும், திகழ் பெரும் பூதம் ஓர் ஐந்தும் - பஞ்ச [illegible] தோற்றத்துக்குக் காரணமாகிய பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் மாபூதங்களைந்தும், கங்குலும் பகலும் கடந்த - இரவும்பகலும் ஆகிய இப்பகுப்பினைக்கடந்து விளங்கிய, நின் வடிவம் கண்டு - தேவரீருடைய இலிங்க அகண்டாகாரவடிவத்தினைச்சேவித்து, கண் களிக்கும் நாள் உளதோ - எனது நேத்திரங்கள் மகிழ்வுறுங் காலமும் உண்டாங்கொலோ? (அடியேன்) எ - று.

பிரபஞ்சப்பொருளனைத்தையும் என்றுகூறிய திங்களாதிய எண்வகைப்பொருள்களுளடக்கி அவ்வெண்வகையையும் அங்கமாகக்கொண்டது பெருமானுடைய சகளரூபமெனவும், அவ்வெண்வகையையும், அவற்றால் இரவுபகலாய்க்கூறுபடும் காலதத்துவமாதியவற்றையுங் கடந்துநிற்பது நிஷ்களரூபமெனவும் கூறுவது நூற்றுணிபாகலின், அந்த நிஷ்களரூப தரிசனையை வேண்டிப் பிரார்த்தித்தபடி. திங்களாதிய அங்கமாதலை *"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் - புலனாய மைந்தனோடெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்" என்பதனானுமறிக. இயமானனும் பட்டபூதி னகரம் பதாக்குகின்றது. யாவும் இகழ்தற்குக் காரணமாகிய மாதூட்கமாத இகழ்பெரும் பூதமென்றது காரியத்தைக் காரணமாக உபசரித்தலாம். இகழ்தல் - (எல்லாவற்றையும்) தோற்றுதல். யாவுமெய்ட்டது அவாய்நிலையால்வந்தது. (அவாய்நிலை - ஒருசொல் மற்றொருசொல்லை அவாவிநிற்றல்.) குவளையக்கமலம் தாமரைமலர்களுக்கும் ஆரழல் அகவிதழ்களுக்கும் புகை வண்டுகளுக்கும் உவமித்தபடி. (௮௭)

பொறியெனப் புலன்களெனக் கரணங்கள் பூங்க
ளொளிவிலா தடங்க, வறிவெனத் தமியேற் கொரு
மொழி புகலி யருவினைக் குறும்பற வெறியாய, செறி
முலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ் சேரமா துமைதி
னங் கட்டுண், நறியனாக் கவின்பெற் றிலங்குறுஞ்
சோண சைலனே கைலைநாயகனே.

(இ-ள்., செறிமுலை கரியும் சிறு இடை அரியும் - நெருங்கிய தனங்களாகிய யானைகளையும் சிறிய இடையாகிய சிங்கத்தையும், சேர உமை மாது தினம் கட்டும் தறி என - சேரும்படி உமாதேவியார் நாடோறும் பிணிக்கப்பெறும் தாணுவென்னும்படி, கவின் பெற்று இலங்குறும் சோணசைலனே கைலைநாயக

னே - அழகமைந்துதிகழும் சோணசைலரே! ஐ.கலைநாயகரே!, பொறி என புலன்கள் என கரணங்கள் (என) பூதங்கள் என இலாது - பொறிகளைந்தும் தன்மாத்திரைகளைந்தும் அந்தக்கரணங்கள் நான்கும் பூதங்களைந்துமாகிய இவற்றின் தோற்றமில்லாது, அடங்க அறிவு என ஒருமொழி தமியேற்கு உதவி - முற்றும் ஞானசொரூபமாகவே (தோற்றும்படி) ஒரு உண்மைவாக்கியத்தைத் தமியேனுக்கு உபதேசித்து, அருவினை குறும்பு அற எறியாய் - கொடியவினைகளால் விளையுந்தீமைகளை முற்றும் சேதித்தருள்வீராக. எ - று.

அடங்க அற என்பன முழுதுமென்னும்பொருளன. எனவென்றும் எண்ணிடைச்சொற்கள். இது கரணமென்புழியும் கூட்டப்பட்டது. இனி, இந்திரியாதிகளே ஆன்மாவென மயங்குதலில்லாது அச்சித்தனை கெட்டெறிய, ஆன்மா அறிவுமாசொரூபமெனத்துணியுமாறு ஒருமொழியுபதேசியென்றலுமொன்றும். யானையாதிய விலங்குகள் எறியட்பெறும் மற்றைமலைகள்போலாது அம்பிகையின் அவயவங்கள் அனுதினமும் அணையப்பெறுமதென்பார் 'முலைக்கரியும் இடையரியுங் கட்டுந்தறி' என உருவகித்துக்கூறினர். யானைக்கோட்டினையும் சிங்கவிடையினையும் இணையாக வுவமிக்கப்படும் முலையையும் இடையையும் யானைசிங்கங்களென்றது இலக்கணை. (அஅ)

பொன்னிடத் தடைந்த மணியெனவடைந்து புண்ணியர்க் கருளுநின் பதங்க, ளென்னிடத் திரும்பினடைந்தசெம் மணிபோலெய்திய தம்மவோ வியப்பே, மன்னிடக் கடலு ளடங்கும்வெற் பன்றி மலைதரு மருட்பெருங் கடலைத், தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) மன்னிட கடலுள் அடங்கும் வெற்பு அன்றி - நிலைபெறச் சமுத்திரத்தினுள்ளே ஒடுங்கிய பிறமலைகளை நிகர்க்

து, மலைதரும் அருள் பெரும் கடலை தன் இடத்து அடக்கும் மலை எனும் சோணசைலனே கைலைநாயகனே - இமையமலை தந்த திருவருட்கடலாகிய உமாதேவியாரைத் தன்னிடப்பாகத்தி லொடுக்கிக்கொள்ளும் மலையெனவியக்கப்படுஞ் சோணசைல கைலைநாயகரே!, பொர். இடத்து அடைந்த செம்மணி என - சொர்ணத்திற்பாற்சேர்ந்த செவ்விய அரதனம் ஒப்ப, புண்ணியர்க்கு அடைந்து அருளும் நின் பதங்கள் - தரும விருத்தியுடையவர்பாற் சார்ந்து அவர்க்குக் கிருபைபாலிக்கும் தேவருடைய திருவடிகள், இரும்பின் அடைந்த செம்மணி போல்- இரும்பின்பாற்சேர்ந்த செவ்விய அரதனம் ஒப்ப, என் இடத்து எய்தியது அம்ம ஓ வியப்பே - அடியேன்பா லணுகியது வியப்பினும் வியப்பே. எ - று.

பொன்னிடத்தடை தற்குரிய செம்மணி இரும்பிலடையாவாறுபோலப் புண்ணியபாலடை தற்குரிய திருவடிகள் என்னிடத்தடைவன அல்லவாகவும், அருட்பெருக்காலடைந்தமை வியப்பினும் வியப்பெனபதாம். அம்ம ஓ என அடுக்கிய இடைச்சொற்கள் வியப்பின் மிகுதிப் பொருள்பட நின்றன. எம்மலையும் கடலின் உள்ளிடத்தடங்குவனவாக. இம்மலை கடலைத் தன்னிடத்த டக்குவதென்பதை முரணணி. இவ்வணி இந்நூலில் மிக்கிருத்தலின் இவ்வாறு முன்னும் பின்னும் முரணத்தொடுத்தன வெல்லாங் கொள்க. எல்லையிறந்த கருணைப்பெருக்கினொன் றாகிய தேவியாரை அருட்பெருங்கடலென்றார். (அகூ)

நீங்கிய நேயத் தவர்க்கறி வரிய நிருமல னெஞ்சகன் றிடாத, தேங்கிய சோதி மன்றுளாநடவென் சிந்தையு ளடப்பதின் பதங்க, ளோங்கிய மூங்கிற் மலைமிசை மலர்வீழ்ந் துழுமளி புரியிருள் மருவித், தூங்கிய வால வட்டநேர் சோண சைலனே கைலைநாயகனே.

(இ-ள்.) மலர் வீழ்ந்து உழும் அளி புரி இறுல் - (தேனைக் கவர) மலரின்கட்படிந்து கிண்டும் வண்டினங்களமைத்த தேனடை, ஓங்கிய மூங்கில் தலைமிசை மருவி - உயர்ந்து வளர்ந்த மூங்கிலின் உச்சியிலே பொருந்தி, தாங்கிய ஆலவட்டம் நேர் சோணசைலனே கைலைநாயகனே - (அடியவர்கள்) ஏந்திய ஆலவட்டத்தை ஒத்திருக்கப்பெறுஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, நேயத்து நீங்கிய அவர்க்கு அறிதற்கு அரிய - அன்பினீங்கிய அறிவிலிகட்கு அறிதற்கருமையுடையனவும், நேயமவர் நெஞ்சு அகன்றிடாத - விஷ்ணுமூர்த்தியின் உள்ளக்கமலத்தில் விலகாதனவும், சோதி தேங்கிய மன்றுள் ஆடுவ - ஒளிமிகுத்த திருச்சிற்றம்பலத்தில் நிருத்தம்புரிவனவுமாகிய, நின்பதங்கள் என் சிந்தையுள் நடப்ப - தேவரீருடைய திருவடிகள் அடியேனது மனத்திலே சஞ்சரிப்பன (ஆதல்வேண்டும்.) எ-று.

ஆதல்வேண்டுமென்பது சொல்லெச்சம். திருவடிகள் அறவரியனவும் அகன்றிடாதனவும் ஆடுவனவும் கூட்டமுமாக இருக்கின்றனவென்னும் ஒன்று. இறால் ஆலவட்டத்துக்கும் மூங்கில் காம்புக்கும் உவமை. ஆலவட்டம் - ஆலிலைவடிவாயமைந்ததொரு உபசாரக்கருவி. ஆல இதில் அகரம் சாரியை. (௯௦)

எழுபசும் புல்லும் புனலுமெய் விழைந்து மிருந்திட
நினைத்தவ ரிடத்தே, விழைவொடு வந்து தோன்
றுநீ யிருப்ப வீணிலெமா னுடம்பினந் துழல்வனோ, மொ
ழிதரு கருணை மலையெனும் பெயரன் மொழியொ டிரு
வேற்றுமைத் தொகையைத், தழுவுற நின்று வளர்ந்
திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

(இ-ள்.) மொழிதரு கருணைமலை எனும் பெயரா - (அன்பர்களால்) விதந்துகூறும் கருணைமலையெனப்படும் (தேவரீர்க்குரிய) திருப்பெயரானது, அன்மொழி ஒடு இருவேற்றுமைத் தொகையை தழுவுற - அன்மொழித்தொகையென்னும் இலக்கணத்தை

விட்டு வேற்றுமைத்தொகையென்னும் இலக்கணத்தைத்தழுவு ம்படி, நின்று வளர்ந்திடும் சோணசைலனே கைலைநாயகனே- நிலைபெற்று வளர்ந்தோங்கிய சோணசைலரே! கைலைநாய கரே!, புனலும் எழு பசும் பல்லும் எவ்விடத்தும் இருந்திட- நீர்ந்ததும் அந்திடரோறிவரும் பசிய அறுகும் எவ்வெவ்வி டங்களிலும் (எளிதிற்கிடைக்க) இருக்கவும், நினைந்த அவ்விடத் தே விழைவொடு வந்து தோன்றும் நீ இருப்ப - நியாணித்த அவ்வவ்விடங்கடோறும் காதலோடெழுந்தருளிவந்து காட்சித ரும்தேவரீர் இருக்கவும், மாலுடா வீணில் பிறந்து உழல்வார் - மனிதர்கள் (அவற்றைக்கொண்டு அபிடேகித்தும அருச்சித்தும் தேவரீரையடையாமல்) வாளா (இறந்தும) பிறந்தும் உழல்கின் றனா! (இஃதென்ன அறியாமையோ? அறியேன்.) எ - று.

எவ்விடத்துமிருந்திட தோன்றுநீஇருப்ப என்பன விரும் பில் பெறப் பெருமைதோன்ற நின்றன. பிறந்துழல்வரென்ற மையின் அக்காலத்துட ச்சியாகிய இறத்தலும் உடன்கூறணத்தாற் கொள்ளப்படும். கொள்ளவே, வழிபாடுடையார் இயமவாதனை க்குரியராகி இறந்துபிறந்துழலாரென்பது தானேபோதரும். இக்கருத்துப்பற்றியே வாகீசமூர்த்திகளும் * "கற்றுக் கொள் வன வாயுள நாவுள - இட்டுக் கொள்வன பூவுள நீருள - கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம் - எற்றுக் கோநம னான்முனி யுண்பதே" என்றருளினாரென்க. உழல்வ ரென்பது [illegible] கம். சிவபெருமானைச் சுட்டி வழங்கும் கருணைமலை என்னும் பெயர் இம்மலைவடிவம் ஆவதன்முன்னாக் கருணையாகியமலை யையுடையானென்றும், மொழிமாறி மலைபோலுங்கருணையை யுடையவரென்றும், முறையே பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையதாய் நின்று, மலைவடிவமைந்தபின்னாக் கருணையையுடையமலையெ

* ஆளுடையவரசுதேவாரம் பொது திருக்குறுந்தொகை-கூ

ன இரண்டனுருபும் பயனுந்தொக்கதாய் வேற்றுமைத்தொகை யைத் தழுவிற்றென்றபடி. தரு - இடவழுவமைதி. ஒருவி என்டது ஈறுகெட்டு இடையுகரமிசராய் அளபெடுத்தது; வெருவி என்பது வெரீஇ என்றாயவாறுபோல. (௯௧)

வேணவா வகன்று நின்றிரு வடியின் மெய்ம்மை
யன்பு படைந்துபொய்ப் பிறவி, நாணுவா ரினங்கண்
டுறும்படி தூய ஞானநாட் டம்பெற வருளாய், சே
ணுலா மதியந் தவழ் பெருஞ் சூடுமிச் சிலம்பெலாஞ் சிறு
துரும் பாகத், தானுயர் வாயெழுந்து வளர்ந்திடுஞ்
சோண சைலனே கைலைநா யகனே.

(இ - ள்.) சேண் உலாம் மதியம் தவழ் பெரும் சூடுமி - ஆகாயத்திலுலாவும் சந்திரன் தவழாநின்ற பெரிய சிகரங்களையுடைய, சிலம்புகள் சிறு துரும்பு ஆக - மலைகளெல்லாம் சிறிய திரணமென்று மதிக்கப்படவாகும்படி, தானுயர்வாய் எழுந்து வளர்ந்திடும் சோணசைலனே கைலைநாயகனே - அக்கினி ஸ்தம்பாகாரமாக வளர்கின்ற சோணசைலரே! கைலைநாயகரே!, வேணவா அகன்று - (பிரபஞ்சத்தைப் பற்றியவும்) வேட்கைகளை முற்றுமடங்கி, நின் திருவடியில் மெய்ம்மை அன்பு அடைந்து - தேவரீர் திருவடிகளில் உண்மைநேயம் பொருந்தி, பொய்ப்பிறவி நாணுவார் இனம் கண்டு உறும்படி - நிலைபேறில்லாத ஜனனத்தை யடைதலில் நாணி வருந்தும் அன்பர் கூட்டத்தை யறிந்து அவருடன் மருவி வாழும்படி, தூய ஞானம் நாட்டம் பெற அருளாய் - பரிசுத்தமான ஞானக்கண்களை அடியேன் பெறுமாறு தந்தருள்வீராக. எ-று.

* "செய்யுள் மருங்கின் வேட்கை யென்னும் - ஐயெனிறுதி யவாமுன் வரினே - மெய்யொடுங் கெடுதலென்மனார் புலவர் - டகார ணகார மாதல் வேண்டும்" என்பது சூத்திரபாத

* தொல்காப்பியம் எழுத்து உயிர்மயங்கியல் - ௯௩

லால், வேட்கை அவா எனபன வேணவாவெனுங் வேட்கைப் பெருக்கத்தை யுணர்த்துவதோர் மொழியாய் நின்றன. வேட் கை பொருண்மேற் றோன்றும் பற்றுள்ளம்; அவா - அப் பொருளைப் பெறவேண்டுமென்று மேன்மேனிகழும் ஆசை. வேட்கையும் அவாவும் என உம்மைத் தொகையாகவும், வேட் கையாலுண்டாகிய அவா வென மூன்றனுருபும் பயனுந் தொக் க தொகையாகவும் கொள்க. காணுதல் - ஈண்டு அறிதலின் மேற்று. ஞானநாட்டமுடையார்க்கல்லது விளங்குதற்கரிய இலைமறை காய்போல் மறைந்துள்ள சிவஞானியரைக் காண்டலும் அவர் சுற்றுப் பற்றித் தொடர்புகொள்ளும் முடியாவாகலின் ஞானநாட்டம் விரும் பட்டது (கஉ)

நின்னையே நோக்கி விடாதகட் புலனு நின்னையே நினைக்குநெஞ் சகமு, நின்னையே துதிக்கு நாவுமென் றருள்வாய் நின்றுரு வடியினைந் தருள்வாய், தன்னையே யடைந்தார்க்குச் சகலமுங் காட்டுந் தரணியே யடிகளிலே யினார்க்குந், தன்னையே காட்டுந் தடப்பெருமலையெனுஞ் சோண சைலனே கைலைநாயகனே.

((இ - ள்.) எல்லாவுயிர்க்கு சகலம் எலாம் காட்டும் தரணி ... இருளில் - தன்மேல் இவர்ந்தாருக்கு உலகையும் அதன்க ண்ணுள்ள பொருள்களையெல்லாங் காட்டும் மலைகளோடு மாறு பட்டு, அடியவர்களுக்குத் தன்னையே காட்டும் மலை எனும் சோண சைலனே கைலைநாயகனே - ஐம்புலன்களைத் தந்தார்க்குப் (புறப் பொருள்களையுங் காட்டாது) தன்னிலையொன்றுமே காட் டியருளும் என்று அடியவர்கள் துதிக்கும் சோணசை லனே! கைலைநாயகனே!, நின்னையே நோக்கி விடாத கண் புல னும் - தேவரீரையே தரிசித்துக்கொண்டு அதில் விலகாதுள்ள கண்ணிந்திரியமும், நின்னையே நினைக்கும் நெஞ்சகமும் - தேவ ரீரையே தியானிக்கு மனமும், நின்னையே துதிக்கும் நாவும் -

தேவரீரையே வாழ்த்தும் வாக்கும், என்று அருளின் திருவடியின் வைத்து அருள்வாய் - எக்காலம் அளித்தருளி உமது திருவடியின்கண் சேர்த்தருள்வீரோ? (அறியேன்.) எ - று.

ஏகாரம் நான்கும் பிரிநிலையோடு தேற்றம். கட்புலனென்பது கண்ணிற்குரியவிஷயத்தை யுணர்ந்தாது என்டுக் கண்ணிந்திரியத்தையே உணர்த்திற்று. இம்மையில் திரிகரணங்களையும் உம்முடைய வாக்கி, மறுமையில் திருவடிப்பேறு அளித்தல் வேண்டுமென்பது கருத்து. திருவடிப்பேறே பரமுத்தியாதல் பற்றி வாகீசமூர்த்திகளும் * "சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங் - கிறுமாந் திருப்பன் கொலோ" என்றருளிச்செய்தார். அரணி - மலை. தன்னையே காட்டலாவது - ஏகநிலையுணர்வை உண்டாக்கிய பதிநிலையை அறிவித்தல். (அ௰)

மின்வணங் கவருஞ் செஞ்சடாடவியும் விளங்
கொளி மார்பும்வா னுலச, மன்வணங் குறுமின் பதா
ம்புய மலருமனங்குடி யிருக்குநா ளுளதோ, பொன்
வணம் புரியுங் காகமென் றனைப்பொற் பொருட்
பென வடைபொரு பனைத்துந், தன்வணம் புரியும்
பொருப்பெனுஞ் சோணசைலமே லைகலைநா யகனே

(இ - ள்.) பொன்னை யொருப்புக் கற்றொன்றில்லை போல வண்ணம் புரியும் என - பெருமையை யுடைத்து (தலைமையுடைத்து) சக கைப்புள்ளொன்றிய பெய போன்ற மயமாச் செய்யும் (இக் மேரு வியப்போ? வியப்பன்று:) என்று, அடைந்தோருள் அனைத்தும் தன்வண்ணம் புரியும் பொருப்பு எனும் சோணசைலமேல் ஐகலை நாயகனே - (தன்னை) அடைந்த பொருளனைத்தையும் தன் மயமாக்கும் மலையிதென்று அமரர்கள் கொண்டாடப்பெறுஞ் சோணசைலரே! ஐகலைநாயகரே! மின் வண்ணம் கவரும் செம் சடாடவியும் - மின்னலினிறமும் மிகவிரும்பும் செவ்விய

* தேவாரம் திருவங்கமாலை - கக.

சடைக்காடும், விளங்கு ஒளி மார்பும் - பிரகாசிக்கின்ற காந்தி பெற்ற திருமார்பும், வான் உலகம் மன வணங்குறும் நின் பதாம்புயம் மலரும் - விண்ணுலகத்தவராலும் மிகவும் வழிபடப் பெறும் தேவரீருடைய திருவடித் தாமரையலர்களும், மனம் குடி இருக்கும் நாள் உளதோ - அடியேனது உளத்தில் அமர்ந் துறையுங் காலமும் உண்டோ? (அறியேன்.) எ-று.

கவாதல் - வேட்கை பெருககம். மின்னொளியையும் தன்வயமாக்கும் எனலுமாம். மின்வணம் வானுலகமென்புழி உயர்வு சிறப்பும்மைகள் தொக்கன. உலகம் - இடவாகுபெயர். மன பிகுதிப்பொருள் தருவதோ ரிடைச்சொல். உம்மைகள் எண்ணின்கணின்ற உயர்வுசிறப்பின. எதிரவைநதிஇயவென ஏனைத் திருவுறுப்புக்களையுங் கோடலும் ஒன்றும். வண்ணம் மூன்றும் இடைக்குறைந்தன. சடாடவி பதாம்புயம் வடமொழிச் சந்தி. பொன்னிறத்ததும் கருநிறத்தவுமாகிய பறவைகள் தன்னையடைந்த இடத்து மேருவானது தன்னிறப்பறவைகளை வேற்றுமைப் படுத்தும் ஆற்றலின்றிக் கருநிறக்காக்கையை பொன்மையே தன்னிறத்ததாக்குமே, சிவசொரூபமாகிய இச்சோணசைலமோ தன் பக்கப்பொருள் ஒன்று மின்மையின, அணைந்த உயிர்ப்பொருளெல்லாவற்றையும் தன்மயமாக ஆக்குவிக்குமென்பதாம், 'அடைபொருளெல்லாந் தன்வணமாம் புரியும்' என்றார். இக்கருத்தே பிறரும் * "பொன்னிறப் பறவுங் கருநிறக் காக்கையு-மென்னுமா விமையவரை யடைந்தருந் தாந்துழி - நிறுத்திப் பறவைக்கு மொருநிற மெல்லாம் - நிறமவை புரிந்ததுண்டோ" என விசுந்திருப்பது காண்க. காகமொடு பொற்பறவைகளையொப்பது காக்குமுதலிய வற்றையேய மைப்பது மெய்யுரையையும் வேற்றுமைசெய்யுமாற்றல் உளதன்றெண இழிவுசிறப்பு ... அடைந்தோர்த்துமெனபதில் உம்மை முற்றும்மை. தன்வணம்புரிதல் - தற்சொரூபமாக்கல். (௬௩)

* திருவையாறு மும்மணிக்கோவை

குருமணி மகுடம் புனைந்துல காளுங் கொற்றவ
ராதலி னென்கட், கருமணி யெனுநின் றிருண்டிக் குற்
றேவல் கருதியாட் பட்டிட லினிதே, பெருமணி
விசும்பி னுச்சியி னெழுந்த பிள்ளையாங் கதிரென வரா
வம், தருமணி யொளிவெண் மதியுறுஞ் சோண சை
லனே கைலைநா யகனே.

(இ-ள்.) பெருமணி விசும்பி[illegible] [illegible]
கருமையுடைய ஆகாய[illegible] [illegible]
கதிரென - [illegible]
அரவம் [illegible] சோண[illegible]
கைலைநாயகனே [illegible]
வெள்ளிய [illegible]
நாயகனே, [illegible]
ரவா [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
முதல் [illegible] - று.

[illegible] இது [illegible]
[illegible] விளக்குமாறு[illegible] [illegible]
பொருமை [illegible]
மணியெனு[illegible]. [illegible]
பெருமை[illegible] [illegible]
கொள்ளுதல் இன்மையு[illegible]
வையை [illegible]

* கோயினான்மணிமாலை - உ.

டிகறெறும் பாரத்தில் ராலதிற் பைம்பொற் கொன்றைத் தொடைகொண்ட வாசடை யம்பலத் தான்றெண்டர்க் சேவல்செய்து, கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு வாழ்தல் களிப்புரை ர்தே" எப்பதனுனுமறிக. அரவச்செம்மணியொளி பாய்தலின் சந்திர [illegible] சிவந்து இளஞ்சூரியனெனவிளங்காநிற்ட னைபது. மணிவிசும்பு [illegible] ரிசொரியும் மேகமுமாம். கொற்றவ மகாற்றமெனை [illegible] யா [illegible] பிறந்தபெயர். (கரு)

சிம்புளாய் மடங்க லெறும்வலி கவர்ந்த திறலுமுப் புரஞ்சுடு விறலும், பம்புபா தணர்த்தன் முடிகளைந்திட்ட வாளுமேத் தினர்க்கிட ருணர்தோ, வம்பர்மா மதியி லங்கையி லிருந்த மறைமுதல் திருட்டவாரமுல்வான் பயபார வெருக்து நின்றபுகழ் சோண சைலனே னை [illegible] யகனே

(இ - ள்.) அம் [illegible] இருந்த [illegible] திருக்கர [illegible] பாலகை [illegible] தேயிற் குறி [illegible] இரு [illegible] [illegible] [illegible] முடி [illegible] திரிபுரத்தைத் [illegible] அம்புய ஆதனர் [illegible] முடி [illegible] இட்ட [illegible] தாமரை ஆசனர் [illegible] [illegible] உளதோ - (அ [illegible]) [illegible] துன்பம் உளதாக் கொல்லோ? ([illegible] காது) எ-று.

சிவபெருமான் கொண்ட இருட்கோகங்கு [illegible] மூர்த்தங்களும் கோரமூர்த்தங்களை இ [illegible], மிசிரமூர்த்தங்களைச்

சித்தியெய்தற்கும், சாந்தமூர்த்தங்களைச் சாந்தியெய்தற்கும், வழிபடவேண்டுமென்பது நூற்றுணிபாகலின், அங்ஙனங்கூறிய உக்கிரமூர்த்தங்களின் வெற்றிகளைத் துதிக்கில் இடரெய்தா வென்பார் 'இடருளதோ?' என்றார். இதனை, * "கோரமுடன் மிச்சிரஞ்சாந்தமென மூவகையாக் குலவு மண்ணலேவுபெறு மூர்த்தங்களிவற்றெய்தியவெம் பாவகோயிரிக்க வேண்டிற் - சாமருவுங் கோரத்தைச் சித்தியெய்த வேண்டின்மிச் சிரத்தைச் செவ்வே - யாதருசாந்தியை வேண்டிற் சாந்தத்தைப் பூசனைசெய் கருதவேண்டும்." என்பதனாலுமறிக. மிச்சிரம் - கோரமுஞ் சாந்தமுங் கலந்தன. சாத்திரனிடத்துள்ள விளங்கத் தைமுயலென்றும் மானென்றுங் கூறுவது கவயமாக தலால் சிவபெருமான் றமதுகரத்துள்ள [illegible] தம்மெய்க்காவலாளரும் [illegible] விரகருஞ்சித சாத்திரனிடத்துப பார அப்[illegible] [illegible] த்தனனெனக. † "எறும் வலியாகும்" என்பது [illegible] திரா[illegible]லின், ஏறு வலி என்க. [illegible] மம் தியாம். [illegible] மூண்ட [illegible] வலின இருட்ட[illegible] இருட்ட [illegible]. (௰௧)

அஞ்சலென் றபயக் கொடியமேனை [illegible] பரிப்ப [illegible] நஞ்சமுண்ட [illegible] மெய்ன் றனது [illegible] மிசைப்பவரு [illegible], வஞ்ச[illegible] கரன்சொன்ன [illegible] கொண்ட [illegible] துற்றுங், அஞ்சவெய் [illegible] நின்றிருஞ் சோணசைலனே கைலைநாயகனே.

(இ - ள்.) [illegible] இளைய [illegible] - விநாயகக்கடவுள் இளைய பிள்ளையாரு [illegible], வருசம் கொண்டு [illegible] கொண் வாது இன்[illegible] [illegible]

* காமிகாகமம் ஞானயோக [illegible] அத்தியாயம் [illegible].
† தொல்காப்பியம் சொல். [illegible]

ணடு பிரதக்ஷிணஞ்செய்யத் துணியும் வாதம் இன்னமும்ஒருமு
றை நேரினும், தஞ்சம் என்றிடாது நின்றிடும் சோணசைலனே
கைலைநாயகனே - (வலம்வருதல் முன்போல) எளியதாகுமென்
றுதபடி அகன்றுபருத்துள்ள சோணசைலரே! கைலைநாயகரே!
உனது நல்கனார் - தேவரீருடைய செவ்விய திருக்கழுத்தை,
நஞ்சம் உண்டு இருண்ட கபாடம் என்று - விடத்தையருந்திக்
கறுத்த கழுத்து (என்று), உலகில் இகழ்பவர் உளரோ -
உலகத்திலே இகழ்ச்சி கூறுவாரும் உண்டோ? இல்லை (அது
போலவே அடியனது சேர்க்கையுடைமையைப்பற்றி அடியவரை
இகழ்தல் செய்யாராகலின்), பயனாம் கொடியனென்றலை நின்
அடியரில் கூட்டுக - பயனற்றவனாகிய என்னையும் உமதுதிருத்
தொண்டர் கூட்டத்திற் சேர்த்தருளுவீராக. எ - று.

கொடிய விடமுண்டமையினாகிய உமது செவ்விய கழுத்தை
இகழ்து, உலகினர் [illegible] இக்கழுத்தை அத
[illegible], கொடியே
யுடைமையேனாய உமது செவ்விய அடியவர் இகழாது, நீச
மை படைத்த உலகத்தினையும் இக்கழுத்து அடக்கி ஆண்
டமையறிய புகழ்வாராகலின், அடியவரிடத்துக் கூட்டுகவென்
றெண்ணத் திரண்டமொருள் உண்மைநயம் வைத்து முன்னைப்போற்
றோட்சக்கரத்திற்கொண்ட நாயனாரிடமே பெருமானு
ரைத்தருளியது, அங்ஙனமே [illegible] தருணைத்
திருவண்ணாமலையை வலம்வருதல் உலகை வலம்வருதலாமென விநா
யகக்கடவுள் திருத்து வலம்வருதலை முன்னோர் துணிந்தா
ராகலின் 'வஞ்சகமொன்று' என்றும், மெய்யுருவாகிய இப்பெரு
மானை வலம்வருவாருள அவர் மயலின்றி உலகையே வல
மாய் வருவோராவர், அவ்வருஞ்சம் இன்றிப்போயதாகலின்
'தஞ்சமென்றிடாது நின்றிடும்' என்றுங் கூறினார். வஞ்சம்-கப
டம். தஞ்சம் - எளிமை..

அணிந்திடு கலனுஞ் சாந்துமொண் டுகிலு மரிவை யர் போகமும் பெறுவான், றணிந்திடு மனமென் றுனைப்பொரு ளாகத் துணியுமோ வறிந்திலேன் றமி யேனை, பணிந்திடு மயனைமால பெருமைக ளினைத்தும பறவைசொனை டெழுதலாப் புமுடிந்து, குணிந்திட நிமி ர்ந்து நின்றிடுஞ் சோணசைலனே கைலைநாயகனே.

௪

(இ-ள்) [illegible]

[illegible]

[illegible]

சைலனே என்றுங் கூறுவர். அன்றியும், சிவபெருமான் திருவுருக்கொண்டகாலத்தும் வாகனமாக ஏனையவற்றைக் கொள்ளாது தருமதேவனையே கொண்டுவிளங்கும் சிறப்புடைமைதோன்ற, * "மாலைக் கலுழனேறுயோனெனத் தாங்க ஏற்றிவர் நோன்மையன்" எனப் பிறரும் இவ்வாசிரியர் விதந்திருப்பதும் உணர்க. முடிந்து-முடிதலால். வினையெச்சந்திரிபு.

பூவுறு தடமு மதியுறு விசும்பும் பூணுறு முறுப்பு
நின் றுலகாள், கோவுறு நகரு மென்னவென் மனநின்
குறைகழன் மருவுநா ளுளதோ, மேவுறு மனைசெய்
பவர்கொள மரந்தாங் கோங்கல்க ணாணவுன் னினார்
க்குத், தாவுறு முயர்வீ டளித்தருள் சோண சைல
னே கைலைநா யகனே.

(இ-ள்.) ஓவுறும் மனை செய்பவர் கொள - (பந்தத்திற்கு ஏதுவாதல்பற்றி அறிஞராய் வெறுத்து) அகற்றப்படும் வீட்டினைக் கட்டுவோர் கொள்ளுமாறு, மரம் தாங்கு ஓங்கல்கள் நாண - மரங்களைத் தாங்கிநிற்கின்ற மலைகள் வெட்கமுறும்படி, உன்னினார்க்கு உறும் உயர்வீடு அளித்தருள் சோணசைலனே கைலைநாயகனே - நினைந்தவர்க்கு (எல்லாராலும்) விரும்பப்படும் உயர்ந்த வீட்டினைப் பாலித்தருளுஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, பூ உறு தடமும் - மலர்களையுடைய நிறைகுளமும், மதி உறு விசும்பும் - சந்திரனையுடைய ஆகாயமும், பூண் உறும் உறுப்பும் - அணிகளணிந்துள்ள அவயவங்களும், நின்று உலகு ஆள் கோ உறு நகரும் என்ன - (நீதிநிலை) நின்று உலகினை ஆட்சிசெய்யும் அரசனையுடைய நகரமும் போலப் (பொலிவுறுமாறு), என் மனம் நின் குறை கழல் மருவும் நாள் உளதோ - அடியேனது மனம் தேவரீருடைய ஒலிபெற்ற கழலணிந்த திருவடியைப்பெற்று வாழும் காலமும் உண்டாங்கொலோ? (அறியேன்.) எ - று.

தடமும் விசும்பும் உறுப்பும் நக்ரும் முறையே பூவும் மதியும் அணியும் கோவும் பெற்றாலன்றிப் பயன்பெறுவாறுபோல, என்மனம் தேவரீர் திருவடிகளைப் பெற்றாலன்றிப் பயனுறா தென்பதூஉம், மாறுதலையோங்கல்கள் இயிர்தமாசையையளிக்கும் ஆற்றலும் தமக்கின்மையால், அதற்குரிய கருவிகள் பலவற்றுள் மரபொன்றையும் வேண்டியோ கொள்ளத் தாங்காகிற்ப, இச்சோணசைலம் தன்னைச் சிந்தித்த துணையானே உபரந்த வீட்டையேயளித்தல் காண்டலின், தாட் நாணுவ ஆயினவென்பதூஉம் கருத்தாகக்கொள்க. கழல் - தாளணியாகும்பெயர். ஒவுறும் தாவுறும் எனடன - செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்துவதும் பல்விகுதிகள் தொக்குநின்றன. பட்டுறுக்கோட்டாகாது சினையுளி லழிக்கொதாழிற்ப யபெயரைய, பற்றுக்கோடாய் எனவாறு நிலைபெறும் விடையும், இவற்றிற்கு மாறன் கோடலும் ஒன்று. இங்ஙனங்கொளுங்கால் தாய் - பற்றுக்கோடென்க.

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த செல்வமு மில
லில்வாழ் பவர்க்குப், பேரணி கலைமேல் புதல்வருங்
கதியும் பெறத்துதிப் பவர்க்கருள் பவனீ, நேரணி
கதியை மறந்தவர் கண்டு நினைந்துற மிக்கபே ரரு
ளாற், றாரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண சைல
னே கைலைநா யகனே.

(இ-ள்.) அணி கதியை மறந்தவர் - சிறப்பமைந்த முத்தியென்பது (ஒன்றுண்டென்னும் சிந்தனையுமில்லாது) அதனை மறந்தவரும், நேர் கண்டு நினைந்து உற - எதிர்கண்டவுடனே அச்சிந்தனையுடையராய்த் தியானித்து அம்முத்தியையடையும்படி, மிக்க பெரு அருளால் தாரணி முழுதும் தோன்றிடும் சோணசைலனே கைலைநாயகனே - மிகவோங்கிய திருவருள்விசேடத்தால் உலகமுற்றுங்காண விளங்காநிற்குஞ் சோணசைலரே! கைலைநாயகரே!, சீர் அணி புகழும் கல்வியும் சிறந்த செல்வமும் - மேன்மையமைந்த கீர்த்தியும் வித்தையும் (அரசுரிமை

வநாமோச்சாரணைந்தால் விலகுமாகலின் சிவசிவ என்றுச்சரிப் பீராக. எ-று.

இதனை, "மூவுலகுஞ் சிவநாமந் தனக்கு நேரா மொழிவதனு மொன்றுண்டோ வரையின் மாரன் - மேவியிருந் தருந்தவஞ் செய் புரியும் பேறு மிக்கவித்தம் இணையாக விளம்பலாமோ" "சம்புவின்நாமம் பெயராகு மிரண்டெழுத்து மொருதரஞ்சாற் றிடிற்கோடி வர்த்தர நீங்கி, யம்பருஞ்சோ வரியமுத்தி சேர்வா" என்னும் சிவரகசியத்தானும் சாந்திராயணமுதலியவற் றைச் சிவதருமோத்தரம் புரிகாரவியலானுமுணர்க. (௪)

விம்மி தெய்வன விளங்கும் திருநுதல்
வல்லி பங்கன் மலரடி காணிய
கல்வி நல்குங் கருத்து மகிழ்வுறுஞ்
செல்வ நல்குஞ் சிவசிவ வென்மினே.

(பொ-ள்.) பராவதிசமேதராகிய பரசிவனது திருவடி காண்டற்கு ஏதுவாகிய சாஸ்திரவுணர்ச்சியையும் உவத்தற் கேதுவாகிய ஐசுவரியங்களையுந் தருமாதலின் சிவசிவ என் றுச்சரிப்பீராக. எ-று.

இதனை, "பரசிவ நாமம் விரும்புஞ் செல்வ மெல்லா மேவுநின்ற விடமாமுயல் வரைந்தக் - தருமிடமா மேலான முத்தி பெறத் தாமிருக்கு மிடமெனவுஞ் சாற்றலாமே" என்னும் சிவ ரகசியத்தானுமுணர்க. (௫)

தீய நாளொடு கோளின் செயிர்தபு
மாய கன்றிட நாளுறவைக் கூறிய
வாயுள் பல்கு மறம்வளாக் குறும்
தீய தீருஞ் சிவசிவ வென்மினே.

(பொ-ள்.) தீமையுடையனவாகிய நக்ஷத்திரங்களோடு நவக்கிரகங்களின் தீங்குகளும், பிறவியாகிய எத்தகையநோயும் விலகும், ஆயுசும்விருத்திக்கும், தருமமும்பெருகும், மற்றைக் கொடுமையினையுடையனவும் விலகுமாதலால் சிவசிவ என்றுச் சரிப்பீராக. எ-று.

இதனை, "நமவொன்று நாமத்தை நாவி லொடுக்கிச் - சிவவெ ன்று நாமத்தைச் சிந்தையுள் ளேற்றிற் - பவமது தீரும் பரிசுமதற்று - லவமதி தீரு மறும்பிறப் பன்றே" என்னும் திருமந்திரத்தானுமுணர்க. (சு)

வருந்தி யாற்றி வளர்த்த கதிர்த்தலை
பொருந்து வான்பயிர போற்றுநா போலவே
விரிந்த வேணியில் வெண்மதி சூடிபின்
திரிந்து காப்பன் சிவசிவ வென்மினே.

(போ - ரை.) மிகமுயன்று உண்டாக்கிவளர்த்த கதிரைத்தலையிற்கொண்ட பயிரை அகலாதுகாக்கும் உழவர்போலச் சிவபெருமான் (அவரைப்) பின்றிரிந்து காத்தருளுவராதலால் சிவசிவஎன்றுச்சரிப்பீராக. எ-று.

இதனை, "பண்ணவ னுருவாம் பஞ்சப் பிரமங்கள் பழுதொன் றில்லா - வண்ணலஞ் செழுத்தின் மன்னி - யடைவினின் மரும் மந்த - நண்ணுமஞ் செழுத்துக் கூறு நம்பனே வினைக ளெல்லாங் - கண்ணறக் களைந்து மாற்றிக் கனிந்தருள் புரிவ னன்றே" என்னும் வாயுசங்கிதையானு முணர்க. வளர்த்தபயிர்மாலை இயையும். வெண்மதிசூடி - வினைக்குறிப்புப் பெயர். (எ)

முந்தை யோர்சொன் மொழிந்து சிவனென
சிந்தை தானச் சிவனை நிகழ்த்தினும்
வந்த தீவினை மாற்றுவ னுதலால்
சிந்தை யோடு சிவசிவ வென்மினே.

(போ - ரை.) முன்னர்ச் சிவனென்னு நாமத்தையுச்சரித்துப் பின்னர் அச்சிவபெருமானையிகழினும் அந்நாமத்திற்குரிய அப்பெருமான் உச்சரித்தவனது தீவினையையொழித்தருளுவார்; அது அத்தகைய மேன்மையுடையதாகலின் மன்வொற்றுமையோடு சிவசிவவென்று அதனையே உச்சரிப்பீராக. எ-று.

தக்கனைக்கூறியேனோர்சிரசைக் கொய்வதேயல்லது அவனாயுக்கு வேறுபரிகாரம் இல்லென்பது நாற்றுணிபாயினும், இவகா

மோச்சாரூனும் அத்தன்மையபாவத்தையும் முற்றுமொழித்து நீத்தியும்பாலிக்க வல்லதாதல்பற்றி, அந்நாமத்திற்குரிய பெருமான் தம்மையிகழ்ந்த தவறையும்நோக்காது அதனாலெய்திய தீவினையையும் மாற்றுகிற்பனென்பது கருத்து. இதனை, "விரியும் வேதத்தின சாரமாய் விரித்தெடுத்த துணைத்தற் - கரிய வுட்பொருளுடையவா யழிவிலா முத்தி - பரிவினைருகரன் களிக்குமைந்தெழுத்தினைப் பகாதற, குரிய நாவினார் முத்தியீ டுறுமெழூஉ குவரோ" எனனும் இலிங்கபுராணத்தானுமுணர்க. ()

ஈச னேனும்வா னீசா ரிகழ்ந்திலா
னீச னேனுஞ் சிவசிவ வெனகிலா
னீச னேயவன் றியமபுரு கினறுப
மீத றாயகள் சிவசிவ வெனமினே.

(பொ-ரை.) சிவநாமத்தை யுச்சரிப்போர் புலையராயிருப்பினும் தேவாதிபராவர், உச்சரியார் தேவாதிபராயிருப்பினும் புலையரேயாவர் எனவறிந்து, உண்மை யொருவனை உபதேசிக்கு [illegible] சம்ப, சிவசிவ என்றுச்சரி [illegible] ராக. எ-று.

இதனை, "சிவசிவவென்கிலா [illegible] பாளா - சிவசிவ வென [illegible] ருந்த - சிவ [illegible] தேவருபாவா - [illegible]" [illegible] திருமந்திரத்தானு [illegible] (க)

[illegible] சிவசிவ [illegible]
[illegible]
[illegible] றுவன
[illegible] மிசினே.

(பொ-ரை.) சிவநாமோச்சா [illegible] யவா திருவடிகளை [illegible] காசிற்பான், இது சத்தியமாக [illegible] சிவ [illegible] ராக. எ-று.

இதனை, "நெஞ்ச [illegible] நெஞ்ச மாகச் சரிப்பவ ராயினும் - அஞ்ச [illegible] முனைப்போ - வஞ்சக நெஞ்சமமன் [illegible] நெஞ்சமாம்" என்று இங்ஙனம் இயமன் காலனுக் குணர்த்தியிற [illegible] உபதேசங்காண் [illegible] த்தானு முணர்க. (கo)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

இழிவுறுபுன் கருமநெறி யினனெனினுங் கொலைவேட னென
னும் பொல்லாப், பழிமருவு பாதகனெனி னும்பதித னெனினு
மிகப் பகரா நின்ற, மொழியவற்று ளவசனாய்ச் சிவசிவவென்
றொருமுறைதான் மொழியி லன்னோன், செழியகரு மலரடி
யின் றுகளன்றோ வெங்கள்குல தெய்வ மென்ப.

(பொ-ள்.) எத்தகைய இழிஞராயினும் தாம்கூறும் வாக்கியங்களுள்ளே தம்வசமிலராய் ஒருதரம் சிவசிவ எனக் கூறின், அன்னோர் திருவடித்துகள்களே எமதுகுலதெய்வமென்பர் அவ்வாதகைமையுணர்ந்த அறிஞர். எ-று.

சிவசிவவென்றது இரக்கக்குறிப்பின்கண்ணும் வருமாகலின் அங்ஙனம் அபுத்திபூர்வமாக மொழியினுமென்பார் 'பகராநின்ற மொழியவற்றுள் அவசனாய்மொழியினும்' என்றார். "உள்ளுடையான் சிவனெனவே பாவக்கிளையே ஞானக்கலையா புலகத்தி லொருவரில்லை - பனுமனைத் தினியமுருப்புமய டிடாவங்க ன் பண்ணியதல் லாற்றருமஞ் செய்திலாயே - யிந்நிலையுற் றானை யிறக்குங் காலர் தனனி னினைவ சிவ நாமங்கூற மேற்று யா - லன்னதனாற் செய்பாவ மெல்லாநீங்கி யயபுவியிற வம் முத்த னென்னவுற்றாய்" என விசுவாட்ட தாதையர் புதிரமுலத்தரொருவனாத் திருமால் வியாதிருட்டது சிவரகசியத்தானு முணர்க. என்ப வென்பதை எனப்படுமென வெளக்கொண்டு நூலாசிரியர் கூற்றாக்கலும் ஒன்று. அதிபாதகராயினோரும் சிவநாமோச்சாரணத்தால் அப்பாதகங்களினீங்கிச் சிவகதியெய்திமையைப்பற்றிச் சிவரகசியம் உபதேசகாண்டம் இலிங்கபுராணம் வாயுசங்கிதை முதலியவற்றுள்ளும் தலபுராணங்களுள்ளும் பற்பலசரித்திரமுள்ளன; உய்த்துணர்க: விரிக்கிற்பெருகும். ()

வநாமமகிமையுரை முற்றிற்று.

பரிசோதனைபத்திரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
[illegible]	[illegible]	[illegible]	மெரு	மேருப்
[illegible]	[illegible]	[illegible]	பாலிப	பாலிப்
[illegible]	[illegible]	[illegible]	றிடிவடி	திருவடி
[illegible]	[illegible]	[illegible]	கலைலை	கலை
[illegible]	[illegible]	[illegible]	குறயோ	குறவா
[illegible]	[illegible]	[illegible]	இருள	கலை இருள்
[illegible]	[illegible]	[illegible]	வயிறறி	வயிற்றறி
[illegible]	[illegible]	[illegible]	யோசனையில்	யோசனையின்
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	ஐஞ்சுருப
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	யாதலால்
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	கொடுத்து
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	தாழ்போல
[illegible]	[illegible]	[illegible]	இருவா	இருகோக்
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	வருக்ச
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	டுணைத்தி
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	னணிருதா
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]

௧௨-வது செய்யுளின் விசேடவுரையில் 'நயமாம்' இதில் அப் ... என்றும், ௨௬-வது செய்யுள் விசேஷவுரையில் மேகாஞ்சனியைப்போடி என்றும், ௩௬-வது செய்யுளுரையில் 'சாவடுமை' பூமியிலிறக்கி இருப்பவரை' என்றும், சொல்லும் மலர் கருவியாகுபெயர்; பாடலையும் மாலையையும் உணர்த்தலின்,' என்றும், ௮௭-வது செய்யுளுரையில் 'ஸ்ரீபஞ்சாக்கரங்களும்' இடம்பெற்ற என்மனத்தில் (வெ... வாக்குருவிபாக இருத்தலால், என்றும் திருத்திக்கொள்க.

விளம்பரம்.

இப்புத்தகம், சென்னை - முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதியில், புஷ்பரதசெட்டியார் கம்பெனியிலும், ரிப்பன் அச்சியந்திரசாலையிலும், சிதம்பரம் சைவப்பிரகாசவித்தியாசாலை உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ நா. சிவபாதச்செட்டியாரிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தபாற்கூலி பிரத்தியேகம்.

ஆ தையலுக்கு விலை அணா - ௫.
காலிகோ தையலுக்கு விலை அணா - ௬.